# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU


| மலர்–15, இதழ் – 4<br>Volume - 15, Issue - 4 | பங்குனித் திங்கள்<br>March 2024 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |
|---|---|---|---|---|





"Delivered by India Post"

www.indiapost.gov.in


PARVATHY
MULTISPECIALITY HOSPITAL
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
2018 முதல்
காலை -8 மணி
குடும்பத்துடன் காலை உணவு
மதியம்-2 மணி
முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
மாலை -8 மணி
குடும்பத்துடன் இரவு உணவு
திருமதி கீதா தனது தினசரி வழக்கத்தை தடங்கலின்றி தொடர்ந்தார்.
உங்களுக்கும் அதையே நாங்கள் உறுதியளிக்கிறோம்.
12 மணி
நேரத்தில் வீடு திரும்பலாம்
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
குரோம்பேட்டை: 24, ஜிஎஸ்டி சாலை, குரோம்பேட்டை, சென்னை - 600 044
ஒரகடம்: 405/5A ஜமுனாபட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம் - 602 105
Website: www.parvathyhospital.com
மேலும் தகவல்களுக்கு: 044 2238 2248



hotel saradharam chidambaram
ஓட்டல் சாரதாராமின்
35 வது ஆண்டு விழா
15.11.2023
செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு – குறள் (86)
பொருள் : வந்த விருந்தினர்களை மகிழ்ச்சியுடன் உபசரித்து வழியனுப்பி, வரும் விருந்தினரை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பவன், தேவர்களுக்கும் நல் விருந்தினன் ஆவான்.
THANK YOU
for being with us
நன்றி!
hotel saradharam chidambaram
Saradharam's LAKSHMI VILAS HERITAGE HOTEL
SENTOSA AT PONDICHERRY
saradharam residency kattumannarkoil
Incredible India

# குரோம்பேட்டை கார்காத்தார் சங்க ஆண்டு விழா

**24-12-2023**





சென்னை கார்காத்தார் சங்க முன்னாள் தலைவர்
**திரு .சபா.சிவகுமார்** அவர்கள் **வாழ்நாள் சாதனையாளர் விருது**
அண்ணா பல்கலைக்கழக முன்னாள் இயக்குனர் **முனைவர்**
**வே.பாலகிருஷ்ணன்** அவர்கள் வழங்க பெற்றார்





பார்வதி மருத்துவமனை குழும நிறுவன தலைவர்
**Dr .S .முத்துக்குமார்** அவர்கள் **வாழ்நாள் சாதனையாளர் விருது**
பிரபல ENT மருத்துவர் **Dr.M.செல்வகணபதி**அவர்கள் வழங்க பெற்றார்

ஆண்டு விழா சீரும் சிறப்புமாக நடைபெற உதவிய
அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறோம்

| | | |
|---|---|---|
| **S.Manohar** | **B.Thiyagarajan** | **R.Vasanthakumar** |
| President | Secretary | Treasurer |

முன்னாள் இந்நாள் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com




**Thiruvasantham**
PURE VEG

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)

# நங்கநல்லூர் வட்டார கார்காத்தார் சமூக நலச்சங்கம்
# தாய்லாந்து சுற்றுலா 19.01.24 - 23.01.24









## நங்கநல்லூர் வட்டார கார்காத்தார் சமூக நலச்சங்கம்
## தாய்லாந்து சுற்றுலா 19.01.24 - 23.01.24















# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**







தில்லை நடராஜர் திருவருளால், தில்லை நடராஜர் பெருமானை தரிசிக்க வருகை தரும் யாத்திரிகர்களுக்கும், ஆன்மீக சுற்றுலா பயணிகள் மற்றும் சஷ்டியப்த பூர்த்தி, பீமரதசாந்தி, சதாபிஷேகம் போன்ற சுப நிகழ்ச்சிகளுக்கும் வரும் உறவினர்கள், சிதம்பரம் கனகசபை நகரில் 40 நபர் வரை தங்க ஏதுவாக A/c. வசதியுடன் கூடிய ரூம்கள் உள்ளன. மேலும் குழுவாக தங்குவதற்கு A/c. வசதி இல்லாத கூடமும் உள்ளது. எங்கள் விடுதி பொதுமக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களையும் பெற்று வருகிறது. தாங்கள் வந்து தங்கி எங்களது உபசரிப்பினை ஏற்று மகிழுங்கள்.

**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**இதழின் உள்ளே....**

இயற்கை வேளாண்மை ........ 11
நட்சத்திரங்களும் மரங்களும் ........ 14
சங்கப் பலகை ........ 16
முப்பரிமாண அச்சுப்பொறி ........ 18
ஜோதிடம் அளித்திடும் மனோதிடம் ........ 23
சிறுவர் பகுதி ........ 26–29
மணமகன்/மணமகள் தேவை ........ 42–45
சங்க நிகழ்வுகள் ........ 49

**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**


ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

## ஏடு இட்டோர் இயல்

**வாசகர்களுக்கு எங்களது**
**உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.**



பிப்ரவரி 9–ஆம் நாளன்று நமது பாரதப் பிரதமர் திரு. நரேந்திரமோடி அவர்கள் 'பாரத ரத்னா' விருதுகளை அறிவித்தார். 1954–ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தியாவின் மிக உயரிய விருதான பாரதரத்னா, பாரதத்தின் உயரிய குடிமகன்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பொதுவாக ஒரு வருடத்திற்கு அதிகபட்சமாக மூன்று நபர்களுக்குக் கொடுக்கப்படும். இவ்விருது சில வருடங்களில் யாருக்குமே கொடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 1999–ல் நான்கு நபர்களுக்குக் கொடுக்கப்பட்டது ஒரு முன்னோடியாகும். 1999–ஆம் ஆண்டு திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன், திரு. கோபிநாத் போர்தோலாய், பண்டிட் ரவிசங்கர் மற்றும் பொருளாதார நிபுணர் அமர்த்யாசென் ஆகிய நால்வருக்கு பாரதரத்னா விருது வழங்கப்பட்டன.

2019–ஆம் ஆண்டிற்குப் பின் இவ்வருடம் இவ்விருது 5 நபர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் முன்னாள் பிரதம மந்திரியும், பொருளாதார மாற்றங்களுக்கு வித்திட்ட திரு. P.V. நரசிம்மராவ், முன்னாள் பிரதம மந்திரியும், விவசாயியுமான திரு. சரண்சிங், பீகாரின் முன்னாள் முதலமைச்சர் திரு. கர்பூரிதாக்கூர், இந்தியாவின் விவசாய புரட்சிக்கு வித்திட்ட வேளாண்மை விஞ்ஞானி திரு. M.S. சுவாமிநாதன் மற்றும் அயோத்தி ராமர் கோவில் எழுப்பப்பட ரதயாத்திரை மேற்கொண்ட முன்னாள் துணை பிரதம மந்திரி திரு. L.K. அத்வானி ஆகியோர் ஆவர். கும்பகோணத்தில் பிறந்த திரு. M.S. சுவாமிநாதன் அவர்களுக்கு இவ்விருது கிடைத்ததில் நாம் பெருமை கொள்கிறோம்.

பிப்ரவரி, மார்ச் என்றாலே மாணவர்களுக்கும், அதற்கும் மேலே பெற்றோர்களுக்கும் மிகுந்த பதற்றத்தை அளிக்கும் தேர்வுகள் நெருங்கி விடும். தேர்வுகள் பிப்ரவரி மாதத்தில் தொடங்கி, மாரச் முதல் வரை அனைவரையும், வேறெதிலும் நாட்டமின்றி செயல்பட தூண்டுகின்றன. கார்காத்தார் ஒப்புரவும் நமது குழந்தைகள் மனதை ஒருமுகப்படுத்தி, படிப்பில் முழுக் கவனத்தையும் செலுத்தி, பதட்டமின்றி தேர்வுகளைநன்முறையில்எழுதி,அதிகமதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற வாழ்த்துகிறது. நமது மாணவச் செல்வங்களுக்கு நமது கார்குலத்தின் நல்லாசிகள்!

மார்ச் 8–ஆம் தேதி மகளிர் தின விழா உலகம் எங்கும் கொண்டாடப்படுகிறது. நம் குல மகளிருக்கு கார்காத்தார் ஒப்புரவின் மகளிர் தின நல் வாழ்த்துக்களைக் கூறிக் கொள்வதில் சென்னை கார்காத்தார் சங்கம் மகிழ்ச்சி கொள்கிறது.

# சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர், 10 ஆவது தெரு, சூளைமேடு, சென்னை–600094.

அன்புடையீர்! வணக்கம்,

வருகின்ற மார்ச் மாதம் 28–ஆம் நாள், 28–03–2024, வியாழக்கிழமை மாலை 4.30 மணி அளவில், சென்னை கார்காத்தார் சங்க வளாகத்தில் விளக்கு பூஜை நடைபெற உள்ளது. பூஜையில் கலந்து கொள்பவர்கள் தங்களின் பெயர்களை மார்ச் 22, (22–03–2024) வெள்ளிக்கிழமைக்குள் பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். முதலில் பதிவு செய்வோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அதிகபட்சமாக வளாகத்தில் 60 நபர்கள் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விளக்கு பூஜை முடிந்ததும் சிற்றுண்டி வழங்கப்படும்.

நன்றி!

கைலை. சண்முகம்,
செயலாளர்

பூஜைக்கு எடுத்து வர வேண்டிய பொருட்கள் :

1) குத்துவிளக்கு, 2) துணை விளக்கு, 3) சூடத்தட்டு, 4) மணி, 5) பஞ்சபாத்திரம், உத்தரணி

பின் குறிப்பு : கார்கள் நிறுத்துவதற்கு போதிய இடவசதி இல்லாமையால், அவரவர்கள் தகுந்த ஏற்பாடு செய்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

விளக்கு பூஜை குறித்து தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் :

திருமதி. R. குந்தவி – 9840488823, திருமதி. வனஜா இளங்கோவன் – 6369291286

# ஓர் அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25ஆம் தேதிக்குள் அனுப்பபடவேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் கீழே சங்கத்தின் தலைவர் / செயலரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையுடனும் அனுப்பப்படவேண்டும்.

- ❖ செய்திகள், கட்டுரைகளை கூட்டவோ, குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- ❖ சங்க விழாக்கள் பற்றிய செய்திகள் சுருக்கமாகவும், தெளிவாகவும், முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்கள் கையொப்பத்துடன் அனுப்பப்படவேண்டும்.
- ❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- ❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- ❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

***அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,***
***எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.***
***என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.***

*– கார்காத்தார் ஒப்புரவு*

## இயற்கை வேளாண்மை.

இயற்கை வேளாண்மை பற்றி விவசாயிகள் மட்டுமின்றி எல்லோரும் அறிந்து கொள்வது நல்லது. இது இன்றைய சூழலுக்கு மாற்று வழியானதாகவும் அவசியமானதாகவும் உள்ளது.

வேளாண்மையில் செயற்கையான வேதிப் பொருட்களை பயன்படுத்தாமல் இயற்கையோடு இணைந்து வேளாண்மை செய்வது இயற்கை வேளாண்மை ஆகும். அதாவது இயற்கையின் போக்கில் விவசாயம் செய்வது ஆகும்.

இம்முறையைப் பயன்படுத்துவதால் மண், நீர், காற்று மற்றும் ஆகாயம் ஆகியவை பாதுகாக்கப்படுகின்றன.

பயனீட்டாளர்களுக்கும் உடல்நலத்திற்கேற்ற உணவு கிடைக்கிறது. முக்கியமாக நாம் நமது அடுத்த தலைமுறைக்கு மாசற்ற வேளாண் முறையை தருவதோடு ஆரோக்கியமான உணவுக்கும் வழிவகை செய்கின்றோம்.

கோ. நம்மாழ்வார் அவர்கள் இயற்கை வேளாண்மை கற்றல் :

தமிழகத்தில் பல லட்சக் கணக்கான மக்களின் மனதில் இயற்கை விவசாயம், இயற்கை வேளாண்மை என்று மிக பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர் திரு. கோ. நம்மாழ்வார் அவர்கள். கரூர் வானகத்தின் வாயிலாக பலருக்கு இயற்கை விவசாயப் பயிற்சி கொடுத்தவர். இவர் இயற்கை விவசாயம் பற்றி அதிகம் களம் இறங்கி கற்றுக் கொண்டது பாண்டிச்சேரி ஆரோவில்லில் இருக்கும் பெர்னார்டு என்ற ஒரு வெளிநாட்டு இயற்கை விவசாயி அவர்களிடம் தான். நம்மாழ்வார் அவர்களுக்கு உலக விவசாயம் மற்றும் மேற்கத்திய நாடுகளில் அதிகம் பயன்படுத்தும் விவசாய முறைகள் மற்றும் அது பற்றிய அங்குள்ள இயற்கை விவசாயம் குறித்த நிறைய புத்தகங்களை நம்மாழ்வாருக்கு அறிமுகம் செய்து வைத்தவரும் இவரே.

பாரம்பரிய விதைகள் மேலான காதல் :

இந்திய பாரம்பரியமான அனைத்து விதை ரகங்களை மிக அதிகம் நேசித்தவர் நம்மாழ்வார். பாரம்பரிய விதிகம் பற்றி பேச்சு வரும் நேரம் அல்லது பல நேரங்களில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்த மத்திய நெல் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநராக இருந்த திரு. ராதேலால் ஹெர்லால் ரிச்சார்யாவை எப்பொழுதும் குறிப்பிட்டுப் பேசுவார். ரிச்சார்யாவை அவர்கள் இந்தியாவின் 22,972 பாரம்பரியமான நமது நிலத்திற்கே உரிய நெல் ரகங்களை வெளிநாடுகள் சென்றுவிடாமல் பாதுகாத்தவர். இவர் முட்டுகட்டைகள் ஏற்படுத்தியவர் என்பதால் தனது மத்திய அரசு பணியையும் இழந்தவர். ரிச்சார்யா மற்றும் இந்தியாவின் பல இயற்கை விவசாய / விஞ்ஞானிகளின் கோரிக்கைகளைப் புறந்தள்ளி, அத்தனை பாரம்பரிய நெல் ரகங்களையும் பன்னாட்டு நிறுவனத்தின் கையில் 2003– மத்திய அரசு ஒப்படைத்தது.

இதனை அறிந்த நம்மாழ்வார் அவர்கள் மிக மன வேதனை அடைந்து இந்தியாவின் சிறந்த பாரம்பரிய விதைகள் நம்மை விட்டு சென்று விட்டது என மனம் வருந்தி கண்ணீர் விட்டு அழுதார்.

இயற்கை வேளாண்மை பற்றிய கொள்கைகள் :

கோ. நம்மாழ்வார் அவர்களை அதிகம் ஈர்த்தவை ஜே.சி. குமரப்பாவின் கொள்கைகள் தான். J.C. Kumarappa அவர்கள் இந்தியாவில் இயந்திரத்தின் பயன்பாடுகளை அறிமுகம் செய்த பொழுது, “இயந்திர டிராக்டர் மிக நல்லாத்தான் உழும்; ஆனால் இயற்கை முறையில் விவசாயம் செய்ய சாணி போடாதே” என்று சொன்னதை மிகுந்த நகைச்சுவை உணர்வுடன் தனது ஒவ்வொரு கூட்டத்திலும் குறிப்பிடுவார் நம்மாழ்வார்.

மேலும் விவசாயிகளிடம் சென்று பப்பாளி, கொய்யா, வாழை, நாவல் போன்றவை பயிரிடுங்கள். ஏன்னா, “ஆப்பிள் அரை கிலோ 60 ரூபாய். அதை விட அதிகம் சத்து இருக்கிற கொய்யா அஞ்சு கிலோ ஐம்பது ரூபாய். எதைச் சாப்பிடப் போறீங்க?” என்று நமது நாட்டின் பாரம்பரிய பழங்களையே வலியுறுத்துவார். மிக முக்கியமாய் ஆப்பிள், ஆரஞ்சு போன்ற அந்நியப் பழங்களைச் சாப்பிடுவதையும் இயன்றவரை தவிர்த்தே வந்தார்.

இயற்கை வேளாண்மையின் கூறுகள்:

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு செயலும் இயற்கை வேளாண்மையின் கூறுகளாகும்.

* நிலத்தை தயார் செய்தல்
* ஒற்றை நடவு முறை
* பயிர் சுழற்சி முறை
* கலப்புபயிர் பயிரிடுதல்
* இயற்கை பூச்சி விரட்டிகளைப் பயன்படுத்துதல்
* மூடாக்கி போடுதல்
* இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல்
* இயற்கை பயிர் ஊக்கிகளைப் பயன்படுத்துதல்
* பயிர்களுக்கிடையே தேவையான காற்றோட்டத்தை பராமரிப்பது
* நாட்டு விதைகளைப் பயன்படுத்துதல் ஆகியவைகள் ஆகும்.

நிலத்தை தயார் செய்தல் :

பயிர் வளர்வதற்கு ஏற்றவாறு நிலத்தினை தயார் செய்ய வேண்டும். நிலமானது உழுவதற்கு எளிதாகவும், பஞ்சு போல மிருதுவானதாகவும் இருக்க வேண்டும்.

கீழ்க்கண்ட வழிமுறை மூலம் 50 வருடங்கள் செயற்கை உரம் பயன்படுத்திய நிலத்தின் வளத்தினை 6 மாதங்களில் மீட்டெடுக்கலாம் என வட இந்திய கணித மேதை ஸ்ரீபாத தபோல்கார் கூறியுள்ளதாக நம்மாழ்வார் குறிப்பிட்டுள்ளார்.

20 வகையான பயிர்களை (நான்கு தானியங்கள், நான்கு எண்ணெய் வித்துக்கள், நான்கு மணப்பொருட்கள், நான்கு உரச்செடிகள்) கலந்து விதைத்து 20 நாட்களில் உழுது நிலத்தில் மடக்க உழவு செய்ய வேண்டும்.

பின்பு மீண்டும் 20 வகைப் பயிர்களை விதைத்து வளர்த்து 60 நாட்களில் உழுது நிலத்தில் மடக்கி உழ வேண்டும்.

அதனை அடுத்து மீண்டும் 20 வகை பயிர்களை விதைத்து வளர்த்து 90 நாட்களில் (பயிர்களின் விதைகள் முற்றிய பிறகு) உழுது நிலத்தில் மடக்க வேண்டும்.

ஒற்றை நடவு முறை :

ஆப்பிரிக்கா நாட்டின் ''மடகாஸ்கர் நெல் நடவு'' என்பது உலக அளவில் மிகப்பிரபலமானது. ஒற்றை நாற்று நடவு அல்லது செம்மை நெல் சாகுபடி என்றழைக்கப்படும். இந்த மடகாஸ்கர் நெல் நடவு பற்றிய பயன்கள் மற்றும் விளைச்சல் பற்றி 1960–களில் வெளியே தெரிந்தது. இந்த முறையில் விதை, நீர், நேரம் அனைத்தையும் குறைத்து, மகசூலை மட்டும் அதிகமாகக் கொடுத்த ஒற்றை நாற்று நடவை உலகுக்கே அறிமுகப்படுத்தியது நமது முன்னோடி தமிழர்கள் தான் என்ற உண்மையை தக்க ஆதாரங்களுடன் உலகிற்கு எடுத்து கூறி நிரூபித்தார் நம்மாழ்வார். இன்றைக்கு நமது தமிழகத்தில் ஒற்றை நாற்று நடவு பிரபலமாகி, ஏக்கருக்கு 27 மூட்டைகள் வரை நெல் மகசூல் ஈட்ட முடிகிறது. இந்த பெருமையும் இவரையே சேரும்.

பயிர் சுழற்சி முறை :

ஒரே மாதிரியான பயிரினை தொடர்ந்து பயிர் செய்வதால் நிலமானது தனது வளத்தினை இழக்கிறது. எனவே பயிர்களை சுழற்சி முறையில் பயிர் செய்வதன் மூலம் நிலம் இழந்த வளத்தினை மீட்டெடுக்கலாம்.

நெல், பயிர் சாகுபடிக்கு பின் உளுந்து, எள், துவரை, பருத்தி போன்றவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயிர் செய்யலாம். பயிர் செய்யும் நிலத்தின் தன்மை, நீரின் அளவு ஆகியவற்றுக்கு ஏற்ப பயிர் சுழற்சி முறையை மேற்கொள்ளலாம்.

கலப்பு பயிர் பயிரிடுதல் :

கலப்பு பயிர் பயிரிடுதல் முறையானது பருத்தியுடன் துவரை, உளுந்து பயிர்களை கலந்து பயிர் செய்வது, மிளகாயுடன் அகத்தியை பயிர் செய்வதுபோன்றவை ஆகும்.

இம்முறையானது விளைச்சலை அதிகப்படுத்தவும், தீமை செய்யும் பூச்சிகளை விரட்டவும் பயன்படுகிறது.

இயற்கை பூச்சி விரட்டிகளைப் பயன்படுத்தல் :

பயிர் செய்யும் நிலங்களில் நன்மை செய்யும் பூச்சிகள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகள் காணப்படுகின்றன.

செயற்கை உரங்களைப் பயன்படுத்தும் போது இருவகைப் பூச்சிகளும் அழிக்கப்படுகின்றன.

எனவே தீமை செய்யும் பூச்சிகளை விரட்டுவதற்கு இயற்கைப் பூச்சி விரட்டிகளை பயன்படுத்துவது நல்லது.

இயற்கை பூச்சி விரட்டிகள் பூஞ்சைப் பூச்சி விரட்டி, இஞ்சி மிளகாய் பூண்டு பூச்சி விரட்டி, இலை தழைகளில் இருந்து பெறப்படும் பூச்சி விரட்டி.

மூடாக்கிப் போடுதல் :

மூடாக்கிடுதல் என்பது பயிர்களுக்கு இடையே இலை தழை, வைக்கோல், கரும்பு சோகை ஆகியவற்றைக் கொண்டு மூடுதல் ஆகும்.

இதனால்மண்ணின்ஈரப்பதம்பாதுகாக்கப்படும். மண்புழுக்கள் வளர ஏதுவாகும். களைகளின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படும். மண்ணின் இயற்பியல் தன்மை பாதுகாக்கப்படும். மூடாக்கு இடுவதன் மூலம் அதிக விளைச்சலையும் பெறலாம்.

இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல் :

பயிர்களுக்கு இயற்கை உரங்கள் ஆன மண்புழு உரம், சாணஎரு உரம், தொழு உரம், பசுந்தாள் உரம் மற்றும் பசுந்தழை உரம் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

இதனால் குறைந்த செலவில் நிறைய விளைச்சலைப் பெறலாம். ஆரோக்கியமான உணவுப் பொருட்களை பயனீட்டாளரும் பெறலாம்.

இயற்கை பயிர் வளர்ச்சி ஊக்கிகளைப் பயன்படுத்துதல் :

பயிர்கள் நன்கு செழித்து வளர்ந்து அதிக விளைச்சலைத் தர இயற்கை பயிர் வளர்ச்சி

ஊக்கிகளைப் பயன்படுத்த வேண்டும். குணப்பசலம், தேங்காய்பால் மோர், அமிர்தக்கரைசல், பஞ்சகவ்யா ஆகியவை இயற்கை பயிர் வளர்ச்சி ஊக்கிகள் ஆகும்.

பயிர்களுக்கிடையேயான காற்றோட்டத்தை அதிகரிப்பது :

நெல்லுக்கு நண்டோட, கரும்புக்கு ஏரோட, வாழைக்கு வண்டியோட, தென்னைக்குத் தேரோட, என்னும் பழமொழிக்கு ஏற்ப பயிரின் வகைகளைப் பொறுத்து அவற்றிற்குத் தேவையான இடைவெளி விட்டு பயிர் செய்ய வேண்டும்.

நாட்டு விதைகளைப் பயன்படுத்துதல் :

தரமான நாட்டு விதைகளைப் பயன்படுத்தி இயற்கை முறையில் வேளாண்மை செய்வதன் மூலம் அதிகமான விளைச்சலுடன் தரமான பொருட்களைப் பெற முடியும்.

தற்போது நம் நாட்டின் வேளாண்துறையில் இயற்கை வேளாண்மை என்றொரு பிரிவு செயல்பட்டு வருகிறது. எல்லோரும் இயற்கை வேளாண்மையின் நன்மைகளைப் புரிந்து கொண்டு அதற்காக முனைந்து செயல்படுவோம்.

நோயில்லா உலகைப் படைக்க! இயற்கை வேளாண்மையை பின்பற்றுவோமாக!

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
சென்னை–90.
செல் : 9943702054

---

## ஹென்றி ஃபோர்டின் வெற்றி மன நிலை

A. RAJARETHINAM, PORUR,
CHENNAI, PH: 9444224366

ஹென்றி ஃபோர்டை எல்லோருக்கும் தெரியும். இவர் வெற்றியின் சின்னம். இவரைப்பற்றி கொஞ்சம் ஆராய்ச்சி செய்வோம்.

ஹென்றி ஃபோர்ட் உலகத்தையே கார் மயமாக்கியவர். இவரால் கார்கள் ஓட ஆரம்பித்தன. கார்கள் ஓடுவதற்கு நல்ல சாலைகள் வேண்டும் என்பதால் எல்லா இடங்களிலும் சாலைகள் உண்டாயின. குறைந்த விலையில் மனிதன் வாங்கக் கூடிய கார்களை இவர் கண்டுபிடித்தார். இவர் அந்தக் காலத்து பில்கேட்ஸ்களில் ஒருவர். பழங்காலத்தில் மனிதன் எங்கும் நடந்தே சென்றான். பின்னர் குதிரை மீதும்,மாட்டுவண்டியிலும் பயணம் செய்தான். ஹென்றி ஃபோர்ட் கார்களை மக்களுக்கு அறிமுகப்படுத்திய பின் உலகில் எவ்வளவு முன்னேற்றம்! எல்லா துறைகளும் விரைவில் முன்னேற கார்கள் காரணமாக அமைந்தது.

அமெரிக்காவில் மட்டும் அவருடைய மாடல் – டி என்ற கார்கள் 15 கோடியே 50 லட்சம் விற்றன. கார் என்பது பணம் படைத்த செல்வந்தர்கள் மட்டும்தான் வாங்க முடியும் என்ற நிலையை மாற்றி சாதாரண மனிதர்களும் வாங்கக் கூடிய ஒன்று என்ற நிலையை உண்டாக்கியவர் இந்த மாமேதை.

ஹென்றி ஃபேர்டைப் பற்றி ஒரு ஆராய்ச்சி செய்தார்கள். அதன்படி ஃபோர்டின் செல்வம் எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு அவரை சாதாரண மனிதனாக விட்டு விட்டால் ஒரு வருடம் கழித்து அவர் எந்த நிலையில் இருப்பார் என்பதுதான் அந்த ஆராய்ச்சி. ஆராய்ச்சியின் முடிவு விசித்திரமானது! ஓராண்டில் இவர் முன்பிருந்ததைவிட அதிக பணமுள்ள கோடீஸ்வரராக இருப்பார் என்று ஆராய்ச்சியின் முடிவில் தெரிவித்தார்கள். ஆராய்ச்சியாளர்கள் இப்படி கூறியதற்குக் காரணம் இவர் எப்போதும் நேர்மறை எண்ணங் கொண்டவராக இருந்தார். கடுமையான உழைப்பாளி இவர் தான் எப்போதும் ஒரு செல்வந்தர் என்ற மனநிலையைப் பெற்றிருந்தார். இவரது அறிவு, செல்வத்தை காந்தம் போல் இழுக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறினார்கள்.

ஹென்றி ஃபோர்ட் அவரது அறிவை நம்பினார். எதிலும் நான் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை அவரிடம் இருந்தது. பணத்தைத் தேடி இவர் ஓடவில்லை. ஆனல் அவருடைய அறிவாலும், உழைப்பாலும் பணம் இவரைத் தேடி வந்தது. கிடைத்த பணத்தையெல்லாம் ஆராய்ச்சிக்காகவும், கார்கள் உற்பத்தி செய்வதற்காகவும் செலவு செய்தார்.

எந்தத் தொழில் செய்பவர்களாக இருந்தாலும் ஒரு குறிக்கோளும், வெற்றி பெறுவோம் என்ற அசையாதநம்பிக்கையும்,உழைப்பும்இருக்கவேண்டும். சிறு சிறு தடங்கல்கள் வரலாம். அவற்றை வெற்றியின் படிகளாக எண்ணி முயற்சி எடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். இதைத்தான் ஹென்றி ஃபோர்டின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம்.

இந்த எழுத்தாளர் எழுதியுள்ள வெற்றிக்கு மிக அருகில், வெற்றி பின் தொடர, வெற்றி ரகசியங்கள், வெற்றி கையுறல், வெற்றியின் அலை ஓசை, Spoken English for your success, success habits of great achievers என்ற புத்தகங்களைப் படித்தால் திறமைகள் அதிகரிக்கும். முன்னேறலாம்.

## நட்சத்திரங்களும் மரங்களும் (தொடர்ச்சி)

அக்ரி கு. சேதுசுப்பிரமணியன், சிதம்பரம்.
அலைபேசி : 9443665642

### 23. அவிட்டம்.

"அவிட்டத்தில் பெண், தொட்டதெல்லாம் பொன்".
"அவிட்டத்தில் பிறந்தால் தவிட்டுப் பானையிலும் தனம்"
அவிட்டத்தில் பிறந்த தங்கச்சியை
அந்நியத்தில் கொடுக்காதே"

என்னும் பழமொழிகள் அனைத்தும் அவிட்டம் நட்சத்திரத்தின் சிறப்பைக் கூறுவன. ஒரு ஜாதகத்தில் கிரக அமைப்புகள் தான் செல்வச்செழிப்பைக் குறிப்பதாக இருந்தாலும், அவிட்டம் நட்சத்திரம் செழுமையின் அம்சமாகக் கருதப்படுகிறது. அவிட்ட நட்சத்திரத்தின் முதல் இரண்டு பாதங்கள், மகர இராசியில் 293°-20 முதல் 300°-00 பிரிவு வரையிலும், 3 மற்றும் 4 ஆம் பாதங்கள் 301.00° முதல் 306°-40 பிரிவு வரையிலும் இடம் பெறுகின்றன. இதன் வடமொழிப் பெயரான "தனிஷ்டா" என்பதற்கு "ஆகக் கூடிய செல்வம் பொருந்தியது" என்னும் பொருளாகும். அடையாளக் குறியீடு "முரசு" ஆகும்.

அவிட்ட நட்சத்திரத்தின் கிரகாதிபதி செவ்வாய் ஆகும். இதன் அதிதேவதை செழுமையின் கடவுள்களான அதிரவன், அனலன், அனிலன், ஆபன், சோமன், துருவன், பிரதியுட்சன், பிரபாட்சன் என்றும் அஷ்ட வசுக்கள் ஆகும். இதன் கணம் இராட்சசம், மிருகம் பெண் சிங்கம், பறவை பொன்வண்டு, வடிவம் ஆட்டின் தலை, விருட்சம் வன்னி என்பவையாம்.

அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தன விருத்தி உடையவர்கள். தான, தருமங்களில் ஈடுபாடு கொண்டவர்கள். இசைப்பிரியர்களாகவும், திறமை உடையவர்களாகவும் திகழ்வார்கள். தான் சொல்வதையே மேலாக நினைப்பதால் பிறர் சொல்லைப் பொருட்டாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். மனத்துணிவு உடையவர்கள், பெரியோர்களுக்கு இனியவர்கள், உணவு வகைகளில் நாட்டம் கொண்டவர்கள். பெருந்தன்மை தேடுபவர்களாகவும் இருப்பார்கள்.

அவிட்ட நட்சத்திரத்துக்குரிய வன்னி மரம், திருப்பாச்சிலாச்சிராமம், திருக்காட்டுப் பள்ளி, திருமறைக்காடு, (வேதாரண்யம்), அகத்தியான் பள்ளி, திருமயிலாடுதுறை, திருச்செம்பொன்பள்ளி (செம்பனார் கோயில்), திருத்தெளிச்சேரி, திருப்பாம்புரம், திருவன்னியூர், திருப்பத்துறை, திருக்கலயநல்லூர், திருக்கருவாய், திருப்பெருவேளூர் (மணக்கால் ஐயம் பேட்டை) திருஅரதைப் பெரும்பாழி (அரித்துவாரமங்கலம்) திருக்கொள்ளிக்காடு, கொடுமுடி, திருமுது குன்றம் (விருத்தாசலம்) வடுகூர், திருவாமாத்தூர், திருவான்மியூர், திருக்குடமூக்கு (கும்பகோணம்) திருச்சாட்டியக்குடி, கோட்டூர், ஆண்டார் கோயில், திருப்பட்டீச்சுரம், முண்டீச்சுரம் ஆகிய 26 தலங்களின் விருட்சமாக வணங்கப்படுகிறது.

தல வரலாறு : ஒரு சமயம் விபசித்து முனிவர், குபேரனது தங்கை அவளுடன் வந்திருந்த தெய்வமகளிர்களிடம் நேர்மையாக நடந்து கொண்டதால் அவரை மெச்சி அவரிடம் விலையுயர்ந்த ஆபரணங்களை அளித்து விருத்தாசலத்தில் உள்ள பழமலை நாதரை வணங்கி அவருக்குத் திருப்பணி செய்ய ஆபரணங்களைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக் கொண்டனர். ஆபரணங்களை வைக்க அவர் ஒரு இடத்தைத் தேடும் போது அசரீரியாக ஒரு குரல் "முனிவனே இங்குள்ள வன்னி மரத்தில் வைப்பாயாக ! அது ஒரு கற்பக தரு. வேண்டும் போது எடுத்துப் பயன்படுத்துவாயாக ! என்று உபதேசம் செய்து உரோசம முனிவரிடம் தீட்சை பெற்று தவம் செய்வாயாக" என்று ஒலித்தது.

விபசித்து முனிவரும் மணிமுத்தாற்றில் நீராடி விட்டு கடுமையான தவம் மேற்கொண்டார். இறைவனும் அவருக்குக் காட்சி கொடுத்து "நீ இங்கேயே தங்கி திருப்பணி செய்வாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார். முனிவரும் அங்கு தங்கி திருப்பணிகள் செய்ய தொடர்ந்து வன்னி மரமும் எடுக்க எடுக்கக் குறையாத பொருள் வளத்தைத் தந்தது. வன்னி மரம் தந்த செல்வத்தால் திருப்பணிகள் இனிதே நிறைவேறியது. நந்தவனங்கள், மாடங்கள், தேர்கள் முதலியவற்றைச் சிறப்புற அமைத்தார். விருத்தகிரிப் பெருமான் திருவடியில் இரண்டறக் கலக்கும் பேறு பெற்றார்.

வன்னி மரம் :

பாரதத்தைத் தாயகமாகக் கொண்ட வன்னி மரத்தின் தாவரவியல் பெயர் Prosopis cineraria என்பதாகும். Mimosaceae என்ற தாவரக் குடும்பதைச் சார்ந்தது. சிற்றிலைகள் கொண்ட இரட்டைக்கூட்டிலை கொண்டது. முட்கள் கொண்ட இம்மரம் 9 மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது. பூங்கொத்துக்கள் மஞ்சள் நிறத்துடன் காணப்படுபவை. ஜுன், ஜுலை மாதங்களில் காய்கள் உருவாகி நெற்றுக்களாக மாறும். முற்றிய விதைகளை 24 மணிநேரம் நீரில் ஊறவைத்து பின்னர் விதைக்க வேண்டும்.

மருத்துவப் பயன் :

இலைச்சாறுடன் பசுநெய், வெண் குங்கிலியம் சேர்த்து எரித்து உண்டாகும் நெய்யினை உட்கொள்ள மேக வெட்டை, சொறி, சிரங்கு குணமாகும். மரப்பட்டையின் வடிநீர் (decoction) தொண்டைப் புண் ஆற்ற வல்லது. முடக்கு வாதத்துக்குப் பூச்சாகவும் பயன்படுத்தலாம். நெற்றுக்கள் முதிர்ந்த நிலையில் சதைப்பகுதி இனிப்பாய் இருக்கும். இராஜஸ்தான், பஞ்சாப் மாநிலங்களில் உணவாய் எடுத்துக் கொள்கின்றனர். காயினை குடிநீரில் இட்டுக் கொடுக்க உள்ளழற்சியைப் போக்கும். பூக்களை இடித்து சர்க்கரையுடன் கொடுக்க கருச்சிதைவு ஏற்படாமல் தடுக்கும்.

சமீ என்கிற வன்னி மரத்தை விஜயதசமியன்று பூஜித்தால் தீவினைகள் அகலும் செல்வம் பெருகும். வன்னி என்று நினைத்தாலும், சொன்னாலும், வலம் வந்து வழிபட்டாலும் பாவ வினைகள் நீங்கி வளம் பெறலாம். தீராத நோய்கள் தீரும். வன்னி மரக்காற்று நம் மீது பட்டால் சரும வியாதிகள் குணமாகும். வெப்பத்தைத் தணிக்கும். வன்னி மரக்குச்சிகளை ஹோமத்தில் இடுவதற்கும் பயனாகிறது.

சிவபெருமானுக்கு அருச்சனை செய்ய வில்வம் கிடைக்காத சமயத்தில் வன்னி இலைகொண்டு அருச்சனை செய்யலாம். விநாயகர் பூசைக்கும் உகந்தது.

விஜயதசமியன்று வன்னி இலைகள் கொண்டு வீட்டில் பூசித்தால் செல்வம் பெருகும்.

அவிட்டம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் விருத்தாசலம் (திருமுதுகுன்றம்) சென்று பழமலை நாதரை முறைப்படி வழிபாடு செய்து அங்குள்ள பழமை வாய்ந்த வன்னி மரத்தை வலம் வந்து வணங்கியும், வர எல்லாவித நற்பலன்களும் பெறலாம். மேலும் முன்னர் சொன்ன 26 தலங்களில் எந்தத் தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபாடு செய்யலாம்.

வன்னி மரக்கன்றுகளை கோயில் நந்தவனங்கள், பெருங்கட்டட வளாகங்கள், பள்ளி வளாகங்கள் போன்றவற்றில் நட்டு, பராமரித்தலும், நீர் ஊற்றி வலம் வந்து வணங்குதலும் அவிட்ட நட்சத்திரக்காரர்களுக்கு அளவற்ற நன்மைகள் உண்டாகும். வன்னி மரக்கன்றுகளை மங்கல காரியங்களில் விநியோகம் செய்வதும் நன்மைகள் தரும்.

(பயணிப்போம்)

## சாதிவாரிக் கணக்கெடுப்பு !

சாதிவாரிக் கணக்கெடுப்பில்
மீண்டும்
சரியப் போவது யார் ?

‘நாம் இருவர்’
நமக்கு ஒருவர் என்று
அரசின் கொள்கையை
அமுல் படுத்திய
முற்பட்ட சாதியினரின்
முனகல் ஒலி கேட்கிறது!

அன்று
குடும்ப நலத்திட்டத்திற்கு
குத்து விளக்கேற்றி
மக்கள் தொகையைக்
குறைத்ததனால்

இன்று
மாநிலப் பிரதிநிதித்துவம்
குறைந்து விடுமோ என்று
குரல் உயர்த்தும்
மாநில அரசே!

அதே அச்சத்தோடு
தனக்கும்
தனி மனிதர்களையும்
சற்று பரிசீலியுங்கள்!

முன்னேறியவர்கள் என்றும்
முற்பட்டோர் என்றும்
முன்பேயே ஒதுக்கிவைக்கப்பட்ட
எங்கள் பிள்ளைகளை

குறைந்த சாதிக் கூட்டமென்று
மேலும் பின்னுக்குத் தள்ளவா
இந்த சாதிவாரிக் கணக்கெடுப்பு!

விகிதாச்சாரத்தில்
மேலும் எங்களை
வீழ்ச்சியுற வைக்கவா
இந்த வீண் கணக்கு!

மூன்று தலைமுறையாக
ஓரிரண்டு பிள்ளைகளோடு
‘முற்பட்ட சாதி’ என்று
புறக்கணிக்கப் பட்டோரை
முதலில் கணக்கெடுங்கள்!

வயது வரம்பின்றி
அவர்கள் வாழ்வாதாரத்திற்கு
அனைத்துத் தளத்திலும்
முன்னுரிமை அளியுங்கள்!

சாதிவாரிக் கணக்கெடுப்பில்
அப்போதுதான்
சமூக நீதி நிலைக்கும்!
சமத்துவம் தழைக்கும்!

– மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்.
95782 88891

## சங்கப் பலகை

பங்கு பெறுவோர் : சித்ரா, வசுமதி, தீபிகா, கோமதி, பிரியா, கௌரி, ஆண்டாள்.

இடம் : செம்மொழிப் பூங்கா

ஆண்டாள் : போன மாதம் பனகல் பார்க்கில் கூடியபோது கூட இம்முறை செம்மொழிப் பூங்கா என முடிவு செய்யாமலேயே தானே கலைந்து சென்றோம். எப்படி சித்ரா உனக்கு இந்த ஐடியா வந்தது ?

சித்ரா : ஆமாக்கா! செம்மொழிப் பூங்காவில் மலர்க் கண்காட்சி என பேப்பரில் படிச்சதும் தான், கண்காட்சியையும் பார்க்கலாம்; நாமும் பேசலாமே! என நினைச்சுதான் எல்லோரிடமும் சொன்னேன்.

கோமதி : எவ்வளவு அழகாக உள்ளது! எத்தனை வகையான மலர்கள்! ஒன்று, இரண்டல்ல; 12 லட்சம் பூக்கள் கண்காட்சியில் உள்ளன. மலரின் பெயர், அதன் தாய்நாடு, அறிவியல் பெயர் என அனைத்தும் குறிக்கப்பட்டிருப்பது நாம் தெரிந்து கொள்ள உதவியா இருக்கு.

கௌரி : பூக்களாலேயே உருவான யானை எவ்வளவு அழகாக உள்ளது! யானை மட்டுமல்ல; பறவைகள், ஆமை, பூக்களாலான இதயம், வண்ணத்துப்பூச்சி வளைவுகள் எல்லாமே Superb! சித்ரா, நீ மட்டும் இந்த இடத்தை Choose பண்ணலைன்னா, நாங்கள் இந்த கண்காட்சியை நிச்சயம் மிஸ் பண்ணிருப்போம், ரொம்ப தாங்ஸ்ப்பா!

ஆண்டாள் : ஊட்டி, கொடைக்கானல் என போய் பார்த்து மகிழ்வதை, சென்னையிலேயே ரசிக்க ஏற்பாடு செய்த தமிழக அரசினையும், அரசின் தோட்டக்கலைத் துறையையும் நாம் நிச்சயம் பாராட்ட வேண்டும்.

பிரியா : போன மாசம் பிப்ரவரி மாதம் பத்தி ஆசிரியர் எழுதி இருந்தார் அல்லவா ? அதைப்பற்றி Browse பண்ணியதில், மேலும் சில தகவல்களை சொல்லவா ?

தீபிகா : நானும் அந்த மாதத்தைப் பற்றி சில தகவல்கள் அறிந்து கொண்டேன். பிரியா, நீ மொதல்ல சொல்லு. அப்புறமா நான் சொல்றேன்.

பிரியா : சரிப்பா, பிப்ரவரி லத்தீன் சொல்லான ஃபெப்ரம் என்பதில் இருந்து வந்தது. ஃபெப்ரம் என்பதில் இருந்து வந்தது. ஃபெப்ரம் ன்னா சுத்தப்படுத்துதல் அல்லது புனிதப்படுத்துதல் என்று அர்த்தமாம். அந்த மாச பௌர்ணமியை ஃபெப்ருவா எனும் விழாவாக ரோமானியர்கள் கொண்டாடினார்களாம். இந்த மாசம் முச்சூடும் இறந்தவர்களுக்கான படையல் இடுவார்களாம். இது அவர்களுக்குப் புனித மாதமாம்.

தீபிகா : இப்ப நான் சொல்றேன். கடைசி மாசமா அப்போது பிப்ரவரி தான் இருந்துச்சாம். ஜனவரியை முதல் மாசமாகவும், பிப்ரவரியை 2–ஆம் மாசமாக மாற்றி அமைத்தவர் சார்லி ரிம்சா என்பவராம். அது மட்டுமல்ல; கி.மு. 46–ஆம் வருடம் ஜூலியஸ்சீசர் தான் தற்போது நாம் பயன்படுத்தும் சூரிய நாட்காட்டியை உலகுக்கு அறிமுகப்படுத்தினாராம். ஒரு ஆண்டிற்கு 365¼ நாட்கள் என்பதால், 4 வருடங்களுக்கொரு முறை பிப்ரவரியில் 29 நாட்கள் வருகிறது. அவ்வருடத்தை லீப் ஆண்டு என்கிறோம்.

பிரியா : இன்னொரு இன்ட்ரஸ்டிங் நியூஸ். பிப்ரவரி மாதம் ஒன்றில் தான் சில ஆண்டுகளில் பௌர்ணமியே வராமல் இருக்குமாம். 1999–ஆம் வருடமும், வருங்காலத்தில் 2037–ம் பௌர்ணமி இல்லாத பிப்ரவரி மாதம் உள்ள வருடங்களாம்.

வசுமதி : நிஜமாவே நிறைய தெரிஞ்சிக்கிட்டோம்பா, பிப்ரவரியைப் பற்றி. சரி! அடுத்த topic போவோமா ? நான் Family-யோட திருநாங்கூர் கருடசேவைக்குப் போய், பெருமாளைத் தரிசித்து வந்தேன். என்ன ஒரு தரிசனம்! திருமங்கையாழ்வார் எல்லாப் பெருமாளையும் அழைத்து, நாங்கூருக்கு, சிலுசிலுவென்று காற்றடிக்க, வயல் வழியே ஓடி வந்து, கார்காத்தார் தெருவில் நுழைகிறார். அவருக்கு முதல் மரியாதை நம் குலப் பெரியவர்கள் செய்ய, அவர்களுக்கு இறைவன் சார்பில் பரிவட்டம் கட்டுவதைக் காண ரொம்ப பெருமையா இருந்துச்சு.

ஆண்டாள் : ஆமாம்பா! நானும் ரொம்ப வருஷங்களுக்கு முந்தி பார்த்திருக்கேன். பகல் 12 மணிக்கு மணிமாடக் கோயில் நாராயணப் பெருமாள், புருஷோத்தமன் கோவில் சன்னதித் தெருவில் எழுந்தருளியிருக்கும் 10 பெருமாள்களையும் வரவேற்று, தனது கோயில் திரும்பவும், எல்லாப் பெருமாளும் ஒன்றன் பின் ஒன்றாக பந்தலுக்கு எழுந்தருளி, அவர்களை திருமங்கை ஆழ்வார் மங்களாசாசனம் செய்து, வலம் வந்து வணங்க எல்லாப் பெருமாளும்

கோவிலுக்குச் செல்கிறார்கள். இவ்விழாவில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் நம் குலத்தவர் என தெரிய வந்தபோது எனக்கு உடம்பே சிலிர்த்துச்சுப்பா!

வசுமதி : ஆமாக்கா! அன்றைய இரவு உணவும் நம் குலத்தவரே ஏற்பாடு செய்கிறார்கள். இரவு 12 மணிக்கு மேல் ஒவ்வொரு பெருமாளாக கருட வாகனத்தில் கோபுரதீபம் ஏற்று, கார்காத்தார் தெருவில் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்தருளுவது கண்கொள்ளாக் காட்சி.

ஆண்டாள் : ஆமாம்! அதைவிட கடைசியா திருமங்கையாழ்வார் வேகமாக ஓடி வந்து, மணவாள மாமுனிகளுடன் சேர்ந்து சேவை சாதிப்பதும் அற்புதமே! நிசமாச் சொல்றேன்! அட்லீஸ்ட் வாழ்நாளில் ஒரு தடவையாவது தரிசிக்குனும்ப்பா!

சித்ரா : மாசி மாதம் மூன்று விழாக்கள் வருதல்லவா? மாசிமகம் பிப்ரவரி 24ஆம் தேதி வருது. சிவபெருமானுக்கு முருகப் பெருமான் பிரணவ மந்திரத்தின் பொருள் உரைத்தது இன்றைய தினமே. தட்சனின் மகளாக தாட்சாயணி அவதரித்த நாளும் இதுவே. கும்பகோணம் மகாமகக் குளத்தில் புனித நதிகள் அனைத்தும் தங்களது பாவங்களைப் போக்க பொங்கி வரும் நாள். மகாமகக் குளத்தில் தீர்த்தவாரி நடைபெறும்.

பிரியா : ஆமாம் சித்ராக்கா! பிப்ரவரி 16ஆம் தேதி, மாசி 4ஆம் தேதி ரத சப்தமியும், மார்ச் 8–ல் மகா சிவராத்திரியும் வருகிறது. இப்ப ரதசப்தமியைப் பற்றிப் பேசுவோம். அடுத்த மாதம் சிவராத்திரியை வைச்சுப்போம். சாதாரணமா தை மாதம் வரும் இந்நாள், இந்த வருடம் மாசி 4ஆம் தேதி வந்துள்ளது. இந்நாளில் சூரியபகவான் தனது ரதத்தை வடகிழக்கு திசையில் திருப்புகிறாராம். இவ்விழா சூரியபகவானுக்காக கொண்டாடப்படுகிறது. பீஷ்மருடன் தொடர்புடைய நாள். அவர் உத்தராயணம் வரை காத்திருந்தும் உயிர் பிரியாததால், கிருஷ்ண பரமாத்மா ரதசப்தமி வழிபாடு பற்றிக் கூற, அவரும் சூரியபகவானை என்னிடமுள்ள பாவங்களை அழிக்க அதிகமான வெப்பத்தை அவர் மீது பாய்ச்சி அருள வேண்ட, அவரின் பாவங்கள் தீர்ந்ததும், அவர் உயிர் பிரிந்ததாக புராணம் கூறுகிறது. உடல் ஆரோக்கியம் பெற இந்நாளில் சூரியனை வழிபட வேண்டுமாம்.

கௌரி : ஆமாம்பா! இதுவரைக்கும் ரதசப்தமி பற்றி ஒன்றுமே தெரியாது. எப்படி வழிபடனும்கிறதையும் சொல்லிடேன்.

பிரியா : 7 எருக்கம் இலைகளை தலை, 2 கண்கள், 2 தோள்கள், 2 முழங்கால்களில் வைத்து, அதில் மஞ்சள் கலந்த அட்சதை சிறிது, ஆண்கள் சிறிது விபூதியும், பெண்கள் சிறிது மஞ்சள்தூளும் வைத்து, சூரியோதயத்திற்குப் பின் கிழக்கு நோக்கி நின்று, சூரியபகவானைத் தியானித்து குளிக்க வேண்டும். சூரிய ஒளி படும் இடத்தில் அல்லது பூஜை அறையில் ரதக் கோலம் போட்டு, சூரியனையும் வரைந்து, சர்க்கரைப் பொங்கல் படையலிட்டு ஆதித்யஹ்ருதயம் அல்லது சூரிய காயத்ரி சொல்லி வழிபடணும். முடிந்தவர்கள் சூரிய நமஸ்காரமும் செய்து வழிபடலாம்.

கௌரி : Thank you ப்பா! இன்றைக்குப் புதிதாக தெரிந்துகொண்டோம்.

ஆண்டாள் : இந்த மாசம் நம்ம குழந்தைகள் board exams எழுதுவாங்க இல்ல! அவங்களுக்கு வாழ்த்துச் சொல்லி கலைவோம்.

கௌரி : ஆமாக்கா! குழந்தைகளே! பயப்படாமல், தைரியமாக தேர்வு எழுதுவதற்கு உங்கள் இடத்தில் அமர்ந்தவுடன், மனதை 2 நிமிடங்கள் ஒருமுகப்படுத்தி உங்களுக்குப் பிடித்த கடவுளைத் தியானித்து, பின் கேள்வித்தாளைப் படியுங்கள். கேள்விகளின் எண்களைச் சரியா குறிப்பிடுங்கள். அனைவரும் நல்ல மதிப்பெண்கள் பெற்று, நன்முறையில் தேர்ச்சி பெற எங்களது அனைவரது ஆசிகளும், வாழ்த்துக்களும்!

வாழ்க வளமுடன்! என்று கூறி அனைவரும் கலைகிறார்கள்.

---

## வாழ்த்துகிறோம்

சீர்காழி, தியாகராஜ நகர், திரு. B. கோவிந்தராஜன் அவர்கள் மூத்தோருக்கான தேசிய அளவில் திருநெல்வேலி பாளையங்கோட்டையில் நடைபெற்ற போட்டியில் 1500 மீட்டர் இரண்டாம் இடம் 400 மீட்டரில் 3–ம் இடம், மற்றும் நீளம் தாண்டுதலில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார். அவருக்கு சீர்காழி சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

## முப்பரிமாண அச்சுப்பொறி (3D Printer)

- Dr. D. Kalyanakumar, Trichy - 18.

The first 3D Printed House at IIT-M campus (developed by TVASTA & IIT) was built in just five days inaugurated by Union Finance Minister Nirmala Sitharaman.

தற்போது 3D Printing மிகப்பெரிய அளவில் வளர்ச்சி அடைந்து வருகிறது. உற்பத்தி, மருத்துவம், ஆர்ட் மற்றும் வடிவமைப்பு போன்ற பல துறைகளில் 3D Printing தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்து வருகிறது. அதிக அளவிலான பொருள்களை தரமாகவும், துல்லியமாகவும் வடிவமைக்க 3D Printing தொழில்நுட்பம்மிகவும்பயனுள்ளதாகஇருக்கும்.மேலும் குறைந்த செலவில் அதிக அளவுள்ள பொருள்களை வடிவமைக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. 3D Printing தொழில்நுட்பம் பெரும்பாலான தொழிற்சாலைகளில் கொண்டுவரப்பட்டால் மனித ஆற்றல் குறைவதோடு பொருள்களின் விலையும் குறைய வாய்ப்பிருக்கிறது. மிகவும் சிக்கலான வடிவமைப்பை வாடிக்கையாளர்களுக்கு காட்டுவது என்பது சிக்கலானது. ஆனால் 3D Printing தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எவ்வளவு பெரிய சிக்கலான வடிவமைப்பையும் உருவாக்கிட முடியும். Architecture துறையில் சிக்கலான வடிவமைப்பை எளிமையாக உருவாக்கிட; மற்றவர்களுக்கு புரிகின்ற விதத்தில் உருவாக்கிட 3D Printing தொழில்நுட்பம் பேருதவியாக இருக்கும்.

ஒரு வழக்கமான பிரிண்டர் (e.g. Inkjet printer or Laser jet printer) காகிதத்தில் எதையாவது அச்சிடும். ஆனால் ஒரு 3D Printer வித்தியாசமாக வேலை செய்கிறது. இது ஒரு முப்பரிமாண பொருளை உருவாக்குகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு வழக்கமான பிரிண்டர் ஒரு பூனையை அச்சிட விரும்பினால் அது ஒரு காகிதத்தில் பூனையின் படத்தை அச்சிடும். ஆனால் நீங்கள் ஒரு பூனையை 3D பிரிண்டரில் அச்சிட விரும்பினால் அது பூனையின் சிறிய மாதிரியை (Model) உருவாக்கும்.

மருத்துவத்துறையில் மிகப்பெரிய முன்னேற்றத்தை கொண்டுவந்துள்ளது 3D Printing. ஒரு நோயாளிக்கு எலும்பு முறிவு ஏற்பட்டால் மிக விரைவாக ஆபரேசன் செய்திடவும், எலும்பிற்கான மாற்று பொருளினை உடனடியாக உருவாக்கி அதனை பொருத்திடவும் 3D Printing வழிவகை செய்கிறது. இதோடு மட்டுமே 3D Printing தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் முடிந்துவிடவில்லை. நாளுக்கு நாள் அதன் எல்லை விரிவடைந்துகொண்டே போகிறது. ஒரு காலத்தில் நமக்கு வேண்டிய உபகரணங்களை வீட்டிலேயே தயாரித்துக்கொள்ளும் வாய்ப்பு வந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை. ஹாலிவுட் திரைப்படங்களில், விண்வெளிக்கு செல்லும் விமானங்களில் பயணிப்பவர்களில் ஒருவர் யாருக்கும் தெரியாமல் ஒரு மெஷினில் துப்பாக்கி (Gun) ஒன்றினை செலெக்ட் செய்வார். உடனே அந்த மெஷின் துப்பாக்கி ஒன்றினை பிரிண்ட் செய்யும். இதனை நாம் காணும் போது இது சினிமாவில் உள்ள ஒரு காட்சி, அனிமேஷன் செய்து இப்படியெல்லாம் காட்டியிருப்பார்கள் என எண்ணியிருப்போம். அந்த தொழில்நுட்பத்திற்கு பெயர் 3D Printing என்பார்கள். ஆனால் 3D Printing என்பது உண்மையான ஒரு தொழில்நுட்பம். செயல்முறையில் 3D Printing தொழில்நுட்பத்தின் மூலமாக பொருள்கள் தயாரிக்கவும் படுகின்றன. ஆகையினால், இதனை அனிமேஷன் என நினைத்துக்கொண்டு இருந்தால் அதனை விட்டுவிடுங்கள்.

கான்கிரீட் 3D பிரிண்டிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைக்கப்படும் வீடுகள் 50 ஆண்டுகள் உறுதியாக இருப்பதோடு சுற்றுச்சூழலையும் காக்கிறது. ஒரு வீட்டை, பிரிண்ட் செய்வதை இதற்கு முன்பு பார்த்திருக்கிறீர்களா? சென்னை ஐ.ஐ.டி.யில் முன்னாள் மாணவர்கள் இணைந்து உருவாக்கியிருக்கும் 3D இயந்திரம், இதை சாத்தியப்படுத்தி இருக்கிறது. முற்றிலும் இந்தியாவில் உருவாக்கப்பட்ட இந்த இயந்திரம் கணினி தொழில்நுட்ப உதவியுடன் கட்டிடத்தின் வரைபடத்தை பல்வேறு பிரிவுகளாக பிரித்து ஒரு 3D வடிவமாக அச்சடித்து வழங்குகிறது. ஒரு வீடு முழுமையாக கட்டி முடிக்க 6 to 8 மாசம் எடுக்கும். ஆனால் 3D பிரிண்டிங்ல ஒரு மாசத்துல வீட்டை கட்டலாம். ஏன்னா 3D பிரிண்டட் பில்டிங்ஸ், 80 சதவீதம் ஆட்டோமெட்டிக் தான். முழுவதும் டிஜிட்டலைஸ்டு. இங்க மெஷின் தான் எல்லாமே பண்ணும். 3D பிரிண்டட் சுவர்ல, சாதாரண சுவரை விட 40 சதவீதம் மெட்டீரியல் கம்மியா இருக்கும். எலக்ட்ரீக் வயர்ஸ், பம்பிங், கனெக்ஷன்ஸ் மற்ற வேலையெல்லாம் பிரிண்டிங் பண்ணும் போதே செய்திடலாம் என்று கூறுகிறார் கட்டிட வடிவமைப்பாளர் அங்கிதா பாப்.

சென்னை ஐ.ஐ.டி. வளாகத்தில் த்வஸ்தா (TVASTA) நிறுவனம், இந்தியாவின் முதல் முப்பரிமாண வீட்டை கட்டியிருக்கிறது. இந்த வீடு வெறும் 21 நாட்களில் கட்டி முடிக்கப்பட்டது. இந்த வகை வீடுகளை கட்ட சுமார் 5 முதல் 10 லட்சம் ரூபாய் வரை செலவாகும் என்று த்வஸ்தா நிறுவனம் தெரிவிக்கிறது. கட்டுமானத் துறையை இயந்திரமயமாக்கினால்

குறைந்த நேரத்தில் தரமான உறுதியான அதிகமான வீடுகளை கட்ட முடியும். மூலப் பொருட்களுக்கு ஆகும் செலவுகளை குறைக்க முடியும் என்றும் த்வஸ்தா நிறுவனம் கூறுகிறது.

விமான போக்குவரத்து: 3D பிரிண்டிங் தொழில்நுட்பத்தை ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டவர்களில் விமானத் துறையும் ஒன்றாகும். விமானப் போக்குவரத்துத் துறை சிக்கலான அமைப்புகளை உள்ளடக்கியிருப்பதால் 3D பிரிண்டிங் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அதிகரிக்க, இந்த நிறுவனங்கள் சிறந்த ஆராய்ச்சி நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்துள்ளன. தற்போது பல 3D பிரிண்டர் விமானக் கூறுகள் உருவாக்கப்பட்டு, சோதனை செய்யப்பட்டு, தொழில்துறையில் பயன்படுத்தப்படுகின்றன. போயிங், ஏர்பஸ் போன்ற உலகளாவிய நிறுவனங்கள் தங்கள் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தியில் 3D பிரிண்டிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன.

சுகாதாரம் : 3D பிரிண்டிங்கின் பலன்களைப் புரிந்துகொள்ளும் துறைகளில் ஹெல்த்கேர் துறையும் ஒன்றாகும். 90கள் மற்றும் 2000களின் முற்பகுதியில் இருந்து சுகாதார வல்லுநர்கள் இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். உண்மையில், ஆராய்ச்சியாளர்கள் மனித உடலில் 3D அச்சிடப்பட்ட உறுப்பை விதைத்துள்ளனர். 3D பிரிண்டிங் தொழில்நுட்பத்தால் மருத்துவத் துறை பெரிதும் பயனடைந்துள்ளது. உதாரணத்திற்கு, 3D பிரிண்டெட் பல் சாதனங்கள் மற்றும் கேட்கும் கருவிகள்.

வாகனம் : உண்மையான தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கும் செயல்படுத்துவதற்கும் முன் விரைவான முன்மாதிரி (prototype) பயன்படுத்தப்படும் மற்றொரு துறை இதுவாகும். உண்மையில், 3D பிரிண்டிங் தொழில்நுட்பத்தில் இருந்து அதிக லாபம் பெறும் துறைகளில் இதுவும் ஒன்று. ஹோண்டா, போர்ஷே, மெர்சிடிஸ், லம்போர்கினி மற்றும் ஜெனரல் மோட்டார்ஸ் போன்ற நிறுவனங்கள் முப்பரிமாண அச்சிடலை ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்ட சில நிறுவனங்கள்.

கட்டிடக்கலை : 3D பிரிண்டிங் தொழில்நுட்பம் ஒரு திட்டத்தைப் பற்றிய கட்டிடக் கலைஞரின் யோசனைகளை விரைவாக உறுதியான தயாரிப்பாக மாற்ற உதவுகிறது. மேலும், அதில் மாற்றங்களை மீண்டும் எளிதாக செய்யலாம். மற்றும் அதற்கேற்ப மாதிரிகளை உருவாக்கலாம்.

கட்டுமானம் : கட்டுமானத் துறையில் 3D பிரிண்டிங்கிற்கான தேவை வேகமாக வளர்ந்து வருகிறது. 3D பிரிண்டிங் மூலம் பெரிய வீட்டு வசதிகள் உருவாக்கப்படுகின்றன. கட்டுமானம் என்று வரும்போது, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAE) அரசு அறிவித்துள்ள முக்கிய திட்டங்களில் ஒன்று 'துபாய் 3D பிரிண்டிங் ஸ்ட்ராடஜி'. இதில் 2025–ம் ஆண்டுக்குள் 25% புதிய கட்டிட உதிரிபாகங்கள் 3D பிரிண்டிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தை அறிமுகப்படுத்துவதுதான் உத்தி.

நகைகள் : நகைகளைப் பொறுத்தவரை, ஒவ்வொரு செயல்முறைக்கும் மிகவும் மேம்பட்ட நிபுணத்துவம் மற்றும் அறிவு அவசியம். 3D பிரிண்டிங் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப நகை வடிவமைப்புகளை முன்மாதிரியாக மாற்ற அனுமதிக்கிறது.

3D பிரிண்டிங்கின் நன்மைகள் : செலவு குறைப்பு, கழிவுகள் (wastages) குறைவு, உற்பத்தி நேரம் குறைப்பு. ஒரு மேம்பட்ட போட்டி, பிழைகள் குறைப்பு, இரகசியத்தன்மை மற்றும் தேவைக்கேற்ப உற்பத்தி.

இந்தியாவில் உள்ள ஐ.ஐ.டி.களிலேயே 3D பிரிண்டிங் லேப் உள்ள ஒரே ஐ.ஐ.டி. சென்னை ஐ.ஐ.டி.தான். 2015–ம் ஆண்டு முதல் இந்த 3D பிரிண்டிங் க்ளப் இயங்கி வருகிறது. மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கவும், புதுப்புது தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொள்ளவும், 2008–ம் ஆண்டு இந்த சென்டர் ஃபார் இன்னோவேஷன் என்ற அமைப்பு சென்னை ஐ.ஐ.டி.யில் உருவாக்கப்பட்டது. இதன் கீழ் இயங்கிவரும் அமைப்புதான் 3D பிரிண்டிங் க்ளப்.

உங்கள் வீட்டில் ஒரு போட்டோபிரேம் உடைந்துவிட்டது என்றால் கூட அதற்காக வேறு வாங்க வேண்டாம். உடனே நீங்களே பிரிண்ட்டர் மூலம் பிரிண்ட் செய்துகொள்ள முடியும். இப்படி பல விஷயங்களை வீட்டிலேயே 3D பிரிண்டர்கள் மூலம் உருவாக்க முடியும். வீட்டுக்கு ஒரு 3D பிரிண்டர் என்ற நிலைகூட வருங்காலத்தில் வரலாம். முதன்முதலில் கணினிகள் வந்தபோது இப்படித்தான் ஆடம்பரமாக செலவு மிகுந்ததாக இருந்தது. ஆனால், இன்று பலரது கைகளில் லேப்டாப்கள் இருக்கின்றன. அதுபோலவே 3D பிரிண்ட்டர்கள் தற்போது இப்படி இருந்தாலும் எதிர்காலத்தில் அனைவரது வீட்டிலும் இடம்பிடிப்பதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன.

உதிரிப்பாகங்கள் முதல் உடலுறுப்புகள் வரை... எதிர்காலத்தை ஆளப்போகும் 3D பிரிண்டிங்!

## கடல் சட்டம் LAW OF SEA

மேலையூர் ச. அன்பழகன் 98413 73184

உலகில் உள்ள நாடுகள் அனைத்துக்கும் கீழே பூமியும் மேலே வானமும் நிச்சயம் இருக்கும். இரண்டுக்கும் இடைப்பட்ட இடத்துக்கு அந்த நாடு சொந்தம் கொண்டாடும். பூமியில் பயிர் செய்யவோ கட்டிடங்கள் கட்டி ஆண்டு அனுபவிக்கவோ செய்யலாம் பூமிக்கும் மேலே வானத்துக்கும் கீழே உள்ள விண் வெளியை அவ்வாறு பயன் படுத்த முடியாது அவர்கள் நாடு மற்றும் அருகில் உள்ள நாடுகள் அந்த இடத்தில் தங்கள் விமானப் பயணத்தை மேற் கொள்ளலாம் அவ்வாறு பக்கத்து நாட்டு வான் வெளியைப் பயன் படுத்தும் நாடுகள் அவர்கள் அனுமதி பெற்றுதான் அதனைப் பயன் படுத்த முடியும்.

**கடல் பரப்பு**

எளிமையான சொற்களில் சொன்னால் பூமியின் மேற்பரப்பில் சுமார் 72% நீர் அதாவது கடலால் சூழப்பட்டு உள்ளது, மீதமுள்ள 28% தான் கண்டங்கள் மற்றும் தீவுகளைக் கொண்டுள்ளது. அந்தக் கண்டங்களில் உள்ள நாடுகளில் நடுப்பகுதியில் உள்ள நாடுகள் தங்கள் நாட்டுக்கு வெளியே கடல் பகுதியைப் பெற்றிருக்காது. கண்டங்களின் ஓரங்களைத் தங்கள் நாட்டு எல்லையாகப் பெற்றுள்ள நாடுகள் ஒரு பக்க எல்லையிலோ அல்லது இரண்டு பக்க எல்லைகளிலோ கடலைப் பெற்றிருக்கும். இந்தியா போன்ற தீபகற்பமான நாடுகள் மூன்று பக்கமும், ஸ்ரீலங்காவைப் போன்ற தீவுகள் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டிருக்கும், கடல் இல்லாமல் கண்டங்களின் நடுப்பகுதியில் இருக்கும் நாடுகளைப் பொறுத்தவரை பூமியிலும் வானத்தை நோக்கியுள்ள விண் வெளியிலும் அவர்களுக்குச் சொந்தமான எல்லைகள் மட்டும். தான் ஆனால் கடல் ஓரம் உள்ள நாடுகள் கடலிலும் அவர்களுக்குச் சொந்தமான இடம் எவ்வளவு தூரம் என்று பார்ப்பார்கள்.

**ஓஷன் என்னும் பெருங்கடலை யார் ஆட்சி செய்கிறார்கள்?**

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் மீன் பிடிக்கவும், வர்த்தகம் செய்யவும் கடல் வழியே சென்றுள்ளனர். அக்கம் பக்கத்து ஆட்சியாளர்கள் கடலுக்கான உரிமைகளையும் அதன் சுரண்டலையும் கோரியதால் போர்கள் நடத்தப்பட்டுள்ளன. அந்த மோதல்கள்இன்றுவரைதொடர்கின்றன.தற்போதுசர்வ தேச அளவில் பல நாடுகள் அவ்வாறு கடலில் உரிமை கோருவது. அதில் கப்பலைச் செலுத்த மட்டுமல்ல உண்மையில் அலைகளுக்கு அடியில் உள்ளது. கடல் தரைக்கு அடியில் புதைக் கப்பட்ட மதிப்புமிக்க தாதுக்கள் மற்றும் புதைபடிவ எரிபொருள்கள் மற்றும் பவளப் பாறைகள் போன்ற கடல் வளங்களுக்கு பிரத்தியேக உரிமைகளைப் பெறுவதற் காகத்தான பிராந்திய கடல் மற்றும் பொருளாதார மண்டலங்களின் விரிவாக்கத்தைச் சுற்றி சர்ச்சைகள் சுழல்கின்றன. தங்களின் கடல் எல்லையை விஸ்தரித்துக் கொள் ளவும் அதன் மூலம் கடலுக்கு அடியில் உள்ள இயற்கை வளங்களுக்கு உரிமை கொண்டாடவும் தான் இத்தகைய பிரச்சினைகள் தொடர்கின்றன

**கடலுக்கென தனிச் சட்டம் உள்ளதா ?**

ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடுகள் UNCLOS 1982 கடலுக்கென ஒரு சட்டத்துக்கு அடித்தளம் வகுத்துள்ளன. அதன் படி ஒரு நாடு தன்னுடைய நாட்டின் கரையிலிருந்து கடலில் 12 நாட்டிகல் மைல்கள் சுமார் 22 கி.மீ உள்ள பரப்பளவைத் தனது எல்லைக்கு உட்பட்டது என்று கூறிக் கொள்ளலாம் 1 நாடிகல் மைல் == 1.852 கி.மீ அத்துடன் . கூடுதலாக, அதன் கடற்கரைக்கு அப்பால் 200 நாட்டிகல் மைல் என்னும் கடல் மைல் நீர் நிரலை அதன் பிரத்யேக பொருளாதார மண்டலமாக அனுபவிக்க முடியும். கடல் தளத்தின் முதல் 200 கடல் மைல்களுக்கும், இது பொருந்தும். அங்கு காணப்படும் வளங்களை அந்த நாட்டால் மட்டுமே அனுபவிக்க முடியும்.

**கடல் யாருக்குச் சொந்தம் ?**

இந்தக் கேள்விக்கு விடை அளிப்பது சற்று சிக்கலானது சொல்லப்போனால் , பெருங்கடல்களை யாரும் "சொந்தமாக" கொண்டிருக்கவில்லை, அவை வெறுமனே உள்ளன. "கடல்களின் சுதந்திரம்" என்ற நடைமுறையில் கடந்த 300 ஆண்டுகளுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருந்து வருகிறது.ஆனால் கடல்களின் சில பகுதிகளில் நாடுகளுக்கு உரிமை உண்டு.

ஏற்கனவே சொன்னமாதிரி ஒரு நாடு அதன் கடற்கரையிலிருந்து 12 கடல் மைல் தூரத்திற்கு எல்லா நோக்கங்களுக்கும் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்த முடியும். , ஒரு நாடு அந்த 12 மைல் மண்டலத்திற்கு சொந்தமானது, அந்த 12–மைல் மண்டலத்திற்குப் பிறகு, தொடர்ச்சியான மண்டலம் எனப்படும் இரண்டாவது மண்டலத்திற்கான உரிமைகளைப் பயன்படுத்த நாடுகளுக்கு விருப்பம் உள்ளது. ஒரு நாட்டிற்கு 24 கடல் மைல்கள் வரை தொடர்ச்சியான மண்டலத்திற்கு உரிமை உண்டு. எவ்வாறாயினும், இந்த நீர் நாட்டின் பிரதேசத்தின் ஒரு பகுதியாக இல்லை; ஆரம்ப 12 மைல் மண்டலத்திற்குப் பிறகு, பெருங்கடல்கள் சர்வதேச நீராகின்றன

**கடலுக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது ?**

மனித வாழ்க்கையே பெருங்கடல்களிலிருந்து எழுந்ததுதான். பரந்து விரிந்து கிடக்கும் கடல் 40 மில்லியன் சதுர மைல்களை உள்ளடக்கியது, இது பூமியின் மேற்பரப்பில் 72 சதவீதம் ஆகும் . கடல் எப்போதுமே வாழ்க்கைக்கான உணவுக்கு ஒரு முக்கிய ஆதா ரமாக இருந்து வருகிறது, மேலும் ஆரம்பகால வரலாற்றிலிருந்து பார்த்தோமானால் இது வர்த்தகம் மற்றும் வர்த்தக, சாகச மற்றும் கண்டுபிடிப்பு ஆகியவற்றிற்கும் சேவை செய் துள்ளது தெரிய வரும். இது மக்களைப் பிரித்து ஒன்றிணைத்துள்ளது. இப்போது கூட, கண்டங்கள் வரைபடமாக்கப்பட்டு, அவற்றின் உட்புறங்கள் சாலை, நதி மற்றும் வான் வழியாக அணுகப்படும்போது, உலகின் பெரும்பாலான மக்கள் நாடுகளில் வசித்தாலும் கடலில் இருந்து 200 மைல்களுக்குள்ளாகவே வாழ்கின்றனர்

**ஐக்கிய நாடுகள் சபையின் கடல் சட்டம் (UNCLOS)**

மனிதகுலத்தின் தனிப்பட்ட மற்றும் பொதுவான நலனுக்காக கடல் மற்றும் பெருங்கடல்களின் அமைதியான, கூட்டுறவு, சட்டப்பூர்வமாக வரையறுக்கப்பட்ட பயன்பாடுகளை உறுதிப்படுத்த ஐக்கிய நாடுகள் சபை செயல்பட்டு வருகிறது. தெளிவாக வரையறுக்கப்பட்ட தேசிய அதிகார வரம்பைத் தாண்டி கடலோர மற்றும் கடல் தளத்தின் மீது ஒரு திறமையான சர்வதேச ஆட்சிக்கு அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது, இது 15 ஆண்டுகளாக நீடித்தது மற்றும் ஐக்கிய நாடுகளின் கடற்படைக் குழுவை உருவாக்கியது, அணு ஆயுதங்களை தடை செய்யும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது

1982 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை கூட்டிய மாநாட்டில் உருவான கடல் சட்டத்தை சர்வ தேச நாடுகள் ஏற்றுக்கொள்வதில் ஐ.நா.வின் அற்புதமான பணி சர்வதேச சட்டத்தை நமது கிரகத்தின் பரந்த, பகிரப்பட்ட நீர் வளங்களுக்கு விரிவாக்குவதில் ஒரு வரையறுக்கப்பட்ட தருணமாக உள்ளது. கடல் பயன்பாடு மற்றும் இறையாண்மை தொடர்பான பல முக்கியமான பிரச்சினைகளை இந்த மாநாடு தீர்த்து வைத்துள்ளது, அவை வருமாறு

" கடல் வழியே செல்லும் உரிமைகளை நிறுவுதல்

" ஒவ்வொரு நாட்டுக்கும் கடற்கரையிலிருந்து 12 கடல் மைல்கள் சுமார் 22 கி.மீ எல்லை அமைத்தல்

" கடற்கரையிலிருந்து 200 கடல் மைல் தூரத்தை அந்த நாட்டின் பிரத்தியேகப் பொருளாதார மண்டலமாக அமைத்தல்

" அந்த 200 மைல்களை மேலும் விஸ்தரித்து கடலில் 350 கடல் மைல் தூரத்தை கண்டங்களுக்கு ஆக்குவதற்கான விதிகளை உருவாக்குதல்

" சர்வதேச கடற்பரப்பு அதிகாரத்தை உருவாக்கியது

" மோதல்–தீர்வு வழிமுறைகளை உருவாக்கியது (எ.கா., ஐ.நா. கமிஷன் ஆஃப் லிமிட்ஸ்)

**கடல் சட்டமா / ஒப்பந்தமா**

ஐக்கிய நாடுகள் சபையின் யு.என்.சி.எல்.ஓ.எஸ் எனப்படும் மூன்றாவது சரவ தேச மாநாட்டில் உருவானதுதான் கடல் சட்டம் . சொல்லப் போனால் அது சர்வதேச நாடுகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தம் எனலாம். இந்த மாநாடு 1973 லிருந்து 1982 க்குள் நடை பெற்ற மூன்றாவது மாநாடு ஆகும் இந்த மாநாடு நாடுகளின் உரிமை மற்றும் பொறுப்புகளை வரையறுக்கிறது.

**யு.என்.சி.எல்ஓ U N C L O என்றால் என்ன ?**

UNITED NATIONS CONVENTION ON THE LAW OF THE SEA U N C L O என்றால் கடல் சட்டம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு என்பது பொருளாகும் இது 1973 லிருந்து 1982 க்குள் கடல் சட்டம் தொடர்பாக நடந்த மூன்றாவது மாநாடு ஆகும் இந்த மாநாட்டில் கடல் சட்டம் சம்பந்தமாக சர்வ தேச ஒப்பந்தம் உருவாயிற்று. ஓஷன் என்னும் உலகப் பெருங்கடல்களைப் பயன்படுத்துவது, வணிகங்கள், சுற்றுச் சூழல் மற்றும் நிர்வாகத்திற்கான வழிகாட்டுதல்களை நிறுவுதல் தொடர்பாக நாடு களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை கடல் மாநாட்டின் சட்டம் வரையறுக் கிறது. யு என் சி எல் ஓ எஸ் 1994 ல் உருவாயிற்று அதாவது கயானா ஐ.நா. ஒப்பந் தத்தை ஏற்றுக் கொண்ட 60 ஆவது நாடாக கையெழுத்திட்ட ஆண்டுக்கு அடுத்த ஆண்டில் இது நடை முறைக்கு வந்தது. 2016 ஆம் ஆண்டு ஜூன் மாத அளவில் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 167 நாடுகள் இதில் சேர்ந்துள்ளதாகத் தெரிகிறது.

**கடல் சட்டமும் சர்வ தேச சட்டமும்**

கடல் சட்டம் என்பது கடலில் பொது ஒழுங்கு தொடர்பான சர்வதேச சட்டத் தின் கிளை ஆகும் இந்தச் சட்டத்தின் பெரும்பகுதி 1982 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் தேதி கையெழுத்திடப்பட்ட கடல் சட்டம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் குறியிடப்பட்டுள்ளது. ஓஷன் என்னும் பெருங்கடல்களுக்கான அரசியல் சாஸனம் என்று விவரிக்கப்படும் இந்த மாநாடு, பிராந்திய நீர், கடல் தொடர்பான சர்வதேச சட்டத்தை குறியீடாக்கும்

முயற்சியைக் குறிக்கிறது. இது தேவையான 60 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 1994 இல் நடைமுறைக்கு வந்தது; 21 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் 150 க்கும் மேற்பட்ட நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன

**களங்கமில்லா பயணத்துக்கு innocent passage உரிமை உண்டு**

1982 மாநாட்டின் படி, ஒவ்வொரு நாட்டின் அதிகாரத்துக்கு உட்பட்ட கடல் நீரும் அதன் கடற்கரைக்கு அப்பால் அதிகபட்சம் 12 கடல் மைல் (22 கி.மீ) வரை நீண் டுள்ளது, சாதாரணமாக அந்தப் பகுதிக்குள் இதரநாடுகள் வர உரிமை இல்லை ஆனால் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு இந்த மண்டலம் வழியாக தப்பான நோக்கம் ஏதும் இல்லாமல் களங்கமற்றப் பயணம் செல்ல உரிமை வழங்கப்படுகிறது. தப்பான நோக்கம் இல்லாமை என்பது ஆயுத சோதனை, உளவு, கடத்தல், கடுமையான மாசுபாடு, மீன்பிடித்தல் அல்லது விஞ்ஞான ஆராய்ச்சி உள்ளிட்ட சில தடை செய்யப்பட்ட செயல்களில் ஒரு கப்பல் ஈடுபடுவதைத் தவிர்ப்பது ஆகும்

**விதி முறைகள் கடலின் அடித்தளத்துக்கு மட்டுமே**

இந்த விதிமுறைகள் கடல் தளத்துடன் மட்டுமே தொடர்புடையவை. அதாவது கடலுக்கு அடியில் உள்ள பவளப் பாறைகள் மற்றும் கனிம வளங்கள் போன்றவைகளுக்காக மட்டுமே. ஆனால் கடலுக்கு மேலே உள்ள நீரின் வெகுஜனங்களும், மற்றும் அவற்றில் பயணிக்கும் அனைத்தும் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டவை. பொருளாதார மண்டலங்களுக்குள், கடல் வளங்களை சுரண்டுதல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவற்றுக்கு அந்த நாட்டின் தேசிய சட்டங்கள் பொருந்தும். கூடுதலாக, உயர் கடல்களின் சட்டம் பொருந்தும் – இது சர்வதேச சட்டத்தின் ஒரு பகுதியாகும். ஆனால் இது சில குறைபாடுகளையும் கொண்டுள்ளது: கடற் கொள்ளையர்களைப் பிடிக்கும் எவரும் அவரைப் பிடித்து வைக்க முடியும். தடுத்து, ஆனால் கடலை மாசுபடுத்துபவர்கள், சட்டவிரோத மீன் பிடிப்பவர்கள் கடற்படைகள், பயங்கரவாதிகள், ஆயுதங்கள் விற்பவர்கள் மருந்து கடத்துபவர்கள் மற்றும் மக்களைக் கடத்துபவர்களை அவ்வாறு செய்ய முடியாது. அவர்களை அந்த சம்பந்தப்பட்ட நாடுதான் பிடிக்க வேண்டும்

கடலை ஒரு பக்க எல்லையில் கொண்டுள்ள நாடுகளுக்கு அந்தக் கடலில் குறிப்பிட்ட தூரம் வரைக்கும் உரிமை உண்டு என்பதையும் அந்தக் கடல் பற்றிய சட்டங்களையும் அறியாதவர்கள் ஓரளவு தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்ட கட்டுரை. மேற்கொண்டு விபரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட சட்டம் அல்லது வழக்கறிஞர் உதவியை நாடுவதே பயனுள்ளதாக இருக்கும்

சம்பந்தப்பட்ட சட்டம் மற்றும் போயெல்.டி. யுஎன்.ஓ ஆர் ஜி, விக்கீபீடியா.ஓ ஆர் ஜி கோரா.காம் மற்றும் பிரிட்டானிகா.காம்போன்ற இணையதளங்களிலிருந்து தொகுக்கப் பட்டது.

---

## கோமாதா பூஜையின் 24-ஆம் ஆண்டு விழா.

பெருமைமிகு பெண்ணாகடம் நகரில் கோமாதா குடும்பத்தின் சார்பாக ''கோமாதா பூஜையின் 24–ஆம் ஆண்டு விழா'' சோபகிருது ஆண்டு தை 14 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (28–01–2024) மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

காலை 5.00 மணி அளவில் பெண்ணகடம் சரோ இரத்தின அரங்கம் திருமண மண்டபத்தில் திருப்பள்ளி எழுச்சி, கோமாதா பூஜை, ரிஷப கொடியேற்றம் ஆகிய நிகழ்வுகளுடன் ஆண்டு விழா துவங்கியது. தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் இருந்து வந்த சிவனடியார்களின் சிவபூஜை நடைபெற்றது. பூஜையின் இறுதியில் தீப ஆராதனை, விபூதி அருள் பிரசாதம் வழங்குதல் நடைபெற்றது. சிவனடியார்கள் அனைவருக்கும் காலை சிற்றுண்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து பெண்ணாகடம் மேலரதவீதியில் அமைந்துள்ள அருள்மிகு வீற்றிருந்த பெருமாள் கோயிலில் கோமாதா பூஜை மிகச்சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக அருள்மிகு வீற்றிருந்த பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீப ஆராதனை நடைபெற்றது. பொது மக்கள் அனைவரும் கோமாதாவிற்கு தாங்களாகவே பூஜை செய்தனர். பூஜை முடிந்து பிரசாதம் அனைவருக்கும் வழங்கப்பட்டு நிகழ்வு இனிதே நிறைவுற்றது. கார்காத்தார் மகளிர் அணியினர் கோமாதா குடும்பத்தினர் இணைந்து நிகழ்ச்சி ஏற்பாடு சிறப்பாக செய்திருந்தனர்.

கோமாதா பூஜை கோடிநன்மை! கோமாதா சேவை அனைவருக்கும் நன்மை!

– அ. இரத்தினசபாபதி,
பெண்ணாகடம்.
7598008674

# ஜோதிடம் அளித்திடும் மனோதிடம்

ஞான. அம்புலி

ஜோதிடம் என்பது ஒருவன் பிறந்த கணத்தில் இருந்த கோள்களின் நிலை மற்றும் விண்மீன்களின் அமைப்பைக் கொண்டு கணக்கிடப்படுவதாகும். சற்று விரிவுபடுத்திச் சொன்னால் இராசிகள், நட்சத்திரங்கள், கிரகங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சரியான காலத்தை அறியவும் எதிர்கால நிகழ்வுகளை எடுத்துக் கூறவும் உபயோகப்படுவது ஜோதிடம்.

நீலமாய் தோன்றும் எல்லையற்ற ஆகாயத்தில் கோடான கோடி கிரகங்கள் சுழன்று கொண்டிருக்கின்றன. இந்த கிரகங்கள் தன்னைத்தானே சுற்றுவதோடு பிரபஞ்சத்திலுள்ள சூரிய கிரகத்தையும் சுற்றி சுற்றி வருகின்றன. பெரும்பாலான கிரகங்கள் பூமியை விட பெரியவைகளாகும். இவைகளின் பாதைகள் மாறி வருகின்றன. இந்த கிரகங்களின் செயல்பாட்டை எவ்வித தொலைநோக்கு கருவிகள் (Telescope) இல்லாமல் நமது முன்னோர்கள் (ரிஷிகள், முனிவர்கள்) பலவித கணக்குகள் மூலமாக துல்லியமாக கணித்து வைத்துள்ளார்கள். அவை அனைத்தும் 100 சதவீதம் சரியென நவீன விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சிகள் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

இந்த கிரகங்களில் நமது முன்னோர்கள் 9 கிரகங்களை தேர்வு செய்து அவைகளினால் மனித குலத்திற்கு ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களுக்குஏற்ற பெயர்களைச் சூட்டி அவைகளின் சுற்றுப்பாதை, அவைகள் திசை மாறும் போது ஏற்படும் வேறுபாடுகள் அனைத்தையும் வரிசைப்படுத்தியுள்ளனர், அதோடு இந்த கிரகங்களில் ஏற்படும் மாற்றங்கள் நம் பூமியிலுள்ள மனிதர்கள் மற்றும் ஏனைய உயிரினங்களிடம் பிறப்பிலிருந்து இறப்பு வரை பலவித வினோத மாற்றங்களை ஏற்படுத்தி வருவதை அறிந்து அவைகளைப் பற்றியும் அவைகளின் தாக்கத்தை குறைக்க பரிகாரம் பிரார்த்தனை போன்றவைகளையும் எழுதி வைத்துச் சென்றுள்ளனர்.

உலகில் பல நாடுகளில் ஜோதிடம் இன்று கடைபிடிக்கப்பட்டு வந்தாலும் இந்தியாவில்தான் முதன் முதலாக ஜோதிடம் ஏற்கக்கூடிய வடிவம் பெற்றதாம். அதுவும் தமிழ்நாட்டில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. ஜோதிடம் நிகழ்கால நிலைகளை உறுதிப்படுத்துவதோடு கடந்த காலம், எதிர்காலம் ஆகியவைகளைப் பற்றியும் முற்பிறவிகள் பற்றியும் பட்டியலிட்டுக் காட்டுகின்றனவாம். ஜோதிடத்தின் நம்பகத் தன்மையினை பற்றி பல சர்ச்சைகள், எதிர்வாதங்கள் நெடுங்காலமாய் நிலவி வந்தாலும் ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஜோதிடம் பல வகைகளில் உதவி வருவதாய் ஆணித்தரமாய் அழுத்தமாய் கூறி வருகிறார்கள். குறிப்பாக எதிர்கால நிகழ்வுகள் உத்தேசமாக அறியப்படும் போது தக்க பரிகார நடவடிக்கைகள் மூலம் தீயவைகளின் தாக்கத்தை குறைக்கவும் ஓரளவு கட்டுப்படுத்தவும் முடியுமென உறுதியாய் நம்பப்படுகிறது. இளைய சமுதாயம் ஜோதிடம் பற்றி அறிந்துகொள்ள ஆவல் கொண்டுள்ளது என்பதை கண்கூடாக காணமுடிகிறது. கல்வி நிலையங்களில் ஜோதிடம் கற்றுத்தரப்படுதலும் ஜோதிடம் பற்றி நிறைய புத்தகங்கள் விற்கப்படுவதும் மகிழ்ச்சி அளிப்பதாகும். கிரகங்களின் பாதையை திசையை மாற்ற முடியாவிட்டாலும் அவைகளின் தாக்கத்தை நேர் கோட்டிலேயே சந்திக்க சந்தர்ப்பம் பெற்று அனுமானமாய் ஆக்கப்பூர்வமாய் அனுகூலம் பெறுவதே ஜோதிட வழியாகும்.

ஜோதி என்பது வெளிச்சம். ஜோதி மயமான கிரகங்களின் அதிபதிகள் ஜோதிடர்கள் எனப்படுவர். இந்த ஜோதிடர்களின் வானில நிலைகளைக் கொண்டு அடிப்படையில் கணிக்கப்படுவதை ஜோதிடம் என்பர்.

ஜோதிடம் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். ஜோதிடம் ஒரு காலக் கண்ணாடி, வருமுன் காக்க செய்யம் வலிமை கொண்டது. ஜோதிடம் பிறப்பின்பால் வரும் துன்பங்கள் இப்பிறப்பில் செய்யப்படும் தவறுகளையும் உள்ளடக்கி Magnify ஆகாமல் இருக்கவும் பாதிப்பின் தாக்கத்தை குறைக்கவும் வேறு வகையான அனைத்து உதவிகள் செய்து கொண்டுதான் இருப்பதாக பலர் கூற கேட்டிடலாம். மனமுருகி உண்மையாய் பரிகாரம் செய்வது இறைவனிடம் பாவ மன்னிப்பு கேட்கும் செயலாகவும் கருதப்படுவதால் அது தரும் பலன் மீது பெரும்பாலான மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். இந்த செயலைத்தான் உலகிலுள்ள அனைத்து மதங்களும் கடைபிடிக்க பிரச்சாரம் மேற்கொண்டுள்ளன. ஜோதிட விதி முறைகளை பின்பற்றுவதின் மூலம் நல் வழியில் ஒழுகலாம். துன்பங்களை முன்னதாய் அறிந்தால் பிரார்த்தனை, பரிகாரம், போன்ற தற்காப்பு கேடயம் அணிந்து துயர் தரும் தாக்கத்தை வலுவிழக்க செய்திட குறைத்திட ஏதுவாகும்.

'Fools obey planets while wisemen control them' என்றொரு ஆங்கில பழமொழி உண்டு.

காளிதாசன் என்ற புலவர் "ஜோதிடர்கள் கிரகங்கள் அசைவுகளைக் கொண்டு இயன்றவரை பலாபலன்களை முன்கூட்டி அறிவிக்கிறார்கள். புள்ளியியல் ஆதாரத்தோடு எள்ளளவும் பிசகு இன்றி கணிக்கப்பட்டாலும் நம்மைப் படைத்த

பிரம்மனைத் தவிர வேறு எவராலும் இதுதான் நடக்கும் என முழுமையாய் கணிக்க முடியாது'' எனச் சொல்லியுள்ளார். இந்த கருத்து இறையருள் பெற்றால்தான் எதுவும் நடக்கும் என்ற தார்மீக கொள்கையின் அடிப்படையில் சொல்லப்பட்டாலும் ஜோதிடத்தை Micor Level அளவு கணித்த பல ரிஷிகள் ஜோதிடத்தின் மூலம் பின் வரும் நிகழ்வுகளை முன் கூட்டி அறிவதன் மூலமும் பிரார்த்தனை பரிகாரம் மூலமும் மனதளவிலும் உடலளவிலும் ஏற்படும் கேடுகள் குறைக்கப்படும் அல்லது கட்டுப் படுத்தப்படும் (அறவே நீக்கப்படும் என்று சொல்லப்படவேயில்லை) எனச் சொல்லியுள்ளனர். பலான கோடி ஆன்மீக சரித்திர நிகழ்வுகள் இதனை உறுதி செய்கின்றன.

புலவர் காளிதாசன் கூற்றுப்படி சிலரது ஜோதிட அனுமானங்கள் பொருந்தாமலும் இருக்கலாம். இதற்கு முக்கிய காரணம் ஒரு விஷயத்தை ஒரு கிரகம் மட்டும் தீர்மானிப்பதில்லை. 'சேர்க்கை பார்வை பலன்' போன்ற விஷயங்களோடு இணைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறன்றது. அடுத்து அது நடக்கும் காலம் முக்கியம், அதை தீர்மானிப்பதில்தான் ஜாதகம் பார்த்து பலன் சொல்வதின் வெற்றி இருக்கிறது. இந்த நுண்ணிய அறிவியலோடு பல ஜோதிடர்கள் ஜாதகத்தை கணிக்காததால்தான் ஜோதிடம் பற்றிய சந்தேகங்கள் அவ்வப்போது எழுப்பப்படுகின்றன.

ஜோதிடம் கடைபிடிக்கப்படும் உலகின் பல்வேறு நாடுகளில் பல நிலைகளில் பல செயல்களில் ஜோதிடம் பயனளிக்காத ஒரு முயற்சி என்று கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தாலும் ஜோதிடத்தின் ஸ்திரத்தன்மையும் உண்மை நிலையும் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. மேற்கத்திய ஜோதிடங்கள் கடந்த சில நூற்றாண்டுகளில் அபரிமிதமாக வளர்ச்சியடைந்துள்ளது. 12 இராசிகள் அந்நாடுகளின் ஜோதிடத்தின் அடித்தளத்தை உருவாக்குகின்றன. இவர்களது கிரிகோரியன் நாட்காட்டியில் 12 மாதங்களுக்கு 12 ராசி அடையாளங்கள் காட்டப்பட்டுள்ளன. வெள்ளையர்கள் கையாளும் ஜோதிட சாஸ்திரம் சூரியனின் சலனத்தைக் கொண்டு மற்ற கிரகங்களின் இருப்பைக் கணிப்பது. இந்து ஜோதிடம் சந்திரனின் சலனமாகும்.

மனிதர்களின் நல்வாழ்க்கைக்கு துணை நின்று உதவிட இறைவன் தந்திட்ட திட்டமான ஜோதிடம் மூலம் சில வியக்கத்தக்க செய்திகளும் கண்டறியப்பட்டுள்ளன. அவைகளில் மனித குலத்தின் தோற்றத்தைபற்றியதுஒன்றாகும்.கடல்தான் அனைத்து உயிரினங்களின் தொட்டில் என அதர்வண வேதம் கூறுகிறது. உலகம் தோன்றிய நாளிலிருந்து தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் பௌதீக இரசாயன கூட்டுச் செயல்திறனால் உண்டான இயற்கை விளைவுகளால் தான் உயிரினங்கள் தோன்றின என்பதை அறிவியல் துறை ஏற்றுக்கொண்டுள்ளது.

விஞ்ஞானப் பாடங்கள் சட்டதிட்டங்களைக் கொண்டு மட்டும் அறியவல்லன. ஆனால் ஜோதிட சாஸ்திரத்தில் விதிமுறைகளை அறிவதோடு கடவுளின் அருளால் தீர்க்க தரிசனம் இயற்கையின் ரகசியங்களைச் சரியாக முன்னுணரும் திறன் (Intution) என்பவை இரண்டும் தேவையாகும்.

பூமியிலிருந்து வெவ்வேறு தூரத்தில் வெவ்வேறு பாதைகளில் சுற்றி வரும் கிரகங்கள் Elec, Pulses களைப்போன்று அதிர்வலைகளின் கதிர் வீச்சை (Cosmatic rays) வீசிக்கொண்டே இருக்குமாம். இத்தகைய கதிர்வீச்சின் தன்மைகள் கிரகங்களுக்குள் ஏற்படும் மாற்றத்துக்கு தக்கவாறு அதன் ஓடு பாதை அவ்வப்போது மாறுபட்டுக்கொண்டே இருக்குமாம். பூமியில் ஒரு குழந்தை தாயின் கருவறையில் இருக்கும் வரை எந்த கதிர்வீச்சும் அக்குழந்தையை அண்ட முடியாது. ஆயினும் குழந்தை பிறந்தவுடன் அத்தருணத்தில் பூமியில் உள்ள கிரகங்களின் கதிர்வீச்சு அக்குழந்தையின் உடலுக்குள் காற்றோடு சென்று அக்குழந்தையின் உயிர்நிலையோடு ஒன்றாக கலந்துஅதனின்வாழ்க்கைநெறிதீர்மானிக்கப்படுமாம். அந்த வாழ்க்கை நெறியைத் தான் ஜோதிடர்கள் கணித்து ஜாதகமாக எழுதுகிறார்கள். குழந்தை பிறப்பதற்கு சற்று முன் தாயின் வயிற்றில் இருந்த போது அக்குழந்தையின் உடலின் நிலை, குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தையின் உள்கட்டமைப்பின் மாறிய நிலை ஆகியவைகள் விஞ்ஞானப் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அதோடு அக்குழந்தையின் கிரக – லக்ன – அமைப்புக்களைக் கொண்டு ஓரளவு அக்குழந்தையின் வாழ்க்கைப் பலனை தெரிந்து கொள்ளமுடியுமென கருதப்படுகின்றன.

ஜாதகத்தின்படி விதியினால் மாற்ற முடியாதவைகளில் முக்கியமானவை ஆயுள் மற்றும் சில கொடிய நோய்கள், இவைகளைத் தவிர மற்றவைகளை நமது திட நம்பிக்கை, மற்றும் முயற்சி மூலமும், பிரார்த்தனை மற்றும் பரிகாரம் மூலமும் ஓரளவு மாற்றத்தக்கவையே. விதியின் வலி கொடியதாயினும் அதன் வலிமையும் மகத்தானது திசை மாறும் இயற்கை சீற்றம், உயிர் கொல்லி விஷமானது உயிர் காக்கும் மருந்தாவது இவையெல்லாம் விதி வலிமையின் positive நிகழ்வுகளன்றோ.

நம் ஜோதிடம் போன்று பல்வேறு வகையான அமைப்புகள் பல நாடுகளில் உள்ளன. நாம் ஜென்ம நட்சத்திரத்தை வைத்து ஜாதகம் கணிக்கிறோம்.

இதற்கு ஈடான வேறொரு அமைப்பின்படி பல நாடுகளில் பிறப்பின் குணாதிசயங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

தானங்களில் சிறந்தது ஆன்மீக தானம் என்பர். ஒருவனுக்கு ஆன்மீக தானம் கிடைக்குமானால் பசி, தூக்கம், பிணி எதுவும் அவனை ஒன்றும் செய்திட முடியாது என்பது மூத்தோர் நிலை, (காட்டில் தவமிருக்கும் ரிஷிகள் நிலை) இந்த நிலையை அடுத்தோருக்கு அளித்திட ஜோதிடம் துணை நிற்கும்.

ஜோதிடமானது மைவித்தைகள், பில்லி, ஏவல், சூன்யம், மந்திர வித்தைகள், கைரேகை முதலான எந்தத் துறையுடனும் சேர்ந்தது அல்ல.

ஜோதிடத்தில் மொத்தம் பத்து பிரிவுகள் உள்ளன. அவைகளில் ஒன்றின் மூலம் ஒரு தனிமனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் ஏற்ற தாழ்வுகள், சூழ்நிலைகள் ஏனைய பல சம்பவங்களைப் பற்றி அறியப்படுகிறது. இதுவே ஜாதகம் எனவும் சொல்லப்படுகிறது.

ஜோதிடம் வேதத்தின் ஆறு பாகங்களில் ஒன்றாகும். எனவே இது அனாதியானது. ஆதலின் வேதம் உள்ளளவும் ஜோதிடம் நின்று பயன்படும்.

பிறவியெடுத்துள்ள அனைவருக்கும் ப்ராப்த கர்மங்களுக்கு ஏற்ப கஷ்ட நஷ்டங்களும், வாழ்க்கை அமைப்பும் ஏற்படுகின்றன. இதுபற்றி ஜோதிடம் மூலம் முன்கூட்டியே அறியப்படுமானால், விதிப் பயனால் கஷ்டங்களுக்கு உள்ளானவர்கள் அவசரமாக உடனே எம்பெருமானின் கருணையைப் பெற எவ்வளவோ ஆன்மீக வழிகளை ரிஷிமுனிவர்களும் ஆழ்வார் ஆச்சாரியர்களும் விட்டுச் சென்றுள்ளனர். அவைகளின் சாரம் இறைபக்தி எனப்படுவதாகும். பலவிதமான பிரார்த்தனைகளும் பரிகாரச் செயல்களும் இதில் அடங்கும். இந்த அணுகுமுறை தொடர்வதால் பலன்கள் பெற்றிடுவதாய் எடுத்துக்கொள்ளலாம்.

ஜோதிடம் கரை ஏதுமில்லாத மனித (கடல்) வாழ்க்கைக்கு ஒரு நல்ல திசைகாட்டும்கருவி, துணிவில்லாருக்கு துணை போகும் சேவகன் முற்றும் துறந்தோருக்கும் முதியோருக்கும் ஒரு ஊன்று கோல். தன்னிலை இழந்தோரின் தன்னம்பிக்கையை வலுப்படுத்தும் தாரகமந்திரம், நேர்மையோடு வாழ விரும்புவோருக்கு ஒரு உரிமைக்குரல். பள்ளப்பாதையில் பயணிப்போருக்கு ஒரு எச்சரிக்கை மணி. இவ்வுலகம் இருட்டறை என்போருக்கு ஒரு அணையா விளக்கு. எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மீக பயணம் மேற்கொள்வோர்க்கு நல்ல வழிகாட்டி. தோற்றம் தொன்றுதொட்டு இருந்தாலும் ஜோதிடம் என்பது அறிவியல் சார்ந்த உண்மையென்பதாம்! இந்த ஆரூடம் புரிவது வாழ்வியலுக்கு தகுந்த நன்மை தருவதாம்!


SRI ANJANYAR THUNAI

**Cell : 93645 65546**

**C. CHITRA,** B.Sc., (M.D.)



# CS APPARELS

**Website :www.csapparels.in**

**GSTIN : 33AASFC7108F1ZI**

**IMPORT EXPORT CODE : AASFC7108F**

# CS TEXTILE PROCESS

**GSTIN : 33AAKFC0941L1ZI TAN No. : CMBC05827D**

Factory : **KVR Nagar, Mangalam Road (Unit - II)**

Office : **No. 208, Puthunagar 7th Street, Nallur, Kangeyam Road, Tirupur - 641 606.**

Buyers : **1. FILA (UK), 2. MANGO (SPAIN), 3. ADIDAS (GERMANY), 4. RELIANCE (INDIA)**

**"QUALITY IS OUR LIFE"**



# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: **94437 00375**

Email: thiagu1943@gmail.com

பெரும்பாலான தோல்விகளுக்குக் காரணம் நம்மிடமுள்ள அவநம்பிக்கையே.

## உழைப்பின் உன்னதம்

சமீபத்தில் ஒரு கூட்டத்தில் ஒரு அரசியல் பிரமுகர்.திரைத்துறை பிரபலம் கலந்து கொண்டனர்.அவர்களை சூழ்ந்துகொண்டு .மேலே விழாதகுறையாக அவர்களிடம் கைகொடுத்து ஒவ்வொருவரும் அறிமுகப்படுத்திக் கொண்டனர்.வேற்றுகிரகவாசிகளைக் கண்டதுபோல,அவர்களும் நம்மைப்போன்ற மனிதர்கள்தானே.நாம் ஏன் அவர்களை அப்படித் தொந்தரவு செய்யவேண்டும்? அவர்களைக் கண்டுகொள்ளவே வேண்டாம் என்று சொல்லவில்லை.கூர்ந்து கவனியுங்கள்.இவ்வளவு பேர் அவர்களைச் சந்திக்க விரும்புகிறார்கள் என்றால் .அந்த நிலையை அடைய எவ்வளவு உழைத்திருப்பார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள்.நீங்களும் முயற்சி செய்யுங்கள். அந்த நிலையை அடையுங்கள்! உழைப்பின் சக்தியே உலகில் மிக மிக உன்னதமானது.அதனை வெற்றிகொள்ளும் ஆற்றல் வேறு உந்த சக்திக்கும் கிடையாது.

வாழ்க்கையில் ஒருவர் முன்னேற தேவை உழைப்பா.அதிஷ்டமா?இந்த இரண்டில் ஒன்று? இது தொன்றுதொட்டு மனிதர் குலத்தை ஆட்டிப்படைக்கும் கேள்விகளுள் ஒன்று .ஒருவன் வாழ்க்கையில் வெற்றி பெற்று மகிழ்ச்சியோடு இருக்கிறான் என்றால்,அதற்குக் காரணம் அவனுடைய

உழைப்பு மட்டும் இல்லை.அதிஷ்டமும் ஒரு காரணம்.கடுமையாகப் படித்து பரீட்சைக்கு செல்லும் ஒரு மாணவனுக்கு பெஸ்ட் ஆஃப் லக் எனச் சொல்லுகிறோம் .அதுபோல் நேர்முகத்தேர்வுக்குச்

சொல்லுவதும் பெஸ்ட் ஆஃப் லக் தான் .ஒருவர் வாழ்க்கையில் வெற்றிபெற அதிஷ்டம் தேவை என்பது தெரிகிறது.ஆனால் அந்த அதிஷ்டம் எவ்வளவு சதவிகிதம் இருக்கவேண்டும் தெரியுமா? இதோ இந்த அளவு உழைப்பு 99,அதிஷ்டம் 1.

உழைப்பின் சக்தியே உலகில் மிக உன்னதமானது,அதை வெற்றிகொள்ளும் ஆற்றல் வேறெந்த சக்திக்கும் கிடையாது.

## சந்தோஷம்

சந்தோஷம் வெளியிலிருந்து வாங்கும் பொருள் அல்ல. அது நாமாக உருவாக்கிக் கொள்ளக் கூடியது. அடுத்தவர்கள் அனுபவிப்பதையெல்லாம் பார்த்து பொறாமைப்பட்டு ,அவற்றை நாமும் அனுபவிக்கவேண்டுமென ஆசைப்பட்டு, அந்த ஆசைகளை கடன் வாங்கியாவது நிறைவேற்றிக் கொள்பவர்கள்தான்தூக்கத்தை தொலைத்து துக்கத்தில் தவிக்கிறார்கள். இருப்தைக் கொண்டு சிறப்புடன்வாழ்பவனே புத்திசாலி.அவனே சந்தோஷமாக இருப்பவன். எவ்வளவுதான் முன்னெச்சரிக்கையாக இருந்தாலும் , எதிர்பாராத சிக்கல், பிரச்சனை, தடுமாற்றங்களால் மனம் நொடித்துபோய் கவலையும் கலக்கமும் உங்கள் சந்தோஷத்தினை விரட்டுகிறதா? எதிர்பாராமல் குறுக்கிடுவதை விதி என்பதைத்தவிர வேறு என்ன பண்ண முடியும்? இதுவும் கடந்துபோகும் என்று சமாளிக்கத் தயாராகுங்கள். சந்தோஷம் உங்களை நிழல்போல தொடரும். சந்தோஷத்தைத் தேடாதீர்கள். ஆனால் எப்போதும் சந்தோஷமாக இருக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

## மூளைக்கு வேலை

1) 2 அடி உயரமும் 2 அடிவிட்டமும் கொண்ட ஒரு காலியான பிளாஸ்டிக் கூடையில் உங்களால் அதிகபட்சம் அரை அடி விட்டமுள்ள எத்தனை டென்னிஸ் பந்துகளைப் போடமுடியும்?
2) ஒரு முட்டையை 50 அடி தூரம்வரை உடையாமல் கீழே போடவேண்டும் .எப்படி?
3) மணி ,பாபு, ராமு ,சீனு ஆகிய நான்கு பேர் ஒரு வரிசையில் நிற்கிறார்கள்.மணி பாபுவுக்கு வலதுபுறம் இருக்கிறான்.ராமு மணிக்கு வலது புறம் இருக்கிறான்.சீனு,ராமு ,மணிக்கு இடதுபுறம் இருக்கிறான்.அவர்கள் நின்ற வரிசை என்ன ?



**சொல்லுக சொல்லின் பயன் உடைய ,சொல்லற்க**

**சொல்லின் பயன் இலாச் சொல்.**

ஒருவன் தனக்கும் பிறர்க்கும் பயன் தரத்தக்க சொற்களையே பேச வேண்டும்.பயன் தராத சொற்களைப் பேசுதல் தவிர்த்தல் வேண்டும்.



## சிரிக்கலாம் வாங்க

1. உங்க குடையிலே ஓட்டைப் போட்டீங்களே எதுக்குங்க ?
   அதுவா ! மழைபெய்யுதான்னு பார்க்கணுமில்ல.
2. பாவம் அந்த மனுஷன் !பல வருஷமா சகல வசதியோட சந்தோஷமா இருந்தார் ! இனிமே என்ன பண்ணப்போறாரோ ?
   இப்ப என்னங்க ஆச்சு அவருக்கு ?
   ஜெயில்ல இருந்து அவரை ரிலீஸ் பண்ணிட்டாங்க !
3. மேட்டூர் அணை ஒரு நாளிலேயே ஆறு அடி உயர்ந்ததுன்னு கட்டுக்கதை விடறாங்க பேப்பர்ல ! எப்படி சொல்ற ?
   நான் தினமும் அணையை பார்க்கிறேன்.கொத்தனார் எப்படி கட்டினாரோ,அப்படியேதான் இருக்கு !
4. என் பையன் செய்த காரியத்தால நான் தலையை வெளியே காட்டமுடியலை ! ஏன் சார் ?
   என் விக்கை அவன் எடுத்து போட்டுகிட்டுபோய்ட்டான் !
5. பெரியவர்: கோயிலில் ஒருவர் நன்றாக நாதஸ்வரம் வாசிக்கிறாரே ! கேட்டியா ?
   சிறுவன்: கேட்டேன் தாத்தா ! ஆனால் அவர்தான் தரமாட்டேன்னுட்டார்.
6. ஒருவர்: வீடுக்கு வீடு பொய் பிச்சை கேட்க உனக்கு வெட்கமாக இல்லையா ?
   பிச்சைக்காரன்: என்னங்க செய்யறது ?யாரும் என் வீட தேடிவந்து போட மாட்டேங்கிறாங்களே !
7. நீ அந்த ஆளைக் கொலை பண்றதுக்கு முன்ன , அவர் கண்ணை ஏன் துணியால் கட்டின ?
   அவர் ஐ விட்னஸ் ஆயிடக்கூடாதேன்னுதான்
8. சாப்பிட வந்தவர்கிட்டே என்னய்யா சொன்ன ? சாப்பிடாம எழுந்து போயிட்டாரு......
   எங்க ஓட்டல்ல செஞ்சது எல்லாமே உங்க வீட்டுல செஞ்சது மாதிரியே இருக்கும்னுதான் சார் சொன்னேன்

## இந்த நாட்டில் இப்படி!

1 சீனாவில்: கடன் வாங்கிக் கழித்தல் இயல்பாக நம் பள்ளிக்கூடங்களில் கணக்குச் சொல்லிக் கொடுக்கும்போது கடன் வாங்கிக் கழித்தல் என்று ஒரு கணக்கு இருக்கிறது.இந்த எண்ணிலே இதைக் கழிக்க முடியாது என்ன செய்யலாம் ?பக்கத்தில் இருக்கிற எண்ணிலே கடன் வாங்குங்கள்.கடன் வாங்குவதற்கு அங்கேயே நாம் கற்பிக்கப்படுகின்றோம்.வாங்கிய கடனை இந்த எண் அந்த எண்ணுக்கு எப்போதாவது திருப்பிக் கொடுத்திருக்கிறதா என்றால் இல்லை.ஆனால் இதே கணக்கை சீனாவில் எப்படிச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது: அங்கே அந்தக் கணக்கு அந்தப் பொருளில் இல்லை.இங்கே குறைவாக இருக்கிறது.இங்கே தேவைக்குமேல் கூடுதலாக இருக்கிறது.எனவே அங்கேயிருந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கிறார்கள். சிறுவர்களுக்கு பயிற்றுவிக்கும் முறையில்தான் எத்தகைய வேறுபாடு.பிள்ளைகளின் மனதில் ஏற்படும் விளைவுகள் வேறாகத்தானே இருக்கும் என்பதை நாம் காணமுடிகிறது ?

2. ஜப்பான்: ஜப்பானிய மொழியில் உழைப்பு என்ற அர்த்தத்தைக் கொடுக்கக் கூடிய சொற்கள் பல இருக்கின்றன. ஆனால் ஓய்வு என்ற வார்த்தையைக் குறிக்கும் சொல் அம்மொழியில் இன்றுவரை இல்லை.

3. ஆஸ்திரேலியா: மழையை வரவழைக்க ஆஸ்திரேலியாவிலுள்ள ஆதிவாசிகள் ,ஆகாசத்தை நோக்கி எச்சிலைத் துப்புவார்கள்.ஆகாயமும் பதிலுக்கு எச்சிலை(மழையைத்)துப்பும் என்று நம்பப்படுகிறது.

## எவருக்குதான் பிரச்சனை இல்லை

நண்பன் செய்த நம்பிக்கைத் துரோகம்,நோய், கடன்சுமை என்று ஏகப்பட்ட பிரச்சனைகள் கொண்ட மூட்டையோடு ஒருவர் அவ்வழியில் ஒரு மகானை சந்தித்தார். தனது பிரச்சனைகளையெல்லாம் கூறினார். கேட்டுக்கொண்டிருந்த சாமியாரும் உன் பிரச்சனைகளைக் கேட்டால் மிகப் பரிதாபமாகத்தான் இருக்கிறது ஆனால் இவ்வளவு பெரிய மூட்டையை என்னாலும் சுமக்கமுடியாது. வேண்டுமானால் உனக்கு நான் ஒரு உதவி செய்கிறேன்.உன் பிரச்சனை மூட்டையை இதோ,இந்த அறைக்குள் இறக்கி வைத்துவிட்டு அதற்குப் பதிலாக அங்கே இருக்கும் வேறு ஏதாவது ஒரு சின்ன மூட்டையை எடுத்துக் கொண்டுபோ என்றார்.அவனும் அப்படியே தன்பிரச்சனை மூட்டையோடு அந்த அறைக்குள்போனான். தன் மூட்டையைவிட சிறிய மூட்டை ஏதாவது இருக்கிறதா என்று தேடிப்பார்த்தான் எல்லாமே இவன்மூட்டையைவிட பெரிதாகவே இருந்தன. கடைசியில் மற்றவர்களின் சுமையைவிட தன்சுமையே பரவாயில்லை என நிம்மதி அடைந்தவனாகதன் பிரச்சனை மூட்டையைத் தூக்கிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தான்.

## மக்குகள் எங்கு உருவாகிறார்கள்?

ஒருவரை மக்கு என்கிறோம் மற்றொருவரை கெட்டிக்காரர் என்கிறோம். இவர்கள் ஒரே நாளில் உருவாக்கப்படுவதில்லை.பள்ளியில் படிக்கும்போது கணக்கு சரியாகப் போடவில்லை யென்றால் கணக்கில் மக்கு என்று கணக்கு வாத்தியார் முத்திரை குத்துகிறார்.படித்து முடித்தபின் வேலையில் சேர்ந்தால் அவரது உயர் அதிகாரியும்,சக ஊழியர்களும் சேர்ந்து .மக்கு என இரண்டாம் முறையாக முத்திரை குத்துகிறார்கள். திருமணமானபிறகு.... என்கணவர் நல்லவர்தான் இருந்தாலும் சில விஷயங்களில் அவர் மக்குதான்... என மனைவியும் தன்பங்குக்கு மூன்றாம் முறையாக முத்திரையிடத் தவறுவதில்லை.இக்காலகட்டங்களைத் தாண்டி பிள்ளையைப் பெற்றெடுத்து ,படிக்கவைத்து படிக்கவைத்தவேலையில் சேர்ந்து அவனுக்கு திருமணம் செய்துவைத்தபிறகு அவனும் தனது பங்கை விட்டுவைப்பதில்லை.நான்காம் முறையாக ...அப்பா சரியான மக்கு ...என்பதுதான் பாவம் மக்குகள் இப்படித்தான் உருவாகிறார்கள் இல்லை உருவாக்கப்படுகிறார்கள்.

## மக்கு என்ற சொல் எப்போது வந்தது?

மக்கு என்ற சொல் இலக்கியத்தில் நெடுங்காலமாக இல்லை.பரமார்த்த குரு கதை எழுதப்பட்ட காலத்தில் மட்டி.மடையன் போன்ற சொற்களே பயன்படுத்தப்பட்டன.ஆனால் மக்கு இடம் பெறவில்லை. மக்கு என்ற சொல் கடந்த 100 ஆண்டுகளுக்குள் உரைநடை இலக்கியத்தில் உருவாகியிருக்கலாம் என யூகிக்கலாம்.இன்று வழக்கத்தில் இருந்துவரும் மக்கு எனும் சொல்,மர வேலை செய்துவரும் ஆசாரியின் அகராதியில் மிகவும் ஒரு பொருளைக் குறிக்கும்.மரத்தில் நாற்காலி செய்தாலும்,இரும்பில் அலமாரி செய்தாலும் ஏற்படும்ஓட்டைகளை அடைப்பதற்கு மக்கு என்னும் பொருள் தேவைப்படுகிறது.மக்கு என்னும் பொருளை வைத்த பூசி மெழுகிய பின்னரே அதன் மீது வார்னிஷையும் வர்ணத்தையும் அடிக்கமுடியும்.மக்கு இல்லையேல் மரப்பொருள்களும் ,இரும்பு அலமாரிகளும் அழுதுவடியும்.அழகான வண்ணங்களைத் தீட்ட முடியாது.

டாக்டர்களில்,பொறியாளர்களில்,வக்கீல்களில் பலர் படிக்கும்போது அவர்களுடன்படித்த மாணவர்களால் மக்குகள் என்று முத்திரை குத்தப் பட்டவர்கள்,படிப்பு முடிந்த பிறகு தனியே வேலை பார்க்கும்போது எவ்வளவு கைராசியான டாக்கடர்கள்,திறமையான பொறியாளர்கள்,வாதத்தில் வெல்லமுடியாத வக்கீல்கள் என்ற பெயருடன் வாழ்கிறார்கள் என்பதைப்பார்க்கும்போது,மக்குகள் என்றுமே மக்குகளாக இருப்பதில்லை என்ற உண்மை தெரியவரும்.அதாவது,எந்த சமுதாயம் அவர்களை மக்குகள் என்று ஏளனம் செய்ததோ,அதை மாற்றி வாழ்ந்து காட்டவேண்டும் என்ற வெறியுடன் உழைத்து வெற்றிக்கொடி நாட்டினார்கள் என்பதுதான் உண்மை!

இப்போது வியாபாரம்,தொழில், அரசியல், சினிமா எனஎந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் ஒரு காலத்தில் மக்குகள் என்று வெறுத்து ஒதுக்கப் பட்டவர்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் இன்று சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள்.தலை நிமிர்ந்து நடப்பதைக்காணலாம்.

## தன்னம்பிக்கை இழக்காதீர்கள்!

வாழ்க்கையில் ஆப்ரஹாம் லிங்கன் சந்தித்திடாத தோல்விகள் கிடையாது. 27வது வயதில் நரம்பு மண்டலமே பாதிப்புக்குள்ளானது.

46வது வயதில் செனட்டர் தேர்தலில் தோல்வி! 47வது வயதில் துணை ஜனாதிபதிதேர்தலில் தோல்வி! இத்தனை இழப்புகளாலும் தோல்விகளாலும் அவரது தன்னம்பிக்கையை ஒன்றும் செய்ய முடியவில்லை.52வது வயதில் அவர் அமெரிக்க ஜனாதிபதி ஆனார்.


ABRAHAM LINCOLN

## விடுகதைகள்

1. கண்ணில் தென்படுவான் ஆனால் கையில் பிடிபடமாட்டான்.அவன்யார் ?
2. சிறகு இல்லாமலேயே ஊர் ஊராகப்போகும். அது என்ன ?
3. நின்ற இடத்தில் நின்றபடி 100 பேருக்கு வழி காட்டுவான். அவன் யார் ?
4. அவன் உருகினால் எடை குறையும்.ஆனால் ஒளி கிடைக்கும் .யார் அவன் ?
5. அவனைக்காணமுடியாது.ஆனால் உணரமுடியும்.அவன் யார் ?
6. இரவும் பகலும் ஒலித்திருக்கும்.இதயம்போல் துடித்திருக்கும்.அது என்ன ?
7. தடுக்குபோட்டேன் எடுக்க முடியவில்லை.அது என்ன ?
8. வளைந்து நெளிந்தவன்.ஆனாலும் வழிப்பயணத்திற்கு உதவுவான்.யார் அவன் ?
9. இது யார்போட்ட கோடு,கைமுழுக்க ரோடு. அது என்ன ?

| | | |
|---|---|---|
| மார்ச் | 08 | உலக மகளிர் தினம் |
| மார்ச் | 15 | உலக உபயோகிப்பாளர் தினம் |
| மார்ச் | 19 | உலக ஊனமுற்றோர் தினம் |
| மார்ச் | 22 | உலக தண்ணீர் தினம் |
| மார்ச் | 27 | உலக வனப்பாதுகாப்பு தினம் |



**தன்னம்பிக்கையை வளருங்கள்**

அண்மைக் காலங்களில் பெற்றோர் குழந்தைகளின் உடல் நலம்,நடத்தை மற்றும் பள்ளி வீட்டுப்பாடம் இவற்றின்மீது கவனம் செலுத்துகிறார்கள் என்றாலும் இதைவிட முக்கியமான பொறுப்பினுக்கு முக்கியத்துவம் தரத்தவறிவிடுகிறார்கள்.அதுதான் குழந்தையை தன்னம்பிக்கை உடையவர்களா வளர்ப்பது!இது ஒன்றும் மந்திரம் இல்லை.குழந்தைகளது பணிகளை நீங்களே வலியச்சென்று ஏற்காதீர்கள்.சில பொதுவான செயல்களைச் செய்வதற்கு தினமும் பயிற்சி தாருங்கள். பொறுப்பினைத் தாருங்கள்.

**1.குழந்தைகளுக்கென நேரத்தை ஒதுக்குங்கள்**

பள்ளியிலிருந்து சோர்வுடன் வரும் குழந்தையிடம் என்ன டெஸ்ட் வைத்தார்கள்?மார்க் எவ்வளவு? யார் முதல் மார்க் வாங்கியது? என்றெல்லாம் கேள்விகள் கேள்விக்கணைத் தொடுக்காதீர்கள்.களைப்பு நீங்க ஏதேனும் சாப்பிடக்கொடுத்த பின் பள்ளியில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி கேட்டுத்தெரிந்தொள்ளுங்கள்.அவரது நண்பர்கள் யார்? யாருடன் விளையாடுகிறார்கள் என்பதை தெரிந்துகொள்ளுங்கள்.

**2.உங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள்**

சிறுசிறு முறைகளில் நீங்கள் காட்டும் அன்பினை உணரச்செய்யுங்கள்.காலைநேரத்தில் எழுவது அவர்களுக்கு சிரமமாகத் தோன்றினால் கடிகாரத்தில அலாரத்தை சற்று முன்கூட்டியே வைத்து முன்னதாக எழுப்பத் துவங்குங்கள்.கடைசி நேரத்தில் அவசரப் படுத்தாதீர்கள். நீங்களும் கோபமடையாதீர்கள். பதட்டமடையாதீர்கள்.

**3.குழந்தையைப் பாராட்டுங்கள்**

குழந்தையை பாராட்டுவதற்குக் காரணம் கணடறியுங்கள்.ஒவ்வொருவரும் தன்னை கவனிக்க வேண்டுமென்றுதான் விரும்புவார்கள்.உங்கள் வீட்டு உறவினர் ஒருவருக்குத் திருமணம் என்றால் உங்களை கவனிக்கிறார்களா? அழைப்பு வருகிறதா? என எதிர்பார்க்கிறீர்கள் இல்லையா? இதில் குழந்தை விதி விலக்கல்லவே!நேரம் கிடைக்கும் போது பலமுறை பாராட்டுங்கள்.

**4.குழந்தை முக்கியமாக உணரப்படட்டும்**

உங்களது சமுகத்தில் , குடும்பத்தில் அக் குழந்தை முக்கியமென்பதாக உணரச்செய்யுங்கள். குழந்தைக்கு ஏதேனும் பொறுப்பினைத் தேடிக் கொடுங்கள். மேஜை அமைப்பது, உட்காருமிடம், சாப்பிடும் மேஜை இவற்றை துடைத்து அழகுபடுத்தும் பணியைத் தாருங்கள்.குழந்தை வளர்ந்தவர்களாக ஆகும்போது பெரிய வேலைகளைக் கொடுங்கள்.தவறுகளை பெரிது படுத்தாதீர்கள்.நிறைவுகொள்ளுங்கள். அவர்களின் சிறு செயல்களையும் சிறப்பாகச் செய்ததாகப் பாராட்டுங்கள்.

**5.தோல்விகளை ஏற்க பயிற்சி அளியுங்கள்**

நாம் ஒவ்வொருவருமே ஏதேனும் ஒரு வகையில் தோல்வியடைகின்றோம்,தவறு செய்கின்றோம் என்பதை குழந்தைகளுக்கு ஒவ்வொரு பெற்றோரும் முக்கியமாக உணர்த்துங்கள்.தோல்வி என்பதோடு உலகம் முடிவடைந்து விடுவதில்லை. அறிவியலாளர்களின் வாழ்க்கை வரலாற்றை கதையாகக் கூறுங்கள். அவர்கள் தோல்விகளிலிருந்துதான் வெற்றியைக் கண்டார்கள் என்பதை குழந்தைகளுக்கு நன்கு தெளிவுபடுத்துங்கள். மேற்கூறிய இக் குறிப்புகளை மனதில் கொண்டு ெற்றோர் குழந்தைகளை தன்னம்பிக்கை கொண்டவர்களாக உருவாக்கலாமே!

---

**மூளைக்கு வேலை விடைகள்:** 1)ஒரே ஒரு பந்துதான் போடமுடியும்.ஒரு பந்து போட்டதுமே அந்தக்கூடை காலியானகூடை என்ற தன்மையை இழந்துவிடுமே! 2)முட்டையை 51 அடிதூரம் கீழே போடுங்கள் 50 அடிதூரம்வரை அது உடையாமல் இருக்குமல்லவா! 3) அவர்கள் நின்ற வரிசை பாபு , சீனு , மணி ,ராமு.

---

**விடுகதை விடைகள்;** 1.ஒளி, 2.ஸ்டாம்ப் , 3.லைட்போஸ்ட், 4.மெழுகு வர்த்தி 5.காற்று 6.கடிகாரம் 7.கோலம் 8.ரோடு 9.கை ரேகை

## ஒரு சின்ன குட்டிக்கதை

ஒரு ஊர்ல ஒரு ராஜா இருந்தார் அந்த ராஜாவுக்கு 4 மனைவிகள் ராஜா மரணப்படுக்கையில் இருந்தார். இறந்ததற்கு அப்புறம் இருக்கும் வாழ்க்கை நினைச்சு ரொம்ப டென்ஷனாக இருந்தார். நாம் எல்லோரும் பேசுவோம் அல்லவா இறந்ததற்கு அப்புறம் எப்படி இருப்போம் என்று யோசிச்சு இருப்போம். அதுபோல தான் ராஜாவும், ராஜாவுக்கு 4ஆவது மனைவியை ரொம்ப பிடிக்கும் ஆபரணம், ஆடை, அழகு சாதனம் அனைத்தும் வாங்கி கொடுத்து அழகு பார்ப்பார். அவர் ஒரு நாள் தன் 4ஆவது மனைவியை பார்த்து நான் இறந்த பின் என் கூட வருவியா? எனக்கு ரொம்ப பயமா இருக்கு என்று கேட்டார். மனைவி வரமாட்டேன் என்று சொல்லிவிட்டாள். ராஜாவுக்கு 3 வது மனைவி மீதும் அதிக பிரியம் உண்டு அவரையும் கூப்பிட்டு என் மரணத்திற்கு பின் என்னுடன் வருவாயா? அப்படியெல்லாம் வரமாட்டேன், வேண்டுமானால் இன்னொரு திருமணம் செய்து கொள்வேன் என்றாள். ராஜாவும் மனுஷன் தானே மன உளைச்சல் டென்ஷன் பார்க்க பரிதாபமாக இருந்தார். அப்படி இருக்கும் தருவாயில் 2 வது மனைவி ராஜாவுக்கு பக்க பலமாக இருந்திருக்கிறார். அவரையும் கூப்பிட்டு ராஜா நான் இறந்த பின் என்னுடன் வருவாயா? அவரும் வரமாட்டேன் சொல்லிவிட்டு வேண்டுமானால் ஒரு சென்டும் ஒரு ப்யுனரல் ஆர்கனைஸ் பண்ணி தரேன் அவ்வளதான் என்றார். தூரத்தில் இருந்து ஒரு குரல் கேட்டது. நீங்கள் இறந்த பின் உங்கள் கூட நான் வரேன் என்ற குரல். பார்த்தால் முதல் மனைவி ராஜாவுக்கு ரொம்ப மகிழ்ச்சி தர்ம சங்கடங்களை மறந்து முதல் மனைவியை அழைத்து நான் உனக்கு ஒன்றுமே செய்யவில்லை நீ தான் என் கூட கடைசி வரைக்கும் வரேங்ரே என்று சங்கடப்பட்டார் ராஜா.

ராஜா சொன்னது நம்மைதான். நம்ம எல்லோருக்கும் 4 மனைவிகள்.

4–வது மனைவி சொன்னது நம்முடைய உடம்பு. அந்த ராஜா 4வது மனைவிக்கு விலையுயர்ந்த ஆபரணம், பணம், அழகு சாதனம் கொடுத்து அழகு பார்ப்பார் என்று சொன்னேன். நாமும் விலையுயர்ந்த சட்டைகள், ஆபரணம் போட்டுள்ளோம் நம் உடலில். ஆனால் 4வது வரமாட்டேன் சொன்ன மாதிரி நாமும் இறந்தால் நம்ம உடம்பு நம் உடன் ஏதும் விசுவாசமாக வராது.

3–வது மனைவி என்று சொன்னது நம்முடைய சொத்து, கார், பங்களா தான் ராஜா நீங்கள் இறந்தால் இன்னொரு திருமணம் பண்ணிகொள்வேன் என்று சொன்னார் அல்லவா நாம் இறந்த பின் நம்முடைய சொத்து இன்னொருவருக்கு போய்விடும் என்பது தான் நிதர்சனமான உண்மை. அதனால் அதுவும் நமக்கு இல்லை.

2–வது மனைவி என்று சொன்னது நம்முடைய குடும்பம், சொந்தபந்தங்கள் ஒரு பிரச்சனை நிகழ்வு என்றால் வருவார்கள். சென்று விடுவார்கள்.

1–வது முதல் மனைவி என்று சொன்னது நம்முடைய ஆன்மா. நம்ம உடம்புக்கு ஆடை, அணிகலன்கள் சென்றடைவது (சிரமம் இல்லாமல்) அவசியம் தான். அதுக்காக சொத்து மட்டுமே வாழ்க்கை இல்லை, சொந்த பந்தங்கள் அனைத்தையும் மதிக்கலாம் நல்லபடியா நடத்தலாம். எல்லாத்தையும் விட பெரியது நம்முடைய ஆன்மா, எப்போதும் தனியா இருக்க முயற்சி பண்ணுங்க 15 நிமிடம் தியானம் பண்ணுங்க எல்லா கடவுள்களையும் வணங்குங்கள். யாருமே யாருக்கும் கெட்டது நினைக்க மாட்டார்கள். இதன் மூலம் நமக்கு கிடைக்கும் கருத்து. உன் மனசு பொய் சொல்லாது நாம் வேண்டுமானால் நிறைய பொய் சொல்லலாம். நமக்குள் நாம் கேள்வி கேட்கும் போது அமைதியாக உன் மனசு ரொம்ப சரியா சில விஷயங்களை காட்டி கொடுக்கும். நீங்கள் தனியாக உட்கார்ந்து உங்கள் மனசைக் கேளுங்கள் அது பதில் சொல்லும். தனிமையை பழக்கப்படுத்தி கொண்டால் ஒட்டுதல் இல்லாத உறவு வளரும். இவ்வித உறவில் மற்றவர் மனசு புரியும் தெளிவு பிறக்கும். அந்த தெளிவு இருந்துவிட்டால், எவரோடும் சண்டை வராது. அற்புதமான வாழ்வு வாழ முடியும் இந்த புரிதல் இருந்தால் தான் நம் வாழ்க்கையை அறிதலோ சந்தோஷமாக இருத்தலோ அல்லது கருணை புரிதலோ முடியும் இதுவே நம்முடைய முதல் குணமாக இருக்க வேண்டும் நாம் தான் நம் வாழ்க்கைக்கு தலைவன் என்பது புரியும் தெளிவு வரும்.

L. ராமசெல்வம்,
விசலூர்.
9750806991

# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி **அ. அபர்னா** |
| படிப்பு | B.Tech (IT), SSN College of Engineering<br>M.S. (IT), Arizona State University (USA) |
| வேலை | Amazon, Phoenix Arizona State (USA) |
| பிறந்த தேதி | 26.10.1997 |
| உயரம் | 172 cm |
| நட்சத்திரம் | மகம் |
| கோத்திரம் | ஆலச்சுகுட |
| பூர்வீகம் | கழனிவாசல், மயிலாடுதுறை |
| தகப்பனார் | **Dr. T. அசோகன்,** B.E. M.B.A., Ph.D.,<br>Retired DOT BSNL Officer |
| தாயார் | **T.R. பூங்குழலி,** B.Tech.,<br>(சித்தர்காடு, மயிலாடுதுறை)<br>Assistant Engineer (Rural Development)<br>Tamilnadu Sate Government |
| முகவரி | 191, Rajammal Nagar,<br>Sitharkadu,<br>Mayiladuthurai - 609 003.<br>Tamil Nadu, India.<br>Cell : +91 94861 02102<br>E-mail : sdeasokan@gmail.com |
| விருப்பம் | M.S. மற்றும் அதற்கு சமமான படிப்பு,<br>அமெரிக்காவில் பணிபுரியும் வரன். |



# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி GOKILA S |
| படிப்பு | B.Tech., M.B.A., |
| வேலை | Workato India Pvt. Ltd., Chennai<br>Rs. 21,00,000/PA + Shares<br>(Holding Canada Job Offer - $ 95,000 PA) |
| வயது | 05.08.1993 |
| உயரம் | 5'-2" |
| நட்சத்திரம் | Sadhayam |
| கோத்திரம் | Kalappaala |
| பூர்வீகம் | T. Palur |
| தகப்பனார் | Selvam B |
| தாயார் | Rani S |
| முகவரி | 20/1, S3, Moongi Enclave,<br>Eswaran Kovil Street,<br>Urapakkam,<br>Chennai - 603 210.<br>Cell : 94428 68191 / 94442 45730 |
| விருப்பம் | Already working in Canada or Willing to move of working in IT |



| | |
|---|---|
| பெயர் | செல்வி V. கிருத்திகா |
| படிப்பு | B.Arch., |
| வேலை | Interior Designer,<br>Blak Interiors design Services LLC<br>Dubai |
| வயது | 14.07.1995 |
| உயரம் | 5'-2" |
| நட்சத்திரம் | திருவோணம் |
| கோத்திரம் | நல்லுடையார் |
| பூர்வீகம் | காரைக்கால்<br>(புதுச்சேரி மாநிலம்) |
| தகப்பனார் | கோ. வெங்கடேஷ் |
| தாயார் | வெ. சாந்தி |
| முகவரி | F1, ஷீமத்ரி,<br>700, 6வது பிரதான சாலை,<br>ராம் நகர் தெற்கு, மடிப்பாக்கம்,<br>சென்னை – 600 091.<br>Cell : 98945 84966, 91716 01180 |



| | |
|---|---|
| பெயர் | செல்வி கா. லெட்சுமிபிரியா |
| படிப்பு | B.Tech (Civil) |
| வேலை | Software Engineer,<br>Chennai |
| பிறந்த தேதி | 21.03.1997 |
| உயரம் | 163 cm |
| நட்சத்திரம் | மகம் |
| கோத்திரம் | சாத்துக்குட |
| பூர்வீகம் | மணல்மேடு – இராதாநல்லூர் |
| தகப்பனார் | க. கார்த்திகேயன் (TNSTC ஓய்வு) |
| தாயார் | கா. லதா (கீழையூர்) |
| முகவரி | 7/295C, முருகையா நகர்,<br>புளியம்பேட்டை, அம்மாசத்திரம் (PO),<br>திருவிடைமருதூர் (TK)<br>கும்பகோணம் – 612 103.<br>Cell : 94866 48536 (W)<br>79043 80537 |
| விருப்பம் | சமபடிப்பு, நல்ல பணியில் உள்ள வரன். |



## "கார்காத்தார் ஒப்புரவு" கட்டண விபரங்கள்

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. 300/- |
| ஆயுள் சந்தா (12 ஆண்டுகளுக்கு மட்டும்) | ரூ. 2000/- |
| கலர் (1/4) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்) | ரூ. 1500/- |
| கலர் (1/2) அரைப் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்) | ரூ. 3000/- |
| கலர் முழு பக்கம் | ரூ. 6000/- |
| பின் அட்டை வெளிபுறம் | ரூ. 7000/- |
| மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு) | ரூ. 500/- |
| கருப்பு வெள்ளை (1/4) கால் பக்கம் | ரூ. 750/- |
| கருப்பு வெள்ளை (1/2) அரைப் பக்கம் | ரூ. 1500/- |
| கருப்பு வெள்ளை முழுப் பக்கம் | ரூ. 3000/- |

# மணமகள்/மணமகன் தேவை




| | |
|---|---|
| பெயர் | **செல்வன் சிவராம் V.** |
| படிப்பு | B.E. (Civil) |
| வேலை | Government Licensed Contractor (District Level)<br>Thirumalai Constructions & Contractors<br>Rs. 15 Lakhs/PA |
| பிறந்த தேதி | 29.03.1995 |
| உயரம் | 5'-8" |
| நட்சத்திரம் | பூரட்டாதி |
| கோத்திரம் | குமருட |
| பூர்வீகம் | கதிராமங்கலம், நன்னிலம் (Tk) |
| தகப்பனார் | **K. வைரவேல்** (திருப்பதி பைனான்ஸ்)<br>Agriculture Land Lord |
| தாயார் | **V. அமுதா** (இன்னம்பூர், கும்பகோணம்) |
| முகவரி | சிவன் கோவில் தெரு, கதிராமங்கலம்,<br>பாவட்டக்குடி (PO), நன்னிலம் (Tk),<br>திருவாரூர்.<br>Cell : 99421 87072, 86104 88551 |
| விருப்பம் | படித்த பணியில் உள்ள / இல்லாத வரன். |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி து. லக்ஷ்மி பிரியா** |
| படிப்பு | B.E. (E & I.E.) |
| வேலை | Senior QA Engineer,<br>Quickheal Technologies Ltd.,<br>Rs. 9,00,000/PA |
| பிறந்த தேதி | 16.05.1997 |
| உயரம் | 5'-2" |
| நட்சத்திரம் | பூரம் (சிம்ம ராசி) |
| கோத்திரம் | சாத்துக்குட |
| பூர்வீகம் | ஆர்ப்பாக்கம் (சீர்காழி) |
| தகப்பனார் | **அ. துரை,** B.E.,<br>Managing Director of Lakshmi Publications and Suchitra Publications (Previously worked as Executive Engineer, NLC India Ltd. Neyveli) |
| தாயார் | **து. நிர்மலா,** B.A., (விருத்தாசலம்)<br>Proprietrix of Lakshmi Publications |
| முகவரி | 73, இரண்டாவது பிரதான சாலை,<br>வி.ஜி.பி. கோகுல் நகர், பெரும்பாக்கம்,<br>சென்னை – 600 100.<br>Cell : 98423 06514,<br>E-mail : duraibeneyveli@gmail.com |
| விருப்பம் | BE / ME / MCA படித்த நல்ல பணியில் உள்ள வரன். |

# திருமண விழா - 24-11-2023


இடம் : **ஹோட்டல் HABLIS,** GUINDY, சென்னை.





மணமக்கள்:

**S. பரத்,** B.Tech, M.S. (USA)

**E. இராகவி,** B.E., M.S., (USA)











**திருமண விழா மற்றும் வரவேற்பிற்கு முன்னதாக வருகை தந்து வாழ்த்திய உறவுகள் மற்றும் நண்பர்களுக்கு எங்களது இதயங்கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.**


திரு. **G. சம்பந்தம் பிள்ளை,**
திருமதி. **ருக்மணி சம்பந்தம்**
மயிலாடுதுறை

திரு. **இளவழகன்,**
திருமதி. **பிரேமலதா இளவழகன்**
செல்வி. **இராஷ்மி** B.E. MS
ஆதம்பாக்கம், சென்னை–600088.
☎ : 9444035701, 9840242539

திரு. **S. தியாகராஜன் பிள்ளை**
திருமதி.**சுமதி தியாகராஜன்**
சென்னை.

# மணமகள் தேவை


**பெயர்** செல்வன் M. அம்ரிஷ்
**படிப்பு** B.E.,
**வேலை** Optum Health Care and Technology
Rs. 5,00,000/PA



**வயது** 13.08.1998
**உயரம்** 175 cm
**நட்சத்திரம்** அஸ்வினி
**கோத்திரம்** காங்கேய
**பூர்வீகம்** விளத்தொட்டி
**தகப்பனார்** M. முத்து, TNSTC (Retired)
**தாயார்** M. சுமித்ரா (கும்பகோணம்)
**முகவரி** 189/4, பாரதியார் தெரு,
மதுரா நகர், சேந்தங்குடி,
மயிலாடுதுறை – 609 001.
Cell : 94863 83984, 94883 77804
**விருப்பம்** படித்த பணியில் உள்ள பெண்

---

**பெயர்** செல்வன் M. அபிலாஷ்
**படிப்பு** B.E., M.B.A.,
**வேலை** Capgemini Technology Services
Rs. 5,00,000/PA



**வயது** 13.08.1998
**உயரம்** 173 cm
**நட்சத்திரம்** அஸ்வினி
**கோத்திரம்** காங்கேய
**பூர்வீகம்** விளத்தொட்டி
**தகப்பனார்** M. முத்து, TNSTC (Retired)
**தாயார்** M. சுமித்ரா (கும்பகோணம்)
**முகவரி** 189/4, பாரதியார் தெரு,
மதுரா நகர், சேந்தங்குடி,
மயிலாடுதுறை – 609 001.
Cell : 94863 83984, 94883 77804
**விருப்பம்** படித்த பணியில் உள்ள பெண்

---

**பெயர்** செல்வன் மரு.மு. சத்தியசீலன்
**படிப்பு** M.B.B.S., D.P.H.,
**வேலை** Tutor, Department of SPM,
KAPV Govt. Medical College, Trichy
Rs. 1,06,000/PM



**வயது** 14.05.1984
**உயரம்** 171 cm
**நட்சத்திரம்** சுவாதி
**கோத்திரம்** வேளா
**பூர்வீகம்** சத்தியவாடி
**தகப்பனார்** ச. முத்துகிருஷ்ணன்
Retired Principal, DIET, Vadalur
**தாயார்** மு. பார்வதி (அங்கராயநல்லூர்)
**முகவரி** 27/2, அய்யனார்கோவில் தெரு,
விருத்தாசலம்,
கடலூர் மாவட்டம் – 620 001.
Cell : 87782 78936, 90033 76297
E-mail: dr.m.sathyaseelan@gmail.com
**விருப்பம்** அமைதியான குணமுள்ள நல்ல பண்புள்ள குடும்பத்திற்கு ஏற்ற வரன்.
**குறிப்பு** சட்டப்படி விவாகரத்து பெற்றவர்.

---

**பெயர்** செல்வன் G. ராஜமாணிக்கம்
**படிப்பு** B.E. (Civil)
**வேலை** Engineer in U.A.E.,



**வயது** 02.01.1997
**நட்சத்திரம்** சித்திரை 1ம் பாதம்
**கோத்திரம்** பொன்னமுட
**பூர்வீகம்** காா்மாங்குடி
**தகப்பனார்** T. ஞானசேகர்,
விவசாயம், வெளிநாடு
**தாயார்** G. ருக்குமணி (கொத்தட்டை)
**முகவரி** தெற்கு தெரு, காா்மாங்குடி அஞ்சல்,
கருவேப்பிலங்குறிச்சி தாலுக்கா,
விருத்தாசலம், கடலூர் – 606 110.
Cell : 95003 51630
Whatsapp : 00971559023968
**விருப்பம்** படித்த நல்ல குணமுள்ள பெண், வெளிநாடு செல்ல விருப்பம் உள்ளவர்.

# மணமகள் தேவை

**பெயர்** செல்வன் அ. அருண்குமார்
**படிப்பு** B.E., (ECE)
**வேலை** Software Architect,
Presidio Technology Software Solution
Coimbatore
Rs. 4,50,000/PA



**வயது** 28.05.1995
**உயரம்** 6'
**நட்சத்திரம்** கார்த்திகை
**கோத்திரம்** காங்கேய
**பூர்வீகம்** விளத்தொட்டி, திருச்சிற்றம்பலம்
**தகப்பனார்** கா. அருணாச்சலம் பிள்ளை,
(விவசாயம்)
**தாயார்** அ. ராஜலெட்சுமி (கீழையூர்)
**முகவரி** வெள்ளாளர் தெரு, விளத்தொட்டி,
திருச்சிற்றம்பலம் – 609 204.
மயிலாடுதுறை வட்டம்.
Cell : 63808 34164,
94883 37540 (Whatsapp)

---

**பெயர்** செல்வன் ARAVINDHAN .S
**படிப்பு** B.E (EEE), M.B.A.,
**வேலை** Business - Proprietor, Orchid Modular Kitchen & Interiors
Rs. 25,00,000/PA



**வயது** 25.11.1996
**நட்சத்திரம்** Karthigai
4th Patham
**கோத்திரம்** Kalappala
**பூர்வீகம்** Sendurai,
Ariyalur DT
**தகப்பனார்** Saravanan S,
Business,
Orchid Chimney Studio
**தாயார்** Sivakama Sundari
**முகவரி** 129/1, Anna Street Extn.,
Sabapathy Nagar, TTP Mill Backside,
15, Velampalayam, Tirupur - 641 652.
Cell : 91593 55355 / 96298 34927
E-mail : aravindhanorchid@gmail.com

---

**பெயர்** செல்வன் ர. பாலகுமார்
**படிப்பு** B.E. (Mech)
**வேலை** IOPEX (Tec) Business Analyst
Ambattur, Chennai
Rs. 1Lakh/PM



**வயது** 24.06.1995
**உயரம்** 180 cm
**நட்சத்திரம்** கார்த்திகை 1ம் பாதம்
**கோத்திரம்** பல்லவராய
**பூர்வீகம்** காட்டுமன்னார்குடி
**தகப்பனார்** பா. இரத்தினகுமார் (வியாபாரம்)
**தாயார்** ச. பேபி கங்கா (சிதம்பரம்)
**முகவரி** AMM Tour, Block 2,
Third Floor, D/o. C3,
49, திருவள்ளுவர் தெரு,
முகப்பேறு,
சென்னை – 600 037.
Cell : 95668 33834, 96291 62163
**விருப்பம்** சென்னையில் பணியில் உள்ள வரன்


---

**பெயர்** செல்வன் கா. வருண் நேரு
**படிப்பு** B.Tech (IT)
**வேலை** Specialist - Software Engineering
L T I Mindtree, Chennai
Rs. 12 Lakhs / PA



**பிறந்த தேதி** 22.11.1986
**உயரம்** 166 cm
**நட்சத்திரம்** பூசம்
**கோத்திரம்** எரவுட
**பூர்வீகம்** இறையூர் (பெண்ணாடம்)
**தகப்பனார்** மு. கார்த்திகேயன்
**தாயார்** கா. தனலட்சுமி
(செந்துறை)
**முகவரி** 174/2, கொத்தட்டை ரோடு,
இறையூர் – 606 111.
கடலூர் மாவட்டம்
Cell : 98844 91678
E-mail : dhanamkarthi76@gmail.com

# மூன்றாமாண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் :
20–01–1933

மறைவு :
25–03–2021

## R. இராமலிங்கம் பிள்ளை

பெரிய பண்ணை, சித்தர்காடு

மயிலாடுதுறை மாவட்டம், மேமாத்தூர் தெய்வத்திருவாளர்கள் இராமசாமி பிள்ளை, பர்வதவர்த்தினி அவர்களின் இளையமகனும் சித்தர்காடு பெரியபண்ணையாரும், சித்தர்க்காடு, மூவலூர், மாப்படுகை ஆகிய ஊர்களின் முன்னாள் கார்காத்தார் சங்கத்தலைவரும் ஆகிய திரு. ஆர். இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவு நாளில் நாங்கள் அன்புடன் நினைவு கூர்ந்து வழிபடுகிறோம்.

**என்றும் எங்கள் மனதில் வாழும் மாமனிதரே !**
**நினைத்துப் போற்றும்**

மனைவி R. **தனலெட்சுமி**

| மகள்கள் | மருமகன்கள் | அண்ணன் மகன்கள் | மருமகள்கள் |
|---|---|---|---|
| S. **ஆண்டாள்** | முனைவர் S.A. **சம்பத்குமார்** கும்பகோணம் | G. **பாலசுப்பிரமணியன்** | B. **சுமதி** |
| | | G. **திருமேனி** | T. **சுபஸ்ரீ** |
| K. **மாலா** | B. **கண்ணன்,** மேலப்பெரும்பள்ளம். | L.B. நகர், மயிலாடுதுறை. | |

தெய்வத்திருவாளர்கள்
R. **மங்களம்** – A. **இராஜாமணி,** கொற்கை

இவர்கள் வழி பெயரன்கள், பெயர்த்திகள்
R. **முத்துக்குமார்** – M. **தேன்மொழி**
R. **கோகுலக்கண்ணன்** – G. **நிவேதா**
R. **அழகுசுந்தரம்**

**மற்றும் பெயரன்கள், பெயர்த்திகள்,**
**கொள்ளு பெயரன்கள்,**
**கொள்ளு பெயர்த்திகள்.**
பெருமாள் கோவில் தெரு, சித்தர்காடு,
மயிலாடுதுறை மாவட்டம்.
செல் : 9788776225/9443677943

# பாலி, லங்காவி, கோலாலம்பூர் ஓர் இனிய சுற்றுலா

– மைதிலி வைத்தியநாதன்.

நவம்பர் 14ஆம் நாள் மதியம் 4.30க்கு கும்பகோணத்திலிருந்து கிளம்பிய நாங்கள் 16ஆம் தேதி காலை 4.30 மணிக்கு பாலித்தீவு அடைந்தோம். ஹோட்டலில் சில மணி நேரம் இளைப்பாறி காலை 9 மணி அளவில், நாங்கள் சென்ற முதல் இடம் கருடாவிஷ்ணுகஞ்சன் என்ற இடம். கருடன் மேல் விஷ்ணு பகவான் அமர்ந்திருப்பது மலை மீது ஒன்றும், கீழே ஒன்றும் சிலைகளாக அமைக்கப்பட்டுள்ளன. நுழைவு வாயில் தாண்டி உள்ளே சென்றபின் மிகப் பெரிய விஷ்ணு சிலை; 300 அடி சிலைக்கு முடிவு செய்து, பொருளாதார நிலை இடம் கொடுக்காமையால் 23 அடி கைகளின்றி சிலையாக உள்ளது. அதைச் சுற்றிலும்இயற்கைநீருற்று உள்ளது. அதை பாலிமக்கள், பாற்கடல் கடைந்தபோது வந்த அமிர்தம் என்றும், அதன் மேல் விஷ்ணு பகவான் அமர்ந்திருப்பதாகவும் கூறுகிறார்கள். இதற்கு உள்ளே மிகப் பெரிய கருடன் சிலையும் உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 264 அடி உயரத்தில் கருடன் மீதுள்ள விஷ்ணு சிலை உள்ளது. அந்த சிலையின் மார்பிலும், நெற்றியிலும் உள்ள அணிகலன்கள் தங்கத்திலானவை. இச்சிலை 2015–ல் ஆரம்பித்து 2019–ல் முடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள ஒரு அரங்கில் அவர்களது பாரம்பரிய உடையுடன் கூடிய பாரம்பரிய நடன நிகழ்ச்சியும் கண்டோம். கையில் விசிறியுடன், கண்களை உருட்டி அழகாக ஆடினார்கள். நாங்களும் அவர்களுடன் சேர்ந்து சிறிது ஆடிவிட்டு, மேடையை விட்டு இறங்கினோம்.

அதன் பின் நாங்கள் உலுவாட்டு கோவிலுக்குச் சென்றோம். மார்க்கண்டேயர் என்ற முனிவர், எட்டாம் நூற்றாண்டில் பாலித்தீவு வந்து, இந்து மதத்தைப் பரப்பியதாக கூறுகிறார்கள். அதன் பிறகு வந்த முனிவர்தான் மலைமீது அமைந்துள்ள இக்கோவிலை வடிவமைத்துள்ளார். நான்கு புறமும் கடல் சூழ்ந்திருக்க, கடல் அலைகள் மலைமீது மோதி, மோதி விழுவது கண்கொள்ளாக் காட்சி. அம்மலையின் மீது இதை வடிவமைத்தவரின் சிற்பம் உள்ளது. பாழடைந்து இருக்கும் கோவிலின் உள்ளே பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் உள்ளதாக கூறினார்கள். எதையும் பார்க்க இயலவில்லை. மரங்களும் ஏராளம்; குரங்குகளும் ஏராளம். நமது மூக்குக் கண்ணாடியும், அலைபேசியும் மிகவும் பிடித்த விஷயங்கள். மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ராஜேந்திர சோழன் காலத்தில் இவ்விடம் ஸ்ரீ விஜய சாம்ராஜ்யம் என அழைக்கப்பட்டது என அறிந்தோம். அடுத்து நாங்கள் சென்றது பாண்டவா பீச். இங்கு மலையில் உள்ள குகைகளில் குந்தி, தருமன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் சிலைகள் உள்ளன. நமது இதிகாசங்களான இராமாயணமும், மகாபாரதமும் மிகச் சிறப்பாக கருதப்படுகின்றன. கடற்கரையில் சிறிது நேரம் ஒய்வெடுத்து, பின் 'டிடிசீதாபந்தா' என்ற ராமாயண நாட்டிய நாடகம், பாலி கலாச்சாரத்துடன் இணைந்த நாட்டிய நாடகம் பார்க்கச் சென்றோம். கட்டணம் அவர்கள் பணத்தில் 1,60,000. கடற்கரையில் பார்வையாளர்களுக்காக கேலரி அமைத்து, நடுவில் வட்ட மேடையில் நடனம் ஆடுகிறார்கள். முதல் காட்சி ராமரும், லட்சுமணரும் ஆஞ்சநேயரிடம் சீதையைக் கண்டுபிடிக்க சொல்வது; அடுத்தது சீதா தேவியிடம் இராவணன் அவனது வெற்றியைப் பறைசாற்றிக் கொள்வது; அதை அனுமன் மரத்திலிருந்து பார்ப்பது; பின் சீதையிடம் கணையாழி கொடுப்பது; போரில் ராவணனை வீழ்த்தும் வரை உள்ள காட்சிகளை நடனத்தில் காட்சிபடுத்துகிறார்கள். லங்கா தகனம் நிஜமாகவே தீ பரவுவது போல் காட்டியது மிகவும் அருமை.

மறுநாள் காலை Tegenungan அருவிக்குச் சென்றோம். அருவியில் குளிக்க வேண்டுமெனில் அநேக படிகள் இறங்க வேண்டும். அருவியின் அருகில் ஒரு ஊஞ்சல்; அதற்கு கட்டணம் செலுத்தி ஆடலாம். புகைப்படங்கள் எடுத்த பின் Bathik Prints Show Room சென்றோம். டிரஸ் மெட்டீரியல் மிகவும் நன்றாக இருந்தது. பின் மன்னரின் (சுகர்தோ) அரண்மனைக்குச் சென்றோம். மன்னர் குடும்பம் இன்றளவும் அங்கு வசிப்பதால், உள்ளே செல்ல அனுமதி இல்லை. வெளியே சில இடங்களைப் பார்த்து, பின் ஒரு மார்க்கெட் சென்று தேவையானவைகளை வாங்கினோம். மதிய உணவிற்குப் பின் லொட்டூர் தானாலாட் எனும் கடற்கரைக் கோவிலுக்குச் சென்று சூரிய அஸ்தமனம் பார்த்து ரசித்தோம். கோவிலில் சுவாமி இல்லை. அங்கு ஒரு புனித நீரூற்று உள்ளது. எல்லா வியாதிக்கும் அத்தீர்த்தம் நல்லது என்பதால், இரு பூசாரிகள் நமக்கு தீர்த்தம் கொடுத்து காதில் மலர் வைத்து ஆசீர்வாதம் செய்கின்றனர். இங்குள்ள குகையில் ஒரு பாம்பு உள்ளது. அதன் உடலைத் தடவிக் கொடுத்தால் நாம் என்ன நினைக்கிறோமோ அது நடக்குமென கூறுகிறார்கள். இத்துடன் எங்கள் பாலி பயணம் முடிவுற்றது. பாலி ஒரு அழகான தீவு. இந்தோனேசியா தீவுகளில் ஒன்று. அதன் கடற்கரைகளும், கோவில்களும் மிகவும் அழகானவை என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

பயணம் தொடரும்...

## பூவிழுந்தநல்லூரில் CREW–ன் 40–ம் ஆண்டு பொங்கல் விழா 2024

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் சென்னை ராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் கல்வி அறக்கட்டளையில் ஆண்டுதோறும் உதவிபெறும் கல்லூரி மாணவர்கள், சுற்றுவட்டார கிராம மக்கள் அனைவரும் பொங்கலன்று CREW நிறுவனர் திரு. S. வெங்கடேசன் அவர்கள் குடும்பத்தாருக்கு மேளதாளம் முழங்க வாணவேடிக்கையுடன் சிறப்பான வரவேற்பு அளித்து மகிழ்ந்தார்கள்.

ஒவ்வொரு தடவையும் CREW CHAIRMAN அவர்கள் ஊருக்கு வருகை புரியும் போதெல்லாம் கிராம மக்கள் அனைவரும் ரூபாய் ஆயிரங்களில் பணக்காரராகிறார்கள் என்பது பெருமைக்குரியதாகும்.

இவ்வாண்டில் நூற்றுக்கும் மேற்பட்ட காவலர்கள் மற்றும் CREW தன்னார்வ தொண்டர்கள் உதவியுடன் இரண்டாவது முறையாக விழாவிற்கு வந்த 10,000/– க்கும் மேற்பட்டவர்களுக்கு தரமான விலையில்லா வேட்டி, சேலைகள், தரமான உணவு மற்றும் ரூ. 200–ம் வழங்கப்பட்டது.

பின்னர் கிராம மக்கள் அனைவருக்கும் எவர்சில்வர் பாத்திரங்கள் வழங்கப்பட்டன. தெருவாரியாக குலுக்கல் முறையில் 100 கிராம் தங்கக் காசுகள் வழங்கப்பட்டது.

மாட்டுப்பொங்ல் அன்று CREW CHAIRMAN அவர்கள் தன் குடும்பத்தாருடன் அருள்தரும் விசாலாட்சி அம்பாள் உடனாகிய அருள்மிகு விசுவநாதசுவாமி அருள்தரும் செல்லியம்மன், அருள்தரும் அங்காளம்மன், அருள்தரும் மாரியம்மன் மற்றும் அருள்தரும் மாணிக்கநாச்சியார் திருக்கோயில்களில் வழிபாடாற்றினார்கள்.

இரவு காட்டுமன்னார்குடி சரவெடி சரவணன் குழுவினர் மற்றும் திரைப்பட நடிகர்கள் கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

உழவர் திருநாள் அன்று காலை முதலாவதாக கபடிப்போட்டியினை தொடக்கி வைத்து முடிவில் வெற்றி பெற்றவர்களுக்கு CREW அதிகாரி திரு. S. பாலகிருஷ்ணன் அவர்கள் சுழற்கோப்பைகளை வழங்கினார்கள். தொடர்ந்து 36 விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன.

மாலை திருமதி. பானுமதி பாலகிருஷ்ணன், திருமதி. திரிபுரசுந்தரி பத்மநாபன், திருமதி. விஜயலெட்சுமி ஞானம், திருமதி. அருணா செந்தில்குமார், திருமதி. காந்திமதி தில்லைநாயகம் ஆகியோர் குத்துவிளக்கேற்றி விழாவைத் துவக்கி வைத்தனர். பின்னர் திருமதி. பானுமதி பாலச்சந்திர விநாயகம் இறைவணக்கம் பாடினார்.

ஆசிரியர் S. பூங்குன்றன் வரவேற்புரை நிகழ்த்தினார். ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் திரு. வே.மா. சம்பந்தம், CREW M.D. திரு. V.R. செந்தில்குமார் சிறப்புரையாற்றினார்கள். பின்னர் விழாவில் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தலைவர் திரு. R. பத்மநாபன் அவர்களால் சிறப்பாக செய்யப்பட்டது. விழா இறுதியில் கலந்து கொண்டவர்களுக்கு குலுக்கல் முறையில் தங்கக்காசுகள் வழங்கப்பட்டன.

விழாவில் பொன்விழா கண்ட தம்பதியினர் திரு. S. தில்லைநாயகம் திருமதி. காந்திமதி அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். விழா நிகழ்ச்சியினை ஆசிரியர் திரு. M. பாலகுரு தொகுத்து வழங்கினார். ஆசிரியர் திரு. R. ஞானம் நன்றி நவில விழா இனிதே நிறைவுற்றது.

விழா ஒருங்கிணைப்பாளர்கள் திரு. S. ராமகிருஷ்ணன், திரு. C. மதியழகன், திரு. R. பத்மநாபன், திரு.S. பூங்குன்றன், திரு. K. கணபதி, திரு. S. தொல்காப்பியன், திரு. K. பழமலை, திரு. R. சிவக்குமார், திரு. B. ரமேஷ், திரு. S. வசந்தகுமார், திரு. C. முருகன், திரு. K. பாபு பெரிய கோட்டகம் திரு. செல்வராஜ் திரு. K. ராஜ், திரு. சங்கர், S. விஜயலெட்சுமி, S. கண்ணகி, B. கவிதா, S. அன்னபூரணி, ஆகியோர் விழா சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்கினர். விழா நாட்களில் அனைவருக்கும் தரமான உணவு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சி தொகுப்பாளர்

திருமதி. B. கலைச்செல்வி பாலகுரு,

கும்பகோணம்.

---

## சிவஞான போதம் ஒப்புவித்தல் போட்டி முடிவுகள்

இணையதள நிகழ்வு நிகழ்ந்த தேதி : 26.1.24

பிரிவு I — LKG & UKG: மங்கல வாழ்த்து + ஒரு நூற்பா

I. தி. ஹாசினி, UKG D,o. K. திலகர், சென்னை – 91.

II. குமரகுருபரன் பிரவீன் S/o. P. சுவேதாரண்யன், சிறுபுலியூர்

III. ச. ஸ்ரீதர் UKG S/o. V. சரவணன், சீர்காழி

பிரிவு II — I to III Std: மங்கல வாழ்த்து + 3 நூற்பா

I. A.R. பவதாரிணி D/o. M. ஆதிசிவன், புதுச்சேரி

II. S. பிரணீதா III Std. D/o. T. சத்யநாராயணன், சென்னை – 58

III. பொன் சரவணராஜன் I Std. S/o. P. சீனிவாசன், பெண்ணாடம்

பிரிவு III — IV to VI Std: மங்கல வாழ்த்து + 6 நூற்பா

I. ஸ்ரீ உமையாள் பிரவீன், IV Std. D/o. P. சுவேதாரண்யன், சிறுபுலியூர்

II. வே. லோஷினி, V Std. D/o. S. வேல்முருகன், பெண்ணாடம்

III. A.R. அபிநயா, VI Std. D/o. M. ஆதிசிவன், புதுச்சேரி

பிரிவு IV — VII to IX Std: மங்கல வாழ்த்து + 12 நூற்பா

I. V.S. ஹர்ஷினி – VII Std. D/o. S. வேல்முருகன், பெண்ணாடம்

II. K. ஸ்ருதிகா – VIII Std. D/o. குமார், சென்னை–5

பிரிவு V — பெரியோர் – பொது மங்கல வாழ்த்து + 12 நூற்பா பொருளுரையுடன்

I. R. திவ்யா C/o. R. தினேஷ், சீர்காழி – ஸ்காட்லாண்ட்

பிரிவு VI — ஆறுதல் பரிசு

1. M.S. ஐங்கரன் UKG S/o. G. முத்துகுமார், செம்பனார்கோவில்
2. M.S. சர்வேசுவரன் S/o. மணிகண்டன், கிளிமங்கலம்
3. சமுத்ரா அருண்குமார் கத்தார், C/o. T. ராதாகிருஷ்ணன், மயிலாடுதுறை
4. திருமதி. ரம்யா மணிகண்டன், சென்னை – 56.

வெற்றியாளர்களுக்கு போட்டியின் பொறுப்பாளர்கள் மற்றும் கார்காத்தார் ஒப்புரவின் நல்வாழ்த்துக்கள்.

---

## காமதேனு சமூக நல அறக்கட்டளை தஞ்சாவூர்
## 2023 – 24–ஆம் ஆண்டிற்கு உதவித்தொகை வழங்கிய பெரியோர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | முனைவர் திருமதி. R. சாவித்திரி | – | 15,000.00 |
| 2. | திருமதி. துர்கா செல்வி திருஞானசம்பந்தம் | – | 5000.00 |
| 3. | திரு. திருஞானசம்பந்தம் | – | 5000.00 |
| 4. | திரு. இரத்தினவேல் சுப்பிரமணியம் | – | 5000.00 |
| | ஆக கூடுதல் | – | 30,000.00 |

### 2023–24 ஆண்டில் அறக்கட்டளை மூலமாக உதவித்தொகை பெற்றவர்கள்

| S.No | தகப்பனார் / தாயார் | மாணவர் பெயர் | பெற்ற தொகை |
|---|---|---|---|
| 1 | R. உமாமகேஸ்வரி | R. ஹரிஹரன் | 5000.00 |
| 2 | R. ரவிச்சந்திரன் | R. அபிராமி | 5000.00 |
| 3 | S. ரூபா தேவி | S. ஆகாஷ் | 5000.00 |
| 4 | C. ஆனந்த் | A. ஸ்ரீஹரிஸ் | 5000.00 |
| 5 | N. அருள்முருகன் | A. ஆதித்யராஜன் | 5000.00 |
| 6 | U. சுயம்புநாதன் | S. கீர்த்தனா | 5000.00 |
| 7 | M. ஞானப்பிரகாசம் | G. ரித்திகா | 5000.00 |
| 8 | M. சிவசங்கரி | M. ஜெகதீஷ் | 5000.00 |
| 9 | V. சிவரஞ்சனி | V. அரவிந்தராஜன் | 5000.00 |
| 10 | N. சக்திவேல் | S. ஆகாஷ் | 5000.00 |
| 11 | இராதாகிருஷ்ணன் | R. நந்தினி | 5000.00 |
| 12 | S. பாபு வெங்கடேசன் | B. லோகேஷ் | 5000.00 |
| 13 | S. சுசீலா ராணி | S. நித்யஸ்ரீ | 5000.00 |
| 14 | R. ரதி | R. சரண்யா | 5000.00 |
| 15 | G. கதிரேசன் | K. கீர்த்தனா | 5000.00 |
| 16 | S. தனலெட்சுமி | சுரேஷ்குமார் | 5000.00 |
| 17 | A. சுவாமிநாதன் | S. காவியா | 3000.00 |
| 18 | S. திலகா | S. பாவேந்தன் | 2000.00 |
| | | | 85000.00 |

S. மோகன்குமார், செயலாளர்
கதமதேனு சமூக நல அறக்கட்டளை

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| B 1/3 செல்வி **R. பானுபிரியா**<br>கேட்டை 3ம் பாதம்<br>எரவுட<br>பூர்வீகம் : முல்லையூர் (பெண்ணாடம்)<br>விருப்பம் : சமபணியில் உள்ள பொருத்தமான வரன் | 21.11.98<br>165 cm | B.E. (ECE) | Sr. Software Engineer<br>Fresh Works Technologies,<br>Chennai | திரு. T. Ramesh,<br>D.No. 11, SNR Flats,<br>Viswanathapuram Main Road,<br>Kodambakkam,<br>Chennai - 600 024.<br>Cell : 94445 56972, 90801 87596 |
| B 2/3 செல்வி **G. அமிர்தலஷ்மி**<br>திருவோணம் 3ம் பாதம்<br>வேளா<br>பூர்வீகம் : மடப்புரம், செம்பனார்கோவில் | 20.06.2000<br>157 cm | B.E.,<br>(Computer Science) | Insofsys System Engineer<br>Chennai<br>Rs. 30,000/PM | திரு. J. ஞானசுந்தர்,<br>49, 3வது குறுக்குத் தெரு,<br>சீனிவாச நகர், சிட்டலபாக்கம்,<br>சென்னை – 600 064.<br>Cell : 94446 54650, 94454 03753<br>E-mail : gnanasundar1@rediffmail.com |
| B 3/3 செல்வி **ச. நிறைமதி**<br>புனர்பூசம் 4ம் பாதம்<br>விச்சுடை<br>பூர்வீகம் : வீரசிகாமணி | 30.01.99<br>5' - 1" | B.Tech. (IT), | Working in Private Company,<br>Rs. 30,000/PM | திரு. சங்கரசுப்ரமணியன்,<br>2/294, வ.உ.சி நகர்,<br>தொழுதூர் அஞ்சல்,<br>திட்டக்குடி வட்டம்,<br>கடலூர் மாவட்டம்<br>Cell : 96980 19887 |
| B 4/3 செல்வி **மோ. சுபாஷினி**<br>சதயம் – 4ம் பாதம்<br>வேளா<br>பூர்வீகம் : காவனூர் (விருத்தாசலம்) | 25.09.96<br>165 cm | B.E (CSC)<br>. | Software Developer,<br>CITI Bank,<br>Tharamani, Chennai<br>Rs. 17.5 Lakhs/PA | திரு. T. Mohan,<br>337, Sembharathipoo Street,<br>Periyar Nagar South,<br>Virudhachalam - 606 001.<br>Cuddalore Dt.<br>Cell : 88709 62218, 90038 78328 |
| B 5/3 செல்வி **U. காயத்ரிதேவி**<br>அவிட்டம்<br>காருடையான்<br>பூர்வீகம் : தலைச்சங்காடு (மயிலாடுதுறை)<br>விருப்பம் : சமபடிப்பு, பணியில் உள்ள வரன் | 22.09.99<br>172 cm | B.Tech.,<br>Bio<br>(Technology) | | திரு. P. உமாபதி,<br>F4, மந்தராலயா சுபம் பிளாட்ஸ்,<br>52/21, அண்ணா தெரு,<br>AKA நகர், புதூர், அம்பத்தூர்,<br>சென்னை – 600 053.<br>Cell : 97910 07467 |
| B 6/3 செல்வி **வே. பிரியங்கா**<br>புனர்பூசம்<br>பனுவுட<br>பூர்வீகம் : கண்ணங்குடி (சிதம்பரம்) | 25.06.98<br>5' - 2" | B.E. (CSE), | | திரு. க. வேல்முருகன்,<br>எண். 5, கம்பர் தெரு,<br>ராமாபுரம், அம்பத்தூர்,<br>சென்னை – 600 053.<br>Cell : 99415 55628, 95511 17968 |
| B 7/3 செல்வி<br>**அவ்வை அனாமித்ரா. ரா [அஜி]**<br>சுவாதி 4ம் பாதம்<br>தீனுட<br>பூர்வீகம் : எடுத்துக்கட்டி, சாத்தனூர்<br>விருப்பம் : கோவையில் உள்ள வரன். | 28.07.2001<br>164 cm | CA<br>Finalist | Articleship<br>Auditor Office<br>Sulur CBE | திரு. B. Ramamurthy<br>Kurinji Street, 646,<br>Amarjothi Jai Nagar,<br>Kannampalayam PO & Road, Sulur,<br>Coimbatore - 641 402.<br>Cell : 95976 04719, 99424 37075 |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 8/3** செல்வி **R. Subhiksha**<br>Pooradam<br>Nannuda<br>பூர்வீகம் : Elanthope<br>விருப்பம் : Expecting Working professional in Bangalore, Born after 1996 | Age 24 | B.E (ECE)<br>. | Associate Design Software Engineer Tessolve Semi Conductor P., Ltd., Bangalore<br>Rs. 4 Lakhs/PA | திரு. V. Rajasekaran,<br>2/245 Main Road,<br>Elanthope (PO),<br>Mayiladuthurai - 609 201.<br>Cell : **94446 10907, 9444 777 670** |
| **B 9/3** செல்வி **மு. திவ்யபிரியா**<br>கேட்டை 2ம் பாதம்<br>வஞ்சினமுடை<br>பூர்வீகம் : செந்துறை – அரியலூர் (Dt)<br>விருப்பம் : டிகிரி முடித்த நல்ல பணியில் உள்ள வரன் | **02.06.96**<br>5' - 4" | B.A. (English) | | திரு. ச. முருகேசன் பிள்ளை,<br>1/53, நடுத் தெரு, வஞ்சினபுரம் (PO),<br>செந்துறை (Tk),<br>அரியலூர் (DT) – **621 714,**<br>Cell : **96263 97559** (Whatsapp)<br>**94869 67149, 85319 86109** |
| **B 10/3** செல்வி **G. Varshini**<br>Mirugaseeridam<br>Velanuda<br>பூர்வீகம் : Kuzhaiyur (Mayiladuthurai) | 06.06.97<br>150 cm | B.E (E&I)<br>M.B.A.,<br>. | L & D (Learning & Development)<br>HR Executive<br>TATA Elxsi,<br>Thoraipakkam,<br>Chennai | திரு. G. Govindaraju,<br>M-104, M Tower 1st Floor,<br>The Metro Zone (Behind VR Mall)<br>Anna Nagar, Chennai - 600 040.<br>Cell : **97890 54586, 98404 11578** |
| **B 11/3** செல்வி **சி. தர்ஷிணி**<br>பூராடம் 1ம் பாதம்<br>பூவனுட<br>விருப்பம் : சமபடிப்பு, பணியில் உள்ள வரன்<br>1995க்கு பிறகு பிறந்த வரன். | **7.9.2000**<br>168 cm | B.E., | Accenture,<br>Bangalore<br>Rs. 7.8 Lakhs/PA | திரு. R. சிவராமன்,<br>GB-2, சிவாலயா அப்பார்ட்மெண்ட்,<br>31, கீழப்புதுத் தெரு,<br>சிதம்பரம் – **608 001.**<br>Cell : **99527 98444, 98940 97753** |
| **B 12/3** செல்வி **R. புவன பவித்ரா**<br>பூராடம் 4ம் பாதம்<br>தென்னவராய<br>விருப்பம் : சமபடிப்புள்ள வரன் | **16.7.2000**<br>163 cm | B.E. (CSE) | C.T.S. Chennai<br>Rs. 6 Lakhs/PA | திரு. N. ரமேஷ்,<br>F-5, Seven Hills Residency,<br>Illupur Road, Ramakrishna Nagar,<br>Kallukuzhi, Trichy - 20.<br>Cell : **94451 40302, 90038 64304**<br>E-mail : ram2007naga@gmail.com |
| **B 13/3** செல்வி **Dr. S. கிருபா**<br>மிருகசீரிடம்<br>பல்லவராய<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : சமபடிப்பு, ஏற்ற வரன் | **11.02.95**<br>166 cm | M.B.B.S.,<br>M.S.<br>(Ophthamology) | அரசு மருத்தவர்<br>திண்டுக்கல் | திரு. பா.சபாரத்தினம்,<br>1-12-12, Plot No. 41, ஏ.டி.எஸ். நகர்,<br>சின்னாளப்பட்டி,<br>காந்தி கிராமம் அஞ்சல்<br>திண்டுக்கல் – **624 302**<br>Cell : **88384 24209**<br>E-mail :sabadbc@gmail.com |
| **B 14/3** செல்வி<br>**Dr. V. Priyadharshini**<br>Uthradam 4th Patham<br>Koodaluda<br>பூர்வீகம் : MA. Melvanniyur, Chidambaram<br>விருப்பம் : Middle / Upper Middle Class Carring, Supportive and Family oriented, Well educated, preferably Doctor. | Jan. 1995<br>5' - 2" | Internal Medicine<br>M.D.,<br>. | Sr. Resident Doctor at a Private Medical College, Chennai<br>Rs. 12-18 Lakhs/PA | திரு. J. Venugopalan,<br>B-703, Solitaire Appartments,<br>Mount Poonamallee High Road,<br>Porur, Chennai - 600 116<br>Cell : 99404 77263, 98949 28283<br>E-mail : venugopalan_ j @yahoo.com |
| **B 15/3** செல்வி **R. ஸ்ரீரச்சனா**<br>ரேவதி<br>நாரணகுடை<br>பூர்வீகம் : மூவலூர்<br>விருப்பம் : படித்து வேலையில் உள்ள, வெளிநாடு செல்ல விருப்பமுள்ள வரன். | **11.08.90**<br>173 cm | B.Tech.,<br>M.Sc. IT / Computer<br>. | Quality Assurance Engineer, Intutive Surgical, Sunnyvale, California USA<br>Visa H1K<br>I-140 Approved | திரு. A. ராஜசேகரன்,<br>B3, Aadarsh Apts.,<br>Old No. 567, New No. 918,<br>Poonamallee High Road,<br>Arumbakkam,<br>Chennai - 600 106.<br>Cell : 94425 44989 |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/3** செல்வன் **G. முல்லைவேந்தன்**<br>சுவாதி<br>விஸ்வராய<br>பூர்வீகம் : சேப்பாக்கம்<br>குறிப்பு : ராகு, கேது தோஷம் உள்ளது.<br>விருப்பம் : நல்ல குணமுள்ள வரன் | 10.08.97<br>175 cm | B.E,<br>(Mechanical) | மாருதி சுசுகி<br>கார் கம்பெனி<br>விழுப்புரம்<br>Rs 3 Lakhs/PA | திரு. A. கோவிந்தசாமி TNSTC Retd.<br>வெள்ளாழத் தெரு, தொளார் அஞ்சல்,<br>திட்டக்குடி தாலுகா,<br>கடலூர் மாவட்டம் – 606 111.<br>Cell : 98429 98802, 63856 26769 |
| **G 2/3** செல்வன் **G. விக்னேஷ்**<br>பூரம்<br>பொன்னாருடை<br>பூர்வீகம் : மேலப்பாவூர் | 03.07.95 | B.E. (Computer Science)<br>CCNA (Global Certified)<br>MCSA | I.T. Executive<br>Go Colors<br>(Go Fashions India Ltd., Chennai)<br>Rs 3,36,000/PA | திரு. C. கணபதி,<br>10/41, ஜெயின் நகர்,<br>ஆறுமுகநேரி P.O.,<br>திருச்செந்தூர் T.K.,<br>தூத்துக்குடி Dt. – 628 202.<br>Cell : 94880 70503 |
| **G 3/3** செல்வன் **M. ராஜேஷ்குமார்**<br>சுவாதி<br>பாக்குட<br>பூர்வீகம் : ஆவணியாபுரம் | 22.9.90<br>173 cm | B.Sc.<br>(Computer Science)<br>MCA | Bristol Healthcare Service, Mogappair, Ambattur, Chennai<br>Rs. 5 Lakhs/PA | திரு. C. Mohan,<br>Panchukara Chetty Street,<br>Kuttalam - 609 801.<br>Cell : 87548 60982, 87781 05413 |
| **G 4/3** செல்வன் **K. மணிவேல்**<br>கேட்டை<br>முதனுட<br>பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்)<br>விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன்/<br>பணிக்கு செல்ல விருப்பமுள்ள வரன் | 15.02.93<br>6' - 0" | B.E.,<br>(EEE), | Jr. Asst.<br>Commercial Tax<br>Rs 36,000/PM | திரு. T. கேசவன்,<br>5/234-2, நியூ அம்பேத்கர் நகர்,<br>ஜாகீர்ரெட்டிப்பட்டி,<br>சேலம் – 636 302.<br>Cell : 94422 59692 |
| **G 5/3** செல்வன் **இரா. மணிபாரதி**<br>தொழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் | 04.03.96<br>168 cm | B.Sc., | MRF Ltd.,<br>Arakonam<br>Rs.6 Lakhs/PA | திரு. தி. இராஜாமணி,<br>540, கண்ணப்பா தெரு,<br>நசரத் பேட்டை, பூந்தமல்லி<br>சென்னை – 600 123.<br>Cell : 89399 91174, 98406 87849 |
| **G 6/3** செல்வன் **S. கௌசிக்**<br>அவிட்டம்<br>நன்னுட<br>பூர்வீகம் : மழவராயநல்லூல் (சிதம்பரம்)<br>விருப்பம் : சமபடிப்புடன் அயல் நாட்டில் பணிபுரிய விருப்பம் உள்ள வரன். | 21.05.95<br>5' - 9" | B.Tech.,<br>MBA., | Project Engineer<br>CAMP - Qatar | திரு. V. சங்கர்,<br>53, தேவதாஸ் நகர்,<br>விபீஷ்ணபுரம்,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 94862 23517, 70100 41488 |
| **G 7/3** செல்வன் **S. காளிச்சரன்**<br>பூரம் – 4ம் பாதம்<br>பில்லாலுட<br>பூர்வீகம் : திருமாந்துறை, கும்பகோணம்<br>விருப்பம் : சமபடிப்பு/பணியில் உள்ள வரன் | 12.09.96<br>177 cm | B.Tech. (IT) | Reliance JIO<br>Bangalore<br>Rs. 12 Lakhs/PA | திரு. G. சுவாமிநாதன்,<br>7/1744, முருகையா நகர்,<br>புளியம்பேட்டை,<br>மேலஅம்மாசத்திரம் (POST),<br>திருவிடைமருதூர் T.K.,<br>கும்பகோணம் – 612 103.<br>Cell : 99443 05331, 96006 32510 |
| **G 8/3** செல்வன் **கா. வெங்கடேஷ்**<br>உத்திரம்<br>கொங்குராய<br>பூர்வீகம் : பண்ணப்பட்டு – சிதம்பரம் | 17.08.96<br>172 cm | B.E. (ECE) | Sedin Technologies<br>Chennai<br>Rs. 10,00,000/PA | திரு. C. கார்த்திகேயன்,<br>304-Surya Appartments 2nd Floor,<br>Surya Garden, Peelamedu, Kovai<br>Cell : 93457 50510, |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/3** செல்வன் **D. ஸ்ரீசபரிராஜன்**<br>பூரம்<br>எரவுட<br>பூர்வீகம் : இறையூர், பெண்ணாடம்<br>விருப்பம் : திருமணத்திற்கு பிறகு சிங்கப்பூர் செல்ல விருப்பமுள்ள வரன் | **22.05.91**<br>173 cm | B.E. (EEE) | Roatary Pvt.<br>Singapore<br>Rs. 12 Lakhs/PA | திரு. A. தட்சிணாமூர்த்தி,<br>180 A, கொத்தட்டை ரோடு,<br>இறையூர் (PO) – **606 111.**<br>பெண்ணாடம் RS, கடலூர் DT,<br>Cell : **97879 74287, 99433 03570** |
| **G 10/3** செல்வன் **T. பூமிநாதன்**<br>மூலம் 2ம் பாதம்<br>தென்னதரிய<br>பூர்வீகம் : வயலூர் – குன்னம் வட்டம்<br>பெரம்பலூர் மாவட்டம் | **09.04.96** | Dip. Mech.<br>Engg. | TNSTC<br>ஓட்டுநர் | திருமதி T. அமுதவள்ளி,<br>54, வடக்கு தெரு,<br>வயலூர், குன்னம்வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் – **621 716**<br>Cell : **98433 89412, 90479 12559, 99437 784991** |
| **G 11/3** செல்வன் **C. வெங்கடேஷ்**<br>கார்த்திகை<br>சாத்தனுட<br>பூர்வீகம் : கழனிவாசல் | **11.05.94**<br>175 cm | B.E.<br>(EEE) | Branch Manager,<br>South Indian Bank<br>Chennai<br>Rs 12 Lakhs/PA | திரு. K. சொக்கலிங்கம்,<br>21/A/14, கீழ வீதி, பேரளம்,<br>ஸ்ரீ ரெங்கநாதர் நகர்,<br>நன்னிலம் தாலுகா,<br>திருவாரூர் மாவட்டம் – **609 405.**<br>Cell : **63800 41375, 89039 02303, 94871 02908** |
| **G 12/3** செல்வன் **M. ஸ்ரீநாத்**<br>புனர்பூசம்<br>சேவிதிரியா<br>பூர்வீகம் : குத்தாலம் | **21.09.92**<br>6' - 0" | B.E.<br>(EEE) | Site Supervisor,<br>Dubai<br>Rs 60,000/PM | திரு. M. கலாவதி,<br>W/o. மனோகரன் (Late)<br>சென்னியநல்லூர்,<br>குத்தாலம் தாலுகா,<br>மயிலாடுதுறை மாவட்டம்<br>Cell : **73732 05502, 97159 44875, 94430 31280** |
| **G 13/3** செல்வன் **P. ஐயப்பன்**<br>ரேவதி<br>மாருடை<br>பூர்வீகம் : கன்னியாக்குடி<br>விருப்பம் : தகுந்த வரன் | **21.11.96**<br>5' - 7" | D.E.E.E., | பரமா<br>இன்ஜினியரிங்<br>காஞ்சிபுரம்<br>சென்னை | திரு. சொக்கலிங்கம்,<br>குடியானத் தெரு,<br>கீழமருதாந்தநல்லூர் &<br>ஆனந்ததாண்டவபுரம் அஞ்சல்,<br>மயிலாடுதுறை – **609 103.**<br>Cell : **97890 90607, 96778 01796** |



## ''துன்பம் என்று ஏதும் இல்லை''

– கோலாகலன்

சென்ற முழுநிலா அன்று பொன்மாரில் உள்ள சித்தர் கோயிலுக்குச் சென்றிருந்தேன். அங்கு சிவகாமிச்சித்தர். அவரைச்சுற்றி வழக்கம் போல் அடியார் கூட்டம். ஒருவர் ''வாழ்க்கையின் பொருள் என்னவென்றே எனக்குப் புரியவில்லை சுவாமி'' என்றார். சித்தர் உடனே என்னை நோக்கினார். உடனே நானும் ''உண்மைதான் சுவாமி!'' ''எனக்கும் அப்படித்தான்!'' என்றேன். முறுவலித்த சித்தர் பேசத் தொடங்கினார்.

''ஒவ்வொரு உயிரும் நுகர்ச்சிக்காகத்தான் வாழ்கின்றது. அந்த நுகர்ச்சிக்கு உதவுவது மூன்று. ஒன்று இறைவன். இரண்டு அவன் அளித்த கொடை இயற்கை. மூன்று அவன் படைப்பில் உள்ள உயிர்கள். இவை நேரடியாகவோ (அ) மறைமுகமாகவோ உனக்கு சேவை செய்து உதவுகின்றன. இது உண்மை. இறைவனை நன்றியுடன் நினைத்து, இயற்கையை இனிதே காத்து, ஏனைய எல்லா உயிர்களையும் நேசித்து தொண்டு செய்வதுதான் வாழ்வின் பொருள்!'' உனக்கும், உன் குடும்ப நலத்திற்கும் வளத்திற்குமான உன் செயல்பாடுகளை அறத்தோடு அமைத்துக்கொள்ளும் அதே நேரத்தில் மேற்சொன்ன மூன்றையும் மறத்தலாகாது.''

''இதில் வெற்றி பெற வேண்டுமெனில் செய்ய வேண்டுவது என்ன சுவாமி ?'' வேறொருவர்.

''அருள் புன்னகை'' ஆம். உண்மையான புன்னகை ஒருவரை கவனமுடன் பாதுகாக்கும். அப்புன்னகை ஏதோ ஓர் உன்னத உண்மையை உணர்த்தும். அது தெளிந்த புரிதலைத் தந்தருளும். அப்புரிதல் உலக நடப்புகள் யாவும் சரியே என்று ஏற்க வைக்கும். அதனால் அது சரியானதை நன்கு செய்யவைக்கும். செய்தமையால் அது உன்னை மகிழ்வுடன் சிரிக்க வைக்கும். அச்சிரிப்பு ஒரு ஒப்பற்ற மனநிறைவினை உனக்களிக்கும். அதுவே உன் வாழ்வை வெற்றிக்கு ஆளாக்கும். அப்பொழுது மலரும் புன்னகை உன் நன்றி உணர்வினை உலகிற்கு உணர்த்தும். எனவே அருள்கூர்ந்து அருள்புன்னகை செய்ய மறக்காதே! மறுக்காதே!'' என்றார்.

''அப்ப துன்பம் வரும்பொழுது சுவாமி.... ?'' துன்பம் என்று ஏன் எண்ணுகிறாய். துன்பங்களுள் பெருந்துன்பம் இறப்பு என நீ எண்ணலாம். உண்மையில் அது ஓர் உயிருக்குக் கிடைத்த விடுதலையாகும். அவ்விடுதலை மூலம் வாழ்நாளில் அவ்வுயிருக்கு உரிய உறவினர்கள் கூட ஒரு வகையில் விடுதலை பெறுகிறார்கள். அதாவது சென்றவரைப் பராமரிக்கும் பணியிலிருந்து விடுதலை. அவ்வளவே! ஒருவர் பிரிவால் மற்றவர் அடைவது வருத்தம், அல்லல், அழுங்கல், இடுக்கண், இன்னல், உறுகண், கம்பலை, கவலை, துயர், துன்பம், நடுக்கம், படர், பிணி, பீழை, பையுள், மடி, துனி, நடலை ஆகிய அனைத்தும். இவற்றுள் ஏதேனும் ஒன்றால் ஒருவர் பாதித்தார் என்றால் அவர் வாழ்வின் உண்மைப் பொருளைப் புரியாதவர் என்று தான் சொல்ல வேண்டும். இருளும் பகலும் போல, இளமையும் முதுமையும் போலத்தான் இறப்பும் பிறப்பும், இன்பமும் துன்பமுமாகும். ஒன்றை ஏற்று ஒன்றை வெறுப்பது சரியல்ல. எதனையும் சமமாக என்னும் இருவினை ஒப்பு எனும் பக்குவம் பெற வேண்டும். இப்பக்குவம் பெறாதவர் பெறுவது மன இறுக்கம். இது அவர் கவனத்தைக் கலைக்கும். கவனம் கலைய வருவது குழப்பம். குழப்பம் தருவது எரிச்சல். எரிச்சல் கெடுப்பது இனிய உறவை. உறவு கெட ஒத்துழைப்பு விலகும். இதனால் சிக்கலே மிகும். சிக்கல் தருவது குருதிக் கொதிப்பு. இதனால் வருவது இதயத்தாக்கம். தாக்கம் தருவது உயிருக்கு ஊறு. ஊறு தவிர்க்க ஞானம் தேடு. ஞானம் என்பது ஈசன்பால் அன்பே. அன்பே சிவம். சிவம் இருப்பது சீவனுள்ளும். சீவனை நேசி. சிவனருள் கிட்டும். சிவனருள் கிட்டிட பெறுவது சிவபோகமே! சிவத்தையே சிந்தி. சிக்கல் இராது உன்வாழ்வில்.'' என்று கூறி முடித்த சிவகாமிச்சித்தர் பாடி ஆடத் தொடங்கினார்.

ஆடு பூவே! கூத்தாடு பூவே!
பாடு பூவே! பண்பாடு பூவே!
இன்பமும் இன்னலும் ஒரு காசின்
இரு பக்கம் என்று பாடு பூவே!
புன்னகை பூக்க மறுக்காதே!
புதிரென வாழ்வை எண்ணாதே!
கல்லறைக்கு காவல் எதற்கு
பட்டிப் பூவே! இங்கு சென்றவர்
திரும் பார்பட்டிப்பூவே! இங்கு
இருப்பவர் அங்கு செல்ல விரும்பார்
பட்டிப்பூவே! கல்லறைக்குக்
காவல் எதற்குப் பட்டிப்பூவே!
ஆடு பூவே! கூத்தாடு பூவே!
பாடு பூவே! பண்பாடு பூவே!

வாழ்வின் பொருள் யாருக்குப் புரிந்ததோ இல்லையோ ? எனக்கு நன்றாகப் புரிந்துவிட்டது.




## கவின்மிகு தாய்லாந்து

நமது நங்கநல்லூர் வட்டார கார்காத்தார் சங்கத்தின் சார்பில் வருடம் ஒரு முறை திட்டமிடப்படும் வெளிநாட்டு சுற்றுலாவிற்கு இந்த வருடம் தாய்லாந்து செல்வதாக முடிவெடுக்கப்பட்டு சங்கத்தின் செயலர் திரு. தியாகராஜன் அவர்களால் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டது. இந்த சுற்றுலாவில் 53 உறவினர்கள் கலந்து கொண்டனர். இந்த சுற்றுலாவை சென்னையில் உள்ள விஜயலட்சுமி டிராவல்ஸ் உதவி உடன் திரு. தியாகராஜன் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். ஜனவரி 19ஆம் தேதி இரவு 11:30 மணி அளவில் சென்னை விமான நிலையத்திலிருந்து ஏர் ஏசியா விமானம் மூலம் தாய்லாந்து புறப்பட்டோம். ஜனவரி 20ஆம் தேதி அதிகாலை 4.30 மணி அளவில் தாய்லாந்து விமான நிலையம் சென்றடைந்தோம். அங்கிருந்து விஜயலட்சுமி டிராவல்ஸ் ஏற்பாடு செய்திருந்த இரண்டடுக்கு பேருந்தின் மூலம் பட்டாயா புறப்பட்டோம். பட்டாயாவில் தங்குவதற்கு சீசன் ஹோட்டலில் (3 star) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஹோட்டலுக்கு செல்வதற்கு முன் காலை சிற்றுண்டி Sri Racha Tiger Zoo உடன் இணைந்த உணவகத்தில் அங்கு உலா வரும் புலிகளை ரசித்தபடி உண்டு மகிழ்ந்தோம். தங்கும் இடத்திற்கு செல்வதற்கு முன் 18 மீட்டர் உயரமுடைய குன்றின் மேல் இருக்கும் தங்க நிற புத்தரை தரிசித்தோம். அங்கு புத்தருடன் அவர்களது சீடர்களின் சிலைகளும் இருந்தன. அந்த குன்றின் மேல் இருந்து பார்க்கும் பொழுது கோரல் ஐலேண்ட் மற்றும் பட்டாயாவின் சுற்றுப்புறங்களை காண முடிந்தது. அதன் பின் ஹோட்டலுக்கு சென்று ஓய்வெடுத்தபின் மதிய உணவிற்கு அருகில் இருந்த பாம்பே ரெஸ்டாரண்டில் நமது இந்திய உணவை அருந்தி மகிழ்ந்தோம். அதன் பின் டைகர் பார்க் சென்று அங்கிருந்த புலிகளுடன் அருகில் அமர்ந்து, தொட்டு தடவி, பயமின்றி புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்துக் கொண்டோம். செல்ல புலிக்குட்டிகள்! பேட்டரி காரில் முழுவதுமாக சுற்றி பார்க்கையில் ஓரிடத்தில் இரண்டு மூன்று புலிகள் படுத்துக்கொண்டு வழிவிடாமல் தர்ணா செய்தன. பின்பு மனம் இரங்கி வழிவிட்டன. மறக்கமுடியாத அனுபவம்! அன்று மாலை பட்டாயாவில் புகழ்பெற்ற அல்கசார் ஷோ சென்று பார்த்தோம். அல்கசார் ஷோ அரங்கின் வெளியே காத்திருந்த நேரத்தில் அதன் எதிர்புறத்தில் இருந்த மிகப் பெரிய பழ மார்க்கெட்டிற்கு சென்றோம். அங்கு அனைத்து வகை பழங்களும் இருந்தது. அல்கசார் ஷோவில் அங்கு நடந்த நடனத்திற்கு ஏற்றார்போல் உடனுக்குடன் ஒலி, ஒளி, மேடை அரங்கு அமைப்பை தேவைக்கு ஏற்ப மாற்றுவது அனைவரையும் கவர்ந்தது. அரங்கின் வெளியில் இருந்த ரெஸ்டாரண்டில் இரவு உணவை முடித்து தங்கும் இடத்திற்கு திரும்பினோம். தங்கும் இடத்திற்கு அருகில் இருந்த கடற்கரைக்கு விருப்பமானவர்கள் நைட் வாக்கிங் சென்று மகிழ்ந்தனர். ஜனவரி 21ஆம் தேதி காலை பட்டாயா சிட்டியில் மிகவும் புகழ்பெற்ற சாகசங்கள் கூடிய கோரல் ஐலேண்டிற்கு சென்றோம். அங்கு சிறு வயதினர் முதல் வயதானவர் வரை அனைவரும் பாராசெய்லிங்கில் பறந்து மகிழ்ந்தோம். கடல் பகுதிக்கு மேலே படகுடன் இணைக்கப்பட்ட பாராசூட் மூலம் பறந்து சென்று திரும்பியது அனைவருக்குமே த்ரிலிங்க் ஆக இருந்தது. அதன் பின் அங்கிருந்து படகின் மூலம் சிறிது தொலையில் இருந்த கடல் பகுதிக்குச் சென்று பனானா ரைட்ஸ் மற்றும் ஜெட் ஸ்கை விளையாட்டுகளை விளையாடி மகிழ்ந்தோம். ஒரு சிலர் கடலுக்கு அடியில் சென்று Seawalk செய்தனர். பிராண வாயு உருளையுடன் இணைக்கப்பட்ட தலைக்கவசம் அணிந்து Sea divers துணைகொண்டு பல வகை மீன்கள் மற்றும் பவழப்பாறைகளை கண்டு மகிழ்ந்தோம். மதிய உணவு உண்டவுடன், அங்குள்ள பழமையான மிதக்கும் சந்தைக்கு சென்றோம். அங்கிருந்த 8 பேராக செல்லக்கூடிய படகில் சென்றபடியே கடைகளை சுற்றி வந்தோம். ஒரு சிலர் தங்கள் உறவினர்களுக்கும், குழந்தைகளுக்கும் தேவையான உடைகள், பரிசு பொருட்களை வாங்கினர். அங்கு நாங்கள் அருந்திய இளநீர் மிக சுவையாக இருந்தது. அந்நாட்டில் பிரபலமான மாம்பழம் சுவைத்து மகிழ்ந்தோம். ஜனவரி 22ஆம் தேதி காலை மிகத்தூய்மையாக காணப்பட்ட பட்டாயா நகரத்திலிருந்து விடை பெற்று பாங்காங்

புறப்பட்டோம். பாங்காங் செல்லும் வழியில் வரலாற்று சிறப்புமிக்க சாஞ்சரி ஆப் ட்ரூத் என்ற இடத்திற்கு சென்றோம். இந்த இடம் கப்பல் வடிவில் முழுவதும் மரவேலைப்பாடுகளுடன் அற்புதமாக இருந்தது. ஆணிகளே உபயோகிக்காமல் மரங்களை இணைத்து உள்ளனர். கோயிலும், அரண்மனையும் இணைந்த வடிவில் இருந்தது. வாழ்வுக்கு தேவையான அடிப்படை உண்மைகள் ஏழு பற்றி ஏழு தூண்கள் இருந்தன. நமது முழுமுதல் கடவுள் கணபதி, சிவன், பிரம்மா, விஷ்ணு, சூரியன், சந்திரன் என பல்வேறு சிற்பங்கள் இருந்தன. குடும்ப அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து இருந்தனர். அங்கு ஒரு பெண் வழிகாட்டி மிக அருமையாக அனைத்து காட்சிகளையும் விளக்கினார். அதன் பின் மதிய உணவு உண்டுவிட்டு தங்க புத்தர் சிலையை காணச் சென்றோம். இந்த புத்தர் சிலை 5500 கிலோ எடை உடையது. முழுவதும் தங்கத்தால் ஆனது என்று எங்களுடன் பயணம் செய்த விஜயலட்சுமி டிராவல்ஸ் சேர்ந்த விஜய் ஆனந்த் கூறினார். இந்த தங்க புத்தர் கோவில் பார்ப்பதற்கு கண்களுக்கு விருந்தாகவும் மனதிற்கு அமைதி தருவதாகவும் இருந்தது. அங்கே அமர்ந்து தியானம் செய்தோம். பின் அங்கிருந்து புறப்பட்டு இரவு உணவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குரூஸ் கப்பலுக்கு சென்றோம். இந்த இடம் பிரம்மாண்டமான கட்டடங்களுடன் ஷாப்பிங் மால் போல் இருந்தது. நாங்கள் அங்கு சென்றவுடன் காத்திருந்த நேரத்தில் ஒலி, ஒளி அமைப்புடன் கூடிய வண்ணமிகு நீரூற்று ஷோ பார்த்தோம். குரூஸில் டின்னர் சாப்பிட்ட பிறகு சுற்றுலா வந்த அனைவரும் பல பாடல்களுக்கு ஆடிப்பாடி மகிழ்ந்தனர். வயது வித்தியாசமின்றி அனைவரும் ஆடுவதை அங்குள்ளோர் வியப்புடன் பார்த்தனர். தமிழ் பாடல்களும் நிறைய பாடினர். ஆடலுடன் பாடலையும் ரசித்தோம். இறுதியில் வந்தே மாதரம் என்று முழக்கமிட்டு நிறைவு செய்தோம். இரவில் கப்பலில் பாங்காங் நகரைச் சுற்றிப்பார்த்தது இன்பமாக இருந்தது. அதன் பின் இரவு தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹோட்டல் பிரின்ஸ்டன் சென்றோம். 23ஆம் தேதி காலை ஹோட்டலில் இருந்து கிளம்பி மரைன் பார்க் சென்று அங்கு மட்டுமே காண முடிந்த உரன்குட்டான் ஷோ கண்டோம். அதன்பின் எலிபன்ட் ஷோ, டால்பின் ஷோ மற்றும் ஸ்கை வார் கண்டு மகிழ்ந்தோம். யானைகள் படம் வரைவதையும், பந்து விளையாடுவதையும், கண்டுகளித்தோம். டால்பின்களின் நீர் விளையாட்டுக்கள் பார்க்க, பார்க்க தெவிட்டவில்லை! உராங்கொட்டான் குரங்குகளின் மல்யுத்த நாடகத்தை கண்டு ரசித்தோம். அதன்பின் அருகில் இருந்த மிகப்பிரமாண்டமான ஏறத்தாழ 1000 பேர் ஒரே சமயத்தில் உணவருந்தக்கூடிய அரங்கத்தில் சுவையான மதிய உணவு அருந்தினோம். அங்கு பிரபலமான ஐஸ்கிரீம் சாப்பிட்டோம். அதன் பின் ஸஃபாரி வேர்ல்ட் சென்று நாங்கள் அனைவரும் பேருந்தில் இருந்தபடி வெளியில் இருந்த பல வகை விலங்குகளை, கங்காரு, ஒட்டகசிவிங்கி, நீர்யானை, சிங்கம் போன்ற விதவிதமான மிருகங்களை பார்த்த வண்ணம் பயணித்தோம். தாய்லாந்து விமான நிலையத்திற்கு வரும் வழியில் மிகப்பெரிய ஒரு சூப்பர் மார்க்கெட்டில் பேருந்தை நிறுத்தி எங்களது உறவினர்கள் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான சாக்லேட் மற்றும் உடைகளை வாங்கிக் கொண்டு விமான நிலையம் வந்தடைந்தோம். விமான நிலையத்திற்கு வெளியில் எங்களுக்கு சுற்றுலாவிற்கு உதவிய பேருந்து ஓட்டுனர், விஜயலட்சுமி டிராவல்ஸ் சேர்ந்த விஜய் ஆனந்த் தாய்லாந்தை சுற்றி பார்க்க உதவிய மிஸ் மேங்கோ மற்றும் இந்த சுற்றுலாவிற்கு அனைத்து ஏற்பாடுகளிலும் உதவிய திரு. சரவணகுமார், திருமதி. ஓவியா சரவணகுமார் ஆகியவருக்கு சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தோம். அதன் பின் விமான நிலையத்திற்குள் சென்று கையில் இருந்த இரவு உணவை உண்டோம். தாய்லாந்து நேரப்படி இரவு 9.30 மணி அளவில் புறப்பட்ட ஏர்ஆசியா விமானம் மூலம் சென்னைக்கு திரும்பினோம். நமது இந்திய நேரப்படி இரவு 11.30 மணி அளவில் சென்னை விமான நிலையம் வந்தடைந்தோம். நாங்கள் சுற்றுலா புறப்படும்போது தாய்லாந்து டூர் என்பது இளம் வயதிற்கு உடையது. அங்கு நாம் பார்ப்பதற்கு என்ன இருக்கிறது என்று நினைத்துக் கிளம்பினோம். ஆனால் சிறு குழந்தைகள் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை அனைவருமே நான்கு நாட்களும் மனநிறைவுடன் ஒரே குடும்பம் போல பயணம் செய்து சுற்றுலா இனிதாக முடிந்தது. இந்த மகிழ்ச்சி சுற்றுலாவை ஏற்பாடு செய்த திரு. தியாகராஜன் அவர்களுக்கும் மேலும் இந்த சுற்றுலாவிற்கான திட்டமிடுதலில் உதவிபுரிந்த திரு. சரவணகுமார், திருமதி. ஓவியா சரவணகுமார் மற்றும் நிலவு ஆகியோருக்கும் மிக்க நன்றி.

– கலையரசி ராஜசேகர்,

தலைவி

நங்கநல்லூர் கார்காத்தார் சங்க மகளிரணி

# சங்க நிகழ்வுகள்

## சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

### நங்கநல்லூர்

செயற்குழு கூட்டம் சங்க தலைவர் இல்லத்தில் 25.2.2024 அன்று தலைவரது வரவேற்புடன் துவங்கியது.

சங்க பொருளாளர் மாதாந்திர வரவு செலவு, கையிருப்பு விவரங்களை செயற்குழுவுக்கு சமர்ப்பிக்க குழு ஏற்றுக்கொண்டது.

சென்ற மாதத்திய கூட்ட அறிக்கையினையும் சங்கத்தின் பிற நிகழ்வுகளையும் சங்க செயலாளர் விவரித்து குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

ஜெயம்கொண்டம் பகுதி சங்கங்களின் பொன்விழா சிறப்பாக அமைய வாழ்த்துக்கள். சங்கத்திலிருந்து பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பிக்க உறுப்பினர்களை கேட்டு கொள்ளப்பட்டது.

சூழ்நிலை காரணமாக மகளிர் தினம் நடைபெறும் தேதி (தினம்) மாற்றப்பட்டுள்ளது.

நமது கார்குல சொந்தம் திருநெல்வேலி கீழப்பாவூர் பி.ஆர். சோமசுந்தரம் பிள்ளை அவர்களின் மகள் கோகிலா, B.Tech. LLB (Hons) அவர்கள் நீதிமன்ற நடுவர் தேர்வில் வெற்றி பெற்று நீதிபதியாக தேர்வு பெற்றுள்ளார். கோகிலாவின் இந்த தேர்ச்சி கார்குலத்திற்கு பெருமையை தேடி தந்துள்ளது. நங்கநல்லூர் சங்கத்தின் வாழ்த்துக்கள் பாராட்டுகள் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செயற்குழு உறுப்பினர் திரு. G. செந்தில்நாதன் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவேறியது.

– க. சரவணன், தலைவர்

### அண்ணாநகர் :

சங்க கூட்டம் 18–2–2024 ஞாயிறு அன்று அம்பத்தூர் எஸ்டேட் ல் துணைத்தலைவர் அ. ராஜேந்திரன் அவர்களின் அலுவலகமான வாகை கட்டிடத்தில் நடைபெற்றது. முதலில் சிவகாமியின் செல்வன் திரு. பாலசுப்ரமணியன் – புனிதவதி அவர்களின் மகள் மீனா சிவாயனிக்கும், ஆடிட்டர் பாண்டியன் – அன்புச்செல்வி அவர்களின் மகன் விஷாலுக்கும் 8–2–2024 அன்று சிதம்பரத்தில் நடந்த திருமணவிழாவிற்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாதமும் ஒரு வயதான தம்பதியை அழைத்து வந்து அவர்களை வாழ்த்தி சிறப்பிக்கலாம் என திரு. டி. தியாகராஜன் அவர்கள் சொன்ன ஆலோசனையை எல்லோரும் ஒரு மனதாக ஏற்றுக்கொண்டார்கள். திரு. சத்ய நாராயணன் பேசும்போது இளைஞர்கள் எல்லோரும் அவர்களது கார்குல நண்பர்களை சங்கத்தில் சேர்க்க முயற்சி எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மார்ச் மாத கூட்டம் ஆலோசகர் விவேகானந்தன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. நிறைவாக திரு. இளங்கோ வாசுதேவன் அவர்களின் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே முடிவு பெற்றது. நன்றி!

என். ஆனந்தகணபதி.

9094682821

### குரோம்பேட்டை

குரோம்பேட்டை கார்காத்தார் சங்க செயற்குழு கூட்டம் 25–02–24 அன்று மாலை 6.00 மணி அளவில் சௌபரனிகா கான்ஸ்டரக்ஷன் சிட்லபாக்கத்தில் தலைவர் திரு.மனோகர் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

செயலாளர் திரு.தியாகராஜன் கார்காத்தார் இளவல்களுக்கு என பிரேத்தியேகமாகவும், இலவசமாகவும் நம் சங்கம் நடத்தும் TNPSC குரூப் IV பயிற்சி குறித்து விளக்கினார். பயிற்சியை விரிவுபடுத்தவும் செம்மைப்படுத்தவும் திட்டங்கள் குறித்து விவாதிக்க பட்டது.

கோடை விடுமுறையில் ஒருநாள் சுற்றுலா திட்டமிட பட்டது. பரலி.சு.நெல்லையப்பர் நினைவு நாள் வரும் 28–03–24 அன்று காலை 8.00 மணி குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் உள்ள

நெல்லையப்பர் சிலைக்கு மாலை அணிவித்து மிக விமர்சையாக சங்க தலைவர் திரு.மனோகர் தலைமையில் முன்னாள் நீதியரசர் திரு.வள்ளிநாயகம், மனிதநேயம் திரு.முத்துக்குமாரசாமி, மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பு தலைவர் திரு.KKR.சுரேஷ் மற்றும் நிர்வாகிகள், சென்னை கார்காத்தார்சங்க முன்னாள் தலைவரும் குரோம்பேட்டை கார்காத்தார் சங்க ஆலோசகருமான திரு.சபா.சிவகுமார், சென்னை கார்காத்தார்சங்க தலைவர் திரு. சோமசுந்தரம் மற்றும் நிர்வாகிகள் என பலரையும் அழைத்து கொண்டாட திட்டமிடப்பட்டது.

பா. தியாகராஜன், செயலாளர்

## போளூர் :

11–2–24 அன்று சங்க செயற்குழு கூட்டம் கௌரவ தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. சங்க தலைவர் திரு. இராமலிங்கம் வரவேற்புரை ஆற்ற சங்க செயலாளர் திரு. சந்திரமோகன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி செயற்குழு உறுப்பினர்கள் தங்கள் ஆலோசனைகளை தெரித்தனர். கௌரவ ஆலோசகர் திரு. இளங்கோ அவர்களின் தந்தை மணக்குடி திரு. சுவாமிநாதன் பிள்ளை அவர்கள் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. செயற்குழு உறுப்பினர்கள் மூலம் போளூர் சங்க உறுப்பினர்கள் முன்னூறு பேரின் முகவரி மற்றும் தொலைபேசி எண் சரிபார்த்தல் பணி செய்வது என முடிவு எடுக்கப்பட்டது. செயற்குழு உறுப்பினர் திரு. சரவணன் அவர்கள் நன்றியுரை வழங்கியதுடன் இனிய மாலை விருந்தளித்த திரு. கல்யாணசுந்தரம் குடும்பத்தாருக்கு நன்றியையும் கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

S. சந்திரமோகன்
செயலாளர்

## பெருங்களத்தூர் :

சங்க செயற்குழு கூட்டம் 28–01–2024 அன்று சிவாலி ஹாலில் சங்கத் தலைவர் திரு. R. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் அனைவரும் இணைந்து தமிழ்த்தாய் வாழ்த்து பாட இனிதே துவங்கியது.தலைவர் திரு. R. கார்த்திகேயன் அவர்கள் தான் வெளிநாடு சென்றிருந்த போது நடைபெற்ற அனைத்து சங்க நிகழ்வு நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடத்திட்ட நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் ஒத்துழைப்பு நல்கிய சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்தார்கள். 2023–ஆம் ஆண்டில் 17 கார்குல குடும்பங்கள் உறுப்பினராக இணைத்துக் கொண்டார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் பதிவு செய்து கொள்கிறோம். மேலும் நமது பகுதியில் வசித்து வரும் கார்குல சொந்தங்கள் அனைவரையும் உறுப்பினர்களாக சேர்க்க செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

31–12–2023 அன்று நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளிலும் தாமாக முன்வந்து உதவிய திருவாளர்கள் R. முருகேசன், S. நடராஜன், R. சண்முகசுந்தரம், S. முத்துகுமார் ஆகியோரின் சேவைகளைப் பாராட்டி பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள். பொருளாளர் R. சாந்தி அவர்களால் படிக்கப்பட்ட 2023–ஆம் ஆண்டிற்கான வரவு – செலவு கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் முன்னேறிய சமுதாயத்தினருக்கு வழங்கப்பட்ட பத்து சதவீத இட ஒதுக்கீட்டினைதமிழ்நாட்டில்உடனடியாகஅமுல்படுத்த மாநில அரசினை வற்புறுத்த ஆவணம் செய்யும்படி நமது மாநில கூட்டமைப்பை கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்க செயற்குழு கூட்டம் 24–02–2024 அன்று சிவாலி ஹாலில் சங்கத் தலைவர் திரு. R. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் அனைவரும் இணைந்து தமிழ்த்தாய் வாழ்த்து பாட இனிதே துவங்கியது.

சங்க உறுப்பினர்கள் திருவண்ணாமலை கிரிவலம் (பௌர்ணமி அல்லாத நாளில்) மார்ச் 20 முதல் ஏப்ரல் 7 நாட்களுக்குள் செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னை கார்காத்தார் சங்கத்தில் (சௌராஷ்டிரா நகர், நுங்கம்பாக்கம்) மார்ச் மாதத்தில் விளக்கு பூஜை நடத்த திட்டமிட்டுள்ளார்கள். நமது சங்கத்தில் விருப்பமுள்ளவர்கள் கலந்து கொள்ள கேட்டுக்கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

சங்க உறுப்பினர்கள் ஒரு நாள் இன்ப சுற்றுலா ஏப்ரல் மாதத்தில் செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது.

நமது சங்கத் தலைவர் திரு. R. கார்த்திகேயன் அவர்களின் தாயார் பண்ணப்பட்டு அழகம்மை ஆச்சி, நமது சங்க உறுப்பினர் கி. ஆடூர் திரு. செந்தில் குமார் அவர்களின் தாயார் நீலாம்பாள் ஆச்சி ஆகியோரின் மறைவிற்கு மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- G. இராஜகோபாலன், செயலாளர்.

**புதுச்சேரி :**

10–12–2023 அன்று சங்க கூட்டம், அரும்பார்த்தபுரம் V. மணவெளி, பாரதிதாசன் நகர், No. 9 முதல் மெயின்ரோடு, திரு. கோ. ஞானசேகரன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திரு. கோ. ஞானசேகரன் அவர்கள் தலைமை ஏற்று வரவேற்று பேசினார்.

லாஸ்பேட்டையில் வசித்து வந்த வெங்கடாசலம் பிள்ளை அவர்கள் குமாரர் திரு. V. முத்துக்குமரன் அவர்கள் 21–11–2023 அன்று இயற்கை எய்தினார். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

புதிதாக வந்திருந்த சொந்தங்கள் அறிமுகம் நடைபெற்றது. திரு. K. திருநீலகண்டன் அவர்கள் புதுச்சேரி கார்காத்தார் சங்கம் சிறப்பாக செயல்பட வாழ்த்தி பேசி ரூ. 1001/– முதல் தவணை நன்கொடையாக தந்தது சிறப்பாக இருந்தது.

டிசம்பர் மாதம் நடத்த இருந்த விளக்கு பூஜை மற்றும் ஒரு நாள் ஆன்மீக சுற்றுலா பயணம் ஐயப்பன் சீசன் காரணமாக ஜனவரி மாதத்திற்கு மாற்றி வைக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் அந்த பகுதியை சேர்ந்த பெண்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு சிறப்பு சேர்த்தார்கள்.

கூட்டத்தில், திரு. P.S. தமிழ்செல்வன், திருமதி. C. ஜெயலட்சுமி, திருமதி. M. சாரதா, திருமதி. G. நிர்மலா, திருமதி. பானுமதி, திரு. P. இரத்தினசபாபதி, திரு. T. விவேகானந்தன், திரு. N. சிதம்பரம், திரு. S. ராமலிங்கம் ஆகியோர் புதுச்சேரி கார்காத்தார் சங்கம் வளர்ச்சி, ஒற்றுமை குறித்து தங்கள் கருத்துக்களை தெரிவித்து வாழ்த்தி பேசினார்கள். திரு. K. திருநீலகண்டன் அவர்கள் சங்கத்தின் செயல்பாடுகளை வாழ்த்தியும், நன்றி தெரிவித்தும் பேசினார்கள்.

கூட்டத்திற்கு வந்திருந்த சொந்தங்களுக்கு அருமையான விருந்து கொடுத்து உபசரித்த திருமதி. நிர்மலா ஞானசேகரன் அவர்களுக்கு அனைவரும் வாழ்த்தும் நன்றியும் கூற கூட்டம் இனிதே முடிவடைந்தது.

07–01–2024 அன்று சங்க கூட்டம் செயலாளர் திரு. S. வெங்கடேசன் அவர்கள் இல்லத்தில் (புதுச்சேரி – 605010, ரெட்டியார்பாளையம், கம்பன் நகர், 7வது கிராஸ்) நடைபெற்றது.

சங்க செயலாளர் திரு. S. வெங்கடேசன் அவர்கள் தலைமை ஏற்று பேசும் போது 2024–ம் ஆண்டு முதல் சங்க உறுப்பினர்களிடம் ஆண்டு சந்தா ரூ. 500/– ஆயுள் சந்தா ரூ. 3000/– ஆக நிர்ணயம் செய்து கேட்டு பெறுவது என்றும் சங்கத்திற்கு நிதி ஆதாரத்தை பெருக்குவது என்றும் கேட்டுக் கொண்டார். அதற்கு கூட்டத்தில் கலந்து கொண்ட சொந்தங்கள் செயலாளரின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் திரு. P.S. தமிழ்செல்வன், திரு. S. சிவசண்முகம், திரு. G. பத்மநாபன் பிள்ளை ஆகியோர் நிதி ஆதாரத்தை பெருக்க வேண்டிய அவசியம் குறித்து பேசினார்கள். மேலும் திரு. G. பத்மநாபன் பிள்ளை அவர்கள் வருகிற 28–01–2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.05 மணிக்கு புதுச்சேரி – 605010 ரெட்டியார்பாளையம், சுதாகர் நகர், 4–வது குறுக்குத் தெரு, No.7-ல் அமைந்துள்ள அவர்கள் இல்லத்தில் திருவிளக்கு பூஜை நடத்துவதற்கு இசைவு தந்து பூஜையில் புதுச்சேரி கார்குல சொந்தங்களும், மகளீர் அணி நிர்வாகிகளும், உறுப்பினர்களுமு கலந்துகொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்கள்.

2024–ம் ஆண்டு மாதக்காலண்டர் பகுதிவாரியாக நம் சொந்தங்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று வழங்கிய திரு. P.S. தமிழ்செல்வன், திரு. S. சிவசண்முகம், திரு. G. பத்மநாபன், திரு. G. ஞானசேகரன், திரு. S. ராமலிங்கம், திரு. T. பாலகிருஷ்ணன், திரு. J. ராஜன்பாபு, திரு. கார்த்தி ஆகியோருக்கு சங்கம் நன்றியும், பாராட்டும் தெரிவித்துக்கொண்டது.

கூட்டத்திற்குநல்லமழையிலும்கலந்துகொண்ட சொந்தங்களுக்கு நாவுக்கு இதமாக சுவீட், காரம், காபி கொடுத்த திருமதி. S. வெங்கடேசன் அவர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

திரு. G. பத்மநாபன் பிள்ளை அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

J. ராஜன்பாபு, தலைவர்,
9600968628

**பின்னலூர் :**

17–1–2024 புதன்கிழமை “கோமதி அம்மாள் திருமண மண்டபத்தில் 9–ஆம் ஆண்டு உழவர் திருநாளாம் பொங்கல் விழா சிறப்புற நடைபெற்றது.

சங்கத் தலைவர் திரு. பி.ஆர். நடராசன் பிள்ளை தலைமையில், பொருளாளர் திரு. சோம.சுந்திரசேகரன் திரு. பால. பிரபாகரன் (துணைசெயலாளர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மூத்த உறுப்பினர் திருவே. சிவக்குமார் சங்கக் கொடியினை ஏற்ற, ஐம்பெண்கள் குத்துவிளக்கு ஏற்றிட, இறைவணக்கத்துடன் நிகழ்ச்சி துவங்கியது.

சிறுவர், சிறுமியர், மகளிர் விளையாட்டுப் போட்டிகளை திருமதி. நித்தியா, திருமதி. லலிதா ஆகியோர் முன்னின்று நடத்தினர்.

ஆண்களுக்கானப் போட்டிகளை திரு. இராம. நடராசன், திரு. ச. சுந்தர் முன்னெடுத்து நடத்தினர்.

நண்பகல் 1 மணி முதல் 2 மணி வரை இன்சுவை விருந்து பரிமாறப்பட்டது.

மதியம் 2 மணி அளவில் ஸ்ரீ ஸ்ரீ விஜயகுமார சுவாமிகள் "கடவுள் தூங்கவில்லை" எனும் பொருளில் ஆன்மீக சிறப்பு சொற்பொழிவாற்றினார்கள்.

மாலை 3½ மணி அளவில் சங்கப் பணிகள், தீர்மானங்கள் முன்மொழியப்பட்டது.

தொடர்ந்து நினைவஞ்சலியும், 10வது, +2 வகுப்பில் தேர்ச்சி பெற்ற மூன்று மாணவர்களுக்கு வெகுமதி பரிசும் வழங்கப்பட்டது.

வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு பரிசுப் பொருள்களும் வழங்கிடப்பட்டது.

விழா நிகழ்ச்சிகளை சங்க செயலாளர் திரு. மு. ஆனந்தநடேசன் வரவேற்றும், தொகுத்தும் நன்றி கூறியும் நாட்டுப்பண்ணுடன் முடித்து வைத்தார்கள்.

– மு. ஆனந்தநடேசன், செயலாளர்.
**9442214253**

## சீர்காழி

26–01–2024 அன்று காலை 9.00 மணி அளவில் 75–வது குடியரசு தினவிழா மற்றும் பொங்கல் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. பொங்கல் விழாவிற்கு கும்பகோணம் கார்காத்தார் சமூக நலச்சங்கம் கலந்துகொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டது. நமது வேண்டுகோளை ஏற்று கும்பகோணம் சங்கத்திலிருந்து தலைவர் திரு. T.M. வைத்தியநாதன் B.A.B.L. (முன்னாள் மாநில பொருளாளர்) செயலாளர் திரு. S. விஜயகுமார், பொருளாளர் திரு. A.S. பழனி மற்றும் உறுப்பினர்கள் திரு. சுகுமார், திரு. பாண்டியன், திரு. S. மோகன், திரு. குணசீலன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். முதல் நிகழ்வாக 75–வது குடியரசு தின தேசியக் கொடியை கும்பகோணம் சங்க தலைவர் திரு. T.M. வைத்தியநாதன் B.A.B.L. அவர்கள் பறக்கவிட்டார்கள். அடுத்த நிகழ்வாக மகளிர் அணியினர் தமிழ்த்தாய் வாழ்த்து பாடினார்கள். கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. அடுத்து காலை 10.15 மணி அளவில் பொங்கல் விழா பொங்கல் பானை வைத்து மகளிர் அணி சார்பாக (திருமதி. B. விஜயலட்சுமி, தலைவர், திருமதி. S. உமாதேவி, செயலாளர், திருமதி. M. லதா, பொருளாளர்) பொங்கல் விழா தொடங்கப்பட்டது. குழந்தைகளுக்கான உறியடி போட்டி, பலூன் உடைக்கும் போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு, பரிசுகள் வழங்கப்பட்டது. அடுத்து சிறப்பு விருந்தினர்கள் பொங்கல் விழா பற்றி பேசுவதற்கு அழைக்கப்பட்டார்கள். சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக சால்வை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்கள் பொங்கல் விழா நமது இனத்திற்கான விழா என்றும் அதனை சிறப்பாக நடத்திய சீர்காழி சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகளுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார்கள். பொருளாளர் திரு. அகோரம் பிள்ளை நன்றி கூற பொங்கல் விழா இனிதே நிறைவடைந்தது.

08–02–2024 அன்று கும்பகோணம் சங்க நிர்வாகிகள் எங்களை தொடர்பு கொண்டு 20–02–2024 அன்று கும்பகோணம் இராஜ – ராஜேந்திர பேட்டை ஸ்ரீ அருள்மிகு விஸ்வநாதர் ஆலயம் காவேரி செட்டிப் படித்துறை என்ற இடத்தில் உள்ளது. அந்த கோவில் ஆறு தெரு சைவர்களால் பராமரிக்கப்படுகிறது. மாசி மகம் 10 நாட்கள் கார்காத்தார் சங்க உறுப்பினர்களால் அபிஷேகம் மற்றும் அலங்காரம் செய்து தீபாராதனை நடைபெறும் என்றும் அதில் 20–02–2024 அன்று கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்கள். மேலும் அன்றைய தினம் சூரியனார் கோவில் ஆதீனம் கலந்து கொண்டு ஆசி வழங்க உள்ளார்கள் என்று கூறினார்கள். அவர்களின் அழைப்பை ஏற்று சீர்காழி சங்கத்திலிருந்து ஒரு வேனில் தலைவர் திரு. K. சுகுந்தவனநாதன், திரு. N. சோமசேகர், ஆடிட்டர், திரு. S. பாலசுப்ரமணியன், திரு. P. பிரகாஷ், திரு. சொக்கலிங்கம், திரு. N. சிதம்பரநாதன் மண்டல செயலாளர், திருமதி. B. விஜயலட்சுமி, மகளிர் அணி தலைவர், திருமதி. A. கோமதி, திருமதி. தமிழரசி, திருமதி. C. மல்லிகா, திருமதி. சாந்தி, திருமதி. அனுபமா, திருமதி. G. ராஜேஸ்வரி, திருமதி. அம்பிகா (14 பேர் கலந்து கொண்டோம்) காலை சிற்றுண்டி மற்றும் மதிய விருந்து சங்க நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். காலை 9.00 மணிக்கு கும்பகோணம் சென்றோம். அங்கு எங்கள் அனைவரையும் சிறப்பாக வரவேற்று சால்வை அணிவித்து சங்க நிர்வாகிகள் வரவேற்றார்கள்.

காலை சிற்றுண்டி முடித்து கோவிலுக்கு சென்றோம். காலை 10.00 மணி அளவில் சூரியனார் கோவில் ஆதீனம் அவர்கள் கோவிலுக்கு வந்தார்கள். அதன் பிறகு அருள்மிகு விஸ்வநாதர் மற்றும் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. வெகு சிறப்பாக அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. அதன் பிறகு ஆதீனம் அவர்கள் தலைவர் திரு. T.M. வைத்தியநாதன் பிள்ளை வழங்கிய ருத்ராட்சம் மற்றும் நாணயத்தை ஆசி வழங்கி அவர் பொற்கரங்களால் அனைவருக்கும் வழங்கினார்கள். சுமார் மதியம் ஒரு மணி அளவில் மதிய உணவு அனைவருக்கும் கும்பகோணம் சங்கத்தின் சார்பாக வழங்கப்பட்டது. சுமார் 3.00 மணி அளவில் அங்கிருந்து புறப்பட்டு வரும் வழியில் சமீபத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்ற திருபுவனம் சிவன் கோவில் மற்றும் குத்தாலம் சிவன் கோவில் ஆகிய கோவில்களுக்கு சென்று சாமி தரிசனம் செய்து இரவு 8.45 மணி அளவில் சீர்காழி வந்து சேர்ந்தோம். எங்களை அழைத்து கோவில்களில் ஆதினத்தின் மூலம் எங்களை ஆசிர்வதித்து சிறப்பு செய்த கும்பகோணம் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் சீர்காழி சங்கத்தின் சார்பாக நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கிறோம்.

## இளந்தோப்பு :

சங்க கூட்டம் 25-01-2024 தைப்பூசத் திருநாளில் மண்டல செயலாளர் S. சீனுவாசன் அவர்கள் தலைமையில் சிவன்கோவில் வளாகத்தில் நடைபெற்றது. மண்டல செயலாளர் அவர்கள் தம் உரையில் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். கூட்டத்திற்கு பெரும் திரளாக அனைவரும் வந்து கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அறைகூவல் விடுத்தார்கள். R. ஞானசேகரன் தமது உரையில் இந்த மாதம் முதல் ஆண்டு சந்தா ரூ. 200/- நபருக்கு வசூல் செய்து தனது கணக்கை தாக்கல் செய்தார்.

S.S. ராஜேந்திரன் அவர்கள் தமது சிறப்புரையில் மார்கழி மாத திருப்பள்ளி எழுச்சிக்காக அரும்பாடுபடட இளம் குருக்கள் ஹரிகரனுக்கு பாராட்டுதலையும் தனது நன்றி கலந்த வணக்கத்தையும் கூறினார்கள்.

மாதம் முப்பது நாட்களில் நமது குலத்தார் சிவன்கோவில் மற்றும் விநாயகர் கோவில் வந்து வழிபாடு நடத்தியமைக்கு அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள். செயலாளர் V. ராஜசேகரன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

– செயலாளர். 9444610907

## மயிலாடுதுறை மகளிரணி :

சங்க கட்டிடத்தில் 75-வது குடியரசு தின விழா (26-1-24) அன்று மிகச் சீரும் சிறப்புமாக காலை 8.15 மணி அளவில் துவங்கியது. மகளிரணி தலைவி திருமதி. பில்டெக் அருள்மொழி தலைமை ஏற்றார். செயலாளர் காயத்ரி மோகன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றினார். பின்பு அனைவராலும் கொடிப்பாடல் பாடப்பட்டு கொடிக்கு வீர வணக்கம் செலுத்தப்பட்டது. திருமதி. ராஜேஸ்வரி சிவக்குமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர். நகர சங்க மேனாள் செயலாளர் திரு. P. சுவாமிநாதன் சிறப்புரையாற்றினார். அதை தொடர்ந்து திரு. A. குமார், திரு. சொக்கலிங்கம், திருமதி. தமிழ்ச்செல்வி சுவாமிநாதன், வரவேற்புரை வழங்கினார்கள். இணைச்செயலர் திருமதி. வளர்மதி, விஜயலஷ்மி தேசியகீதம் பாடப்பட்டது. பொருளர் திருமதி. சசிகலா திருநாவுக்கரசு மற்றும் திருமதிகள். அகிலாண்டேஸ்வரி, உஷா, ராணி, சத்யா, விஜயா மற்றும் கார்குழலி கலந்து கொண்டனர் மேலும் விழாவிற்கு முழு ஒத்துழைப்பு நல்கிய திரு. சபாநாயகம், P. சர்வேஸ்வரன், B.S. சுவாமிநாதன் மற்றும் மேனாள், இந்நாள் பொறுப்பாளர்கள் மற்றும் இளைஞரணி பொறுப்பாளர்களுக்கும் மற்றும் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கி வருகை புரிந்த வாழ்த்து கூறிய என் அனைத்து கார்குல சொந்தங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

செயலாளர்,

S. காயத்ரி மோகன்.

## மயிலாடுதுறை

04-02-2024 அன்று செயற்குழுக்கூட்டம் சங்கக் கட்டிடத்தில் தலைவர் சு. அன்பழகன் தலைமையில் தொடங்கியது.

மகளிரணியினர் இறைவணக்கம் பாடினர். சென்ற மாதக் கூட்ட நிகழ்வின் அறிக்கையை செயலர் திரு. A. இராசேந்திரன் வழங்கினார். பொருளர் திரு. R. சந்திரசேகரன் வரவு செலவு அறிக்கையை அளித்தார்.

மாநில செயற்குழுக் கூட்டம் நடத்தவும், மகளிரணியினர் மகளிர் தின விழா நடத்தவும் சங்கக் கட்டிடத்தை பயன்படுத்திக்கொள்ள செயற்குழு ஒப்புதல் வழங்கியது.

நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– சு. அன்பழகன்,

தலைவர்.

## செம்பொன்னார்கோவில்

சங்க கூட்டம் 06–02–2024 அன்று குமரன் கோயில் வடக்கு வீதியில் வசித்துவரும் திரு. ந. ராமலிங்கம் பிள்ளை திருமதி. கஸ்தூரி நல்லியனரின் இல்லத்தில் நடைபெற்றது. சங்கத்தலைவர் திரு. கி. ராமநாதன் அவர்கள் தலைமையில் இறைவணக்கம் செல்வி. சஞ்சனா பாலா பாடிடவும், வரவேற்புரை திரு. ந. ராமலிங்கம் பிள்ளை ஆற்றிடவும் சென்ற மாத கூட்ட அறிக்கையை திரு. கோ. வடிவேலு பிள்ளை வாசிக்கவும், வரவு – செலவு அறிக்கையை சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் பிள்ளை வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது.

கூட்ட தலைவர் தமது உரையில் கார்குல கர்ணன் கொடை வள்ளல் திரு. S. வெங்கடேசன் பிள்ளை அவர்கள் தனது சொந்த ஊரான பூவிழுந்தநல்லூரில் ஆண்டுதோறும் பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடுவது பற்றியும் அந்த விழாவில் சங்க உறுப்பினர்கள் S. மதியழகன், ச. சங்கர், ச. ஆனந்தன், க. ராஜா ஆகிய நால்வரும் கலந்து கொண்டு கொடைவள்ளல் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தும் அவரிடம் ஆசிர்வாதம் பெற்று வந்தது பற்றியும் பேசினார்கள். மேலும் சங்க மகளிரணி மூத்த உறுப்பினர் க. ரெத்தினாவதி அவர்களது பேரனும் க. சந்தோஷ் – துர்க்காபிரியா மகனுமான ச. ரெத்தினகுமார் அவன் கல்வி பயிலும் பள்ளியான நபாக் பள்ளியில் IV–ஆம் வகுப்பிற்கான போட்டிகளில் கலந்து கொண்டு ‘Over all Junior Championship பரிசுகளும், பள்ளிக்கு வருகை 100% வந்தமைக்கும் சான்றிதழ்களும் கோப்பைகளும் பெற்றமைக்கு சங்க கூட்டத்தில் தெரிவித்தமைக்கு அவரை பாராட்டியும், வாழ்த்துகளும் தெரிவித்து சங்க மூத்த உறுப்பினர்கள் பேசினார்கள். கணபதிநடனம் பிள்ளை அவர்கள் தமது உரையில் மாதா மாதம் ஒவ்வொரு இல்லத்தார் வீட்டில் கூட்டம் நடத்துவது பற்றியும் கூட்டம் நடத்திய இல்லத்தார் திரு. ந. ராமலிங்கம் பிள்ளை குடும்பத்தார் பற்றியும் அவர்களது குடும்பம் இன்று வரை விவசாய தொழிலை செவ்வனே செய்வது பற்றியும், அவர்களது மகன், மருமகன், மகள், மருமகள் நல்ல பணியில் உள்ளது பற்றியும், அவரது பேரன், பேத்திகள் நல்ல கல்வி பயில்வது பற்றியும் தெளிவாக பேசினார்கள். கோ. வடிவேலு பிள்ளை தமது உரையில் வரும் 03–03–2024 அன்று நடைபெறவுள்ள ஜெயங்கொண்டம் கார்காத்தார் சங்க பொன்விழா, மங்கல சந்திப்பு கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவில் செம்பொன் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுவது பற்றியும், செம்பொன் விவேகானந்தர் வீதியில் வசிக்கும் சங்க மூத்த உறுப்பினர் திரு. ச. சீத்தாராம பிள்ளை அவர்களது மகன் திரு. சீ. ஜவஹர் அவர்களுக்கு (பொறியாளர்) கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் 75–வது குடியரசு தின விழாவில் (26–01–2024) அரசு போக்குவரத்து கழகத்தில் சிறப்பான முறையில் சட்டம் மற்றும் நியமன (நிர்வாக பணிகளை செய்தமைக்காக சிறந்த பொறியாளர் என்று விருது பெற்றமைக்கு சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்தும் பேசினார்கள். மேலும் திரு. துர்கா பிரியா (தனியார் பள்ளி நபாக்மெட்ரிக் பள்ளியில்) அவர்கள் 100% பள்ளிக்கு வருகை புரிந்தமைக்கும், பள்ளி அளவில் சிறந்த ஆசிரியையாக தேர்வு செய்தமைக்கும் அவரை வாழ்த்தி சங்க தலைவர் செயலாளர், பொருளாளர், மு. மண்டலசெயலாளர், கணபதி நடனம் பிள்ளை ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். மேலும் சங்க உறுப்பினர்களின் பிறந்த நாள் – திருமண நாள் பட்டியல் தயாரித்து சங்க சார்பாக அவர்களுக்கு வாழ்த்துகள் தெரிவிக்க வேண்டும் என்று சங்க பொறுப்பாளர்களை கணபதி நடனம் பிள்ளை கேட்டுக்கொண்டார்கள். கூட்டத்தில் கலந்து கொண்டோர்களுக்கான பரிசு ஆண்களுக்கு செல்வன் ச. ரெத்தினகுமார், பெண்களுக்கான பரிசு : திருமதி. சரோஜாவாசன் அவர்களுக்கும் வழங்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பாக மாலை தேநீரும் இரவு சிற்றுண்டியும் வழங்கப்பட்டது. திரு. M.C. செல்வராஜ் பிள்ளை நன்றி கூறிட இரவு 9.00 மணியளவில் கூட்டம் நிறைவு பெற்றது.

- S. நெடுஞ்செழியன்,

செயலாளர். செல் : 9443051641

## பரசலூர் :

04–2–2024 அன்று இராஜ இராஜன் தெரு (பரசலூர்) T. இராமலிங்கம் – மல்லிகா இல்லத்தில் தலைவர் க. கோவிந்தராஜன் தலைமையில் திருமதி. மல்லிகா இறைவணக்கம் பாட திரு. T. இராமலிங்கம் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்த கூட்டம் துவங்கியது.

செயலர் வீ. கண்ணன் பிள்ளை சென்ற மாத அறிக்கையையும், பொருளர் S.M. விஜய் பிள்ளை மாதாந்திர நிதி அறிக்கையும் தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை மு.அ. நிதி அறிக்கையும், ஆண்டு விழா வரவு – செலவு அறிக்கையையும் வாசிக்க வரவு – செலவு சம்மந்தமான பதிவேடுகள் அனைத்தும் சுற்றுக்கு விடப்பட்டு கூட்டத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்கத்தின் சார்பில் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு நிதி திரட்ட திரு. S. சிவராமன் தலைமையில் ஒரு குழு அமைக்கவும்

2025–ம் ஆண்டிலிருந்து மாதாந்திர காலண்டரும் (உறுப்பினர்களின் அலைபேசி எண் உட்பட) பஞ்சாங்கமும் உறுப்பினர்களுக்கு வழங்குவது என்றும் ஆண்டு விழா செலவினங்களை உறுப்பினர்களே தானாக விரும்பி ஏற்றுக்கொள்வது எனவும்

2023 – 2024 கல்வி ஆண்டில் சென்னை ராதா இன்ஜினியரிங் (CREW) கார்குல கொடை வள்ளல் திரு. வெங்கடேசம் பிள்ளை அவர்களுக்கு உதவித்தொகை பெற்ற மாணவ மாணவிகளின் சார்பில் நன்றி தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 19–2–2024 சங்க உறுப்பினர் திரு. A. இரவிச்சந்திரன் R. சாந்தி இவர்களின் மகன் R. பாலாஜிக்கும் நெய்வேலி S. உமாசங்கர் – திருமதி. U. ராஜேஸ்வரி மகள் U. விஜயலெட்சுமியின் திருமணம் நெய்வேலியில் நடந்ததையொட்டி சங்கத்தின் சார்பில் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு வாழ்த்துகளையும், பரிசுப் பொருளும் வழங்கினர்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது.

கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு இராமலிங்கம் – மல்லிகாவிற்கு முறையே சண்முகம் பிள்ளை, உஷா நடராஜன் சால்வை அணிவித்தனர்.

பரிசு குலுக்கலில் ஆண்களுக்கான பரிசு R. பிரவின், பெண்களுக்கான பரிசு கோ. சித்ராவிற்கும் முறையே T. இராமலிங்கம் பிள்ளை – மல்லிகா வழங்கினார்கள்.

பேராசிரியர் V. சிவக்குமார் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

V. கண்ணன்,
செயலர்.
Cell : 9894960438

## மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு : சங்க கூட்டம் 15–02–24 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது. தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் சங்க உறுப்பினர்களை வரவேற்று பேசினார்.

இச் சங்க நம் கார்குல கல்லூரி மாணவர்கள் நான்கு பேருக்கு ரூ. 92000/– வரை கல்வி உதவித்தொகையாக 2023 – 24–ஆம் கல்வியாண்டிற்கு பெருந்தன்மையுடன் வழங்கிய “CREW TRUST” சென்னைக்கு பாராட்டுதலையும், சங்கம் சார்பில் நன்றியையும் பதிவு செய்தார். பின்பு சங்க உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- B. இலட்சுமணன், தலைவர்.
9443783743

## பூம்புகார் :

கடந்த இரு கூட்டங்களில் பங்கேற்ற உறுப்பினர்களிடையே நடைபெற்ற கலந்துரையாடல்களின் முடிவில் ஏற்பட்ட ஏகோபித்த விருப்பத்தின் பேரில் 07–01–24 ஞாயிறன்று புத்தாண்டில் ஆண்டு விழா கொண்டாடுவதென தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 07–01–24 அன்று V.M.S. திருமண மண்டபத்தில் காலை 9 மணியளவில் ஒருங்கிணைப்பாளரும், மாநில மண்டல இளைஞரணி பொதுக்குழு உறுப்பினருமாகிய திரு. S. பிரபாகரனின் வழிகாட்டுதலின்படி மகளிர் கோலப்போட்டி, ஆடவர்க்கான அதிருஷ்ட மூ லைப்போட்டி குழந்தைகளுக்கான அறிவுசார் போட்டிகளான பேச்சுப்போட்டி, பாட்டுப்போட்டி, உடல்திறன் போட்டிகளான சீசாவில் நீர் நிரப்புதல், உருளைக்கிழங்கு சேகரித்தல், ரொட்டி கவ்வுதல் போன்ற போட்டிகள் சிறப்பாக நடத்தப்பட்டன.

அழையா விருந்தாளியாக மழை வந்த போதும் அசராமல் 60 பேர் பங்கேற்ற விழா காலை 10 மணியளவில் குத்து விளக்கேற்றப்பட்டு இறைவணக்கத்துடன் தொடங்கப் பெற்றது. தலைவர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். செயலர் ஆண்டறிக்கை படித்தார் மதிப்புறு தலைவர் திரு. K.P.M. சங்கர் தலைமையுரை நிகழ்த்தினார். திரு. S. அகோரம் முன்னிலை வகித்து உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து மணிநகர் கார்காத்தார் சங்கத் தலைவர் திரு. ம. சிங்காரவேலனும், மேலப்பெரும்பள்ளம் கார்காத்தார் சங்கத் தலைவர் திரு. பா. லெட்சுமணனும் வாழ்த்துரை வழங்கினர். நல்லாசிரியர் திருமதி. சாந்தி அகோரம் கார்குலப் பெண்டிரின் பெருமை, முன்னேற்றம், முயற்சி பற்றி சிறப்புரையாற்றினார். விழா நிகழ்வுகளைச் செய்ற்குழு உறுப்பினர் திரு. பொன். அகோரம் தொகுத்து வழங்கினார். காலை 11 மணிக்குத் தேனீரும், பிஸ்கட்டும் அனைவருக்கும் அளிக்கப்பட்டது.

விழா நிகழ்ச்சிகளுக்குப் பிறகு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிக்கப்பட்டது. இறுதியில் உறுப்பினர் திரு. பாண்டியனின் நன்றியுரைக்குப் பின் விழா இனிதே நிறைவு பெற்றது. அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.04–02–24 ஞாயிறன்று சங்கக் கூட்டம் செயலரின் வீட்டில் மாலை 7 மணியளவில் இறைவணக்கத்துடன் தொடங்கியது.

தலைவர் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். ஆண்டு விழா சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து உறுப்பினர்களுக்குப் பாராட்டும், நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

கல்வி உதவித்தொகை பெற்றுத் தருவது பற்றி கலந்துரையாடப் பெற்றது. விண்ணப்பங்கள் கொடுத்தால் பரிந்துரைத்து அனுப்பப்படும் என்று அறிவுறுத்தப்பட்டது. விழாவன்று கொடுக்க விட்டுப் போன பரிசுகள் உரியவர்க்கு வழங்கப்பட்டன. வருகை தந்தவர் அனைவருக்கும் உறுப்பினர் திரு. விஜய் அவர்கள் பிஸ்கட்டும், தேனீரும் வழங்கினார். அவருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. பொருளரின் நன்றியுரைக்குப் பின் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

- M. பரணீதரன்,

செயலர்.

9443574217

## 80. இராதாநல்லூர்

பிப்ரவரி 2024 மாத கூட்டம் 11–02–2024 அன்று தலைவர் திரு. முத்துக்குமரசாமி இல்லத்தில் தலைவர் தலைமையேற்க ஆலோசகர் RMA செந்தில் வரவேற்க செயலரின் இறைவணக்கத்துடன் துவங்கியது.

இம் மாத திருமண நாள் காணும் இரா. கார்த்திகேயன் – திவ்யா, மு. ரமேஷ் – சிவகாமசுந்தரி பிறந்த நாள் காணும் நா. நித்திஷ்சாய் ஆகியோருக்கு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது. மேலும் சங்க செயலர் அ. இராதாமுத்தையா 17–02–2024 மார்ச் இணைசெயலர் சந்தோஷ்குமார் மகள் ச. மகிழினி 19–02–2024 முன்னதாகவே வாழ்த்துக்களை சங்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.06–02–2024 செவ்வாய்கிழமை, ஸ்ரீமகாமாரியம்மன் மூல நட்சத்திரம் முன்னிட்டு ஆறாம் ஆண்டு விழாவும், காத்தவராயன், ஆரியமாலாவிற்கு திருக்கல்யாண வைபோகம் இராதாநல்லூர் – இலையமுதுகூடம் கிராம கார்குல சொந்தங்களால் சிறப்பாக ஏற்பாடுகள் செய்தமைக்கு சங்கம் சார்ந்து நன்றி தெரிவிக்கப்பட்டது.கார்காத்தார் சங்கத்திற்கு செயலாளர், பொருளாளர், சங்க விவரம் என ரப்பர் முத்திரை செய்து கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்க உறுப்பினர் சு. சண்முகம் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– அ. இராஜாமுத்தையா.

## விசலூர் :

சங்க கூட்டம் அகத்தீசுவரர் சிவ ஆலய வளாகத்தில் தலைவர் பொன். சொக்கலிங்கம் பிள்ளை தலைமையேற்றிட செயலர். L. ராமசெல்வம் வழி நடத்திட செயலர் அறிக்கை, பொருளாதார வரவு – செலவு அறிக்கை சிவ. கந்தசாமி பிள்ளை எடுத்து கூற சங்க கூட்டம் இறைவணக்கத்துடன் இனிதே துவங்கியது.

ஜனவரி மாதக் கூட்டத்தில் ஆருத்ரா புறப்பாடு வரவு செலவும் இந்த மாதக் கூட்டத்தில் எதிர் வரும் மார்ச்–8 மஹா சிவராத்திரி எப்படி செய்வது என்றும், ஜெயங்கொண்டம் ஆண்டு விழா மங்கல சந்திப்பு ஒப்புரவு எழுச்சி விழாவில் கலந்து கொள்வது – 2023 –24 மாநில சந்தா செலுத்தியது விவரம், மண்டல செயலர் கலந்து கொண்ட செயற்குழு கூட்டத்தில் குடும்ப உறுப்பினர்கள் ஆண்டுக்கு 12 ரூபாய் வீதம் – மாநில சங்கத்துக்கு செலுத்துவது விவரம் மற்ற பொருளாதார வரவு – செலவு ஆகிய கருத்துகள் கலந்துரையாற்றி ஏற்று கொள்ளப்பட்டன. மகளிர் அணி இளைஞர் அணி சேர்த்து கூட்டம் நடத்தவும் உருவாக்கவும் முடிவு எட்டபட்டு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகள் நவில சுபம் ஆனது.

L. ராமசெல்வம், செயலர்,

9750806991

## நெடுங்காடு :

கதிராமங்கலம் திரு. ஜெயக்குமார் பிள்ளை இல்லத்தில் திரு. K.S. கணபதி சுப்பிரமணியன் பிள்ளை இறைவணக்கத்துடன் கூட்டம் தொடங்கியது. நமது சங்க முன்னாள் தலைவர் திரு. M. சண்முகம் பிள்ளை மனைவியும் முன்னாள் தலைவர் திரு. S. இராஜமாணிக்கம் பிள்ளை தாயாருமாகிய திருமதி. “S. சரோஜினி அம்மாள்” இயற்கை எய்தியமைக்கு 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

Crew அறக்கட்டளைக்கு விண்ணப்பித்த 26 உறுப்பினர்களுக்கும் கல்வி உதவிதொகை வழங்கிய

Crew அறக்கட்டளைக்கு நமது சங்கம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

தருமை ஆதீனம் அவர்கள் மும்பை சென்றதால் இடம் சம்பந்தமாக அவர்களை சந்திக்க இயலாமல் போனது. சந்திக்கும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

பரிசு : திரு. S. வைத்தியநாதன் பிள்ளை III

திரு. விஸ்வநாதன் பிள்ளை II

திரு. C. பன்னீர்செல்வம் பிள்ளை I

ஆகியோர் பரிசு பெற்றனர்.

மண்டல செயலர் திரு. முத்துகுமரசாமி நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. இல்லத்தலைவர் தலைவிக்கு சிறப்பு செய்யப்பட்டது.

G. செல்வகுமார் பிள்ளை,
நெடுங்காடு.

## கும்பகோணம் :

சங்க தலைவர், திரு. T.M. வைத்தியநாதன், செயலாளர் திரு. S. விஜயகுமார், பொருளாளர் திரு. A.S. பழனி, துணை தலைவர் திரு. M. சந்திரமோகன், துணை செயலாளர் திரு. M.R.K. பாண்டியன், பசிப்போர் புசிக்க குழு தலைவர் திரு. S. குணசீலன், ஆகியோரை உள்ளடக்கிய குழுவினர் சீர்காழி சங்கத்தினர் அழைப்பை ஏற்று குடியரசு தினவிழா மற்றும் பொங்கல் விழா (28–01–24) நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

அந்த நிகழ்வில் குடந்தை சங்க தலைவர் திரு. T.M. வைத்தியநாதன் அவர்கள் தேசிய கொடி ஏற்றி விழாவை துவக்கி வைத்தார்கள். சீர்காழி சங்க கட்டிடத்தில் கார்குல மகளிர் அணியினர் பொங்கல் பானை வைத்து பொங்கல் பொங்கி படைத்தனர். அதனை தொடர்ந்து சீர்காழி சங்க தலைவர் திரு. மு. சுகுந்தவனநாதன் அவர்கள் தலைமையில் நமது சங்க தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

காலை உணவும், மதிய உணவும் வழங்கியமைக்கு நன்றி தெரிவித்து, குடந்தை சங்கத்தின் சார்பில் மாசி மக 6–ஆம் நாள் உற்சவத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க நமது சங்க செயலாளர் அழைப்பு விடுத்தார்கள். 20–02–24 செவ்வாய்க்கிழமை அன்று நமது சங்க அழைப்பை ஏற்று வருகை தந்த சீர்காழி சங்க சொந்தங்களை நமது சங்க நிர்வாகிகள் சால்வை அணிவித்து வரவேற்றனர். மேலும் சரியாக காலை 10 மணிக்கு ராஜராஜேந்திரன் பேட்டை காவேரி படித்துறையில் எழுந்தருளி அருள்பாலிக்கும் விசாலாக்ஷி சமேத காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கு வருகை புரிந்த சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மஹாலிங்க தேசிக பரமாச்சாரிய ஸ்வாமிகளை சீர்காழி சொந்தங்கள் மற்றும் குடந்தை சொந்தங்கள் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்றனர். மேலும் திரு. சாய் அச்சுதானந்த சுவாமிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அதனை தொடர்ந்து அபிஷேக ஆராதனையில் கலந்து கொண்டு ஆதினம் அருளாசி வழங்கினார்கள்.

பின்னர் நமது சங்க தலைவர் அன்பளிப்பாக பூஜிக்கப்பட்ட ருத்ராட்சம் சீர்காழி சொந்தங்களுக்கு ஆதினம் திருக்கரங்களால் வழங்கப்பட்டது. மதிய உணவுக்குப்பின் இரு சங்க சொந்தங்களும் கலந்துரையாடி மகிழ்ந்தனர். மதியம் 3 மணி அளவில் பிரியா விடை பெற்றார்கள். அனைத்து சொந்தங்களும் இது போன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய இரு சங்க நிர்வாகிகளை கேட்டு கொண்டார்கள். நிறைவாக நமது சங்க செயலாளர் வந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

- S. விஜயகுமார்,
செயலாளர்.

## வயலூர் மகளிர் அணி.

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் வயலூர் கிராமத்தில் T. இராதாகிருஷ்ணன் பிள்ளை வீட்டில் மாலை 3 மணிக்கு துவங்கப்பட்டது. கூட்டத்தில் சங்க செயலாளர் T. இராதாகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்று பேசினார். கூட்டத்தின் முக்கிய நிகழ்வாக மாநில தலைவர் திரு. K.K.R. சுரேஷ் அவர்களும் மாநில பொதுச்செயலாளர் திரு. பாலசுப்பிரமணியன் பிள்ளையும், மாநில பொருளாளர் திரு. இராமநாதன் பிள்ளை அவர்களும் மாநில அமைப்பு செயலாளர் திரு. கைலை சண்முகம் அவர்களும் மற்றும் நம் பகுதியை சார்ந்த மாநில துணைத்தலைவர் திரு. செந்துறை ரவி அவர்களும் நம் பகுதி மண்டல செயலாளர் திரு. செல்வகுமார் அவர்களும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நம் கார்குலத்தை பற்றி மாநில பொறுப்பாளர்கள் சிறப்பாக உரையாற்றினார்கள். மண்டல, மாநில துணைத்தலைவரும் சிறப்பு உரை ஆற்றி மகளிரணி துவக்க விழாவானது இனிதே துவங்கப்பட்டது.

கூட்டத்தில் மகளிர் அணி தலைவர், செயலாளர், பொருளாளர், துணைத்தலைவர், து. செயலாளர், து. பொருளாளர் ஆக 6 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1.தலைவர்: M. தனலெட்சுமி W/o முல்லைநாதன் பிள்ளை, 2. செயலலாளர் : S. கிருஷ்ணவேணி W/o சுப்பிரமணியன் பிள்ளை, 3. பொருளாளர் : T. வேம்பு W/o திருநாவுக்கரசு பிள்ளை, 4. து.தலைவர் : P. இராஜகுமாரி W/o பழனிவேல் பிள்ளை, 5. து.செயலாளர் : S. நித்யா W/o சண்முகம் பிள்ளை, 6. து. பொருளாளர் : V. தேவகுமாரி W/o வேல்முருகன் பிள்ளை ஆகிய 6 பேரும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். வயலூர் மகளிரணி துவக்க விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.

மகளிரணி சங்கத்தில் நம் அருகாமையில் உள்ள கீழப்பெரம்பலூர், வயலப்பாடி, வீரமநல்லூர், வ.கீரனூர், ரெட்டிக்குடிகாடு, அகரம்சிகூர், துங்கபுரம், பரவாய், சின்னவெண்மணி, காடூர் உள்ள மகளிர் உறுப்பினர்களாக சேரவும், மகளிர் ஒவ்வொருவரும் ஆண்டு சந்தாவாக ரூ. 100 செலுத்தவும், சுமார் 10 ஆண்டுகளாக செயல்படும் வயலூர் சங்க நிர்வாகிகளுக்கு பாராட்டு தெரிவித்தும் இந்த சங்கத்தின் மூலம் 10 ஆண்டுகளாக சுமார் 50 மாணவ, மாணவிகளுக்கும் சென்னை ராதா இன்ஜினியரிங் அறக்கட்டளை மூலம் உதவி பெற்று இன்று மருத்துவர்களாக, பொறியாளர்களாக, ஆசிரியராக, வேளாண்மை துறை, பயின்று நல்ல வேலைக்கு சென்றமைக்கு பாராட்டு தெரிவித்தும்,

சங்கம் செயல்படுவது போல மகளிரணியும் சேர்ந்து சங்கத்தை வலுப்படுத்துவோம் எனவும் மகளிரணி சங்கத்துக்கு சிபாரிசு செய்து திறம்பட செயல்பட அனைத்து வகையிலும் வயலூர் கிளைச்சங்கம் செயல்படும் எனவும் இக்கூட்ட நிகழ்வில் மகளிர் ஒப்புரவு இதழுக்கு 19 பேர் ஆண்டு சந்தாவாகவும் 2 பேர் ஆயுள் சந்தாவாக செலுத்தியவருக்கும் பாராட்டு தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தின் இறுதி நிகழ்வாக நம் சங்கத்தின் பொருளாளர் திரு. திருநாவுக்கரசு பிள்ளை கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து பொறுப்பாளர்களையும், கிளைச்சங்க உறுப்பினர்களையும், மகளிர் அணி பொறுப்பாளர் அனைவரையும் பாராட்டி நன்றி உரை கூற கூட்ட நிகழ்வு இனிதே முடிவுற்றது.

- T. வேம்பு, பொருளாளர்.

**மதுரை :**

மாவட்ட சங்கத்தின் செயற்குழு கூட்டம் 11–02–24 அன்று நடைபெற்றது. சங்க துணைச்செயலாளர் திரு. N. இராமலிங்கம் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடினார். தலைவர் முனைவர். K. சிவசுப்பிரமணியம் தமது உரையில் 21–07–2024 அன்று நடைபெறவுள்ள சங்கத்தின் பவளவிழாவிற்கான ஏற்பாடுகள் பற்றி விரிவாகப் பேசினார். சங்க சுற்றறிக்கை 1000 பிரதிகள் எடுக்க ஒப்புதல் பெறப்பட்டது.

பவள விழாவிற்கு நமது சங்க நிர்வாகிகள் மற்றும் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தாராளமாக நன்கொடை அளித்தும், பவளவிழா மலருக்கு விளம்பரங்கள் பெற்றுத்தரும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது. திரு. N. இராமலிங்கம் அவர்களை ஒருங்கிணைப்பாளராகவும், திரு. கண்ணப்பன், திரு. குமார் அவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட விளம்பரக் கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

மறைந்த நம் சங்க முன்னோடிகள் தெய்வத்திரு. 1. அழகப்ப பிள்ளை, 2. இராமலிங்கம் பிள்ளை, 3. மாரியப்ப பிள்ளை, 4. பாண்டி, 5. தாயப்ப பிள்ளை அவர்களின் திருஉருவப் படங்கள் பெற்றுத்தருமாறு சங்க உறுப்பினர்களிடம் கேட்கப்பட்டது.

பவள விழா மலர் ஏற்பாடு செய்ய நம் மதிப்புறு தலைவர் திரு. இரா. கணேசன் அவர்களிடமும் மகளிரணித்தலைவி திருமதி.ப.குமாரிலெட்சுமியிடமும் வேண்டுகோள் வைக்கப்பட்டது.

பொருளாளர் திரு. S. முருகன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.


- C.M. சொக்கலிங்கம்,
செயலாளர்.

## வருந்துகிறோம்

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, ஆக்கூர் பாரதி வீதி – தெய்வத்திரு. ராமசாமி பிள்ளை (கர்ணம்) அவர்களின் மனைவியும் திரு. R. அமிர்தலிங்கம் மற்றும் ஆக்கூர் சங்கச் செயலர் திரு. R. கோவிந்தராசு இவர்களின் தாயாருமான திருமதி. R. தங்கம் அம்மையார் 29–01–2024 அன்று சிவபதம் அடைந்தார்கள். அன்னாரது குடும்பத்தினருக்கு ஆக்கூர், கார்காத்தார் சங்கம் ஆழ்ந்த இரங்கலை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது.

குத்தாலம் சங்க உறுப்பினர் திரு. R. விஜய் அவர்களின் தாயார் R. சகுந்தலா அவர்கள் 27.9.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
5-07-1931

மறைவு
25-02-2024

பூர்வீகம் : நாச்சியார்கோவில்

தெய்வத்திரு. P. நடராஜன் – தெய்வத்திருமதி. தெய்வானை

ஆகியோரின் மூத்த மகன், தற்சமயம் பெருங்களத்தூரில் வசித்து வந்த

## திரு. N. தில்லைநாயகம்

துணை இயக்குநர், தொழில் வணிகத் துறை /

முதுநிலை மேலாளர், TANSI, சென்னை பணிநிறைவு

அவர்கள் 25.02.2024 மாலை 5.00 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்கள்
என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
எங்களது துயரத்தை பகிர்ந்து கொண்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும்
எங்களது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறோம்.

மனைவி

**சாவித்திரி தில்லைநாயகம்**

மகள்கள்

**ரமாதேவி**
**ஹேமலதா**
**உமாராணி**
**கீதா**


மருமகன்கள்

தெய்வத்திரு. **A. விஸ்வநாதன்**
**S. சீனிவாசன்**
**A. பாலசுப்ரமணியன்**
**V.N. செந்தில்நாதன்**

*மற்றும்*

***பெயரன்கள், பெயர்த்திகள், கொள்ளுபெயரன்கள், கொள்ளுபெயர்த்திகள்***

# ஒன்பதாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
24.07.1942

மறைவு
28.02.2015

## ஆ. மருதவாணன் பிள்ளை, M.A., B.Ed.,

(ஆசிரியர் பணிநிறைவு, ப.ரா.கு.மே.நி.பள்ளி, காட்டுமன்னார்குடி)

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்குடி வட்டம், கொத்தவாசல் கிராமம், எரவுட S. ஆறுமுகம் பிள்ளை – சிந்தாமணி ஆச்சி ஆகியோர் மகனும், தெய்வத்திருமதி. கு. கஸ்தூரி, B.Lit., B.Ed., (ஆசிரியை பணிநிறைவு) அவர்களின் அன்பு கணவரும், எங்களின் அன்புத் தந்தையுமாகிய ஆ. மருதவாணன் பிள்ளை அவர்களின் நினைவோடு வாழும்.

**மருமகன்கள்**

**சு. ராதாகிருஷ்ணன்,** ஆசிரியர்
**ம. தாமரைச்செல்வி ராதாகிருஷ்ணன்,**
ஆசிரியை, V. குமாரமங்கலம்

**ப. மதி,** ஆசிரியர்
**ம. விஜயராணி மதி,** பிரிவு அதிகாரி,
தலைமை செயலகம், சென்னை–19

**வை. சங்கர்,**
துறை கண்காணிப்பாளர், அ.ப.கழகம்
**ம. கலைவாணி சங்கர்,**
தலைமை ஆசிரியை, காட்டுமன்னார்கோயில்

**மகன்கள்**

**ம. ஞானசபாபதி,** ஆசிரியர்
**ச. ஞானஜோதி ஞானசபாபதி,**
தலைமை ஆசிரியை

**ம. விஜயகுமார்,** த.நா.காவல்துறை
**ந. வள்ளி விஜயகுமார்,** ஆசிரியை

**ம. செந்தில்குமார்,** அ.ப.கழகம்
**கி. அபிராமவல்லி செந்தில்குமார்,**
ஆசிரியை, கொத்தவாசல்

மற்றும் **பேரக்குழந்தைகள்**

தொடர்புக்கு : 94427 80675, 94422 78510, 99769 97251

# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்ந்த நாள்
16.1.1950

உதிர்ந்த நாள்
24.3.2010

மயிலாடுதுறை கணபதி நகர் திரு. D. சுப்ரமணியன் அவர்களின் அருமைத் துணைவியாரும் மாநில கார்காத்த வேளாளர் சங்கத்தின் மகளிர் உறுப்பினரும், மயிலாடுதுறை நகர கார்காத்தார் மகளிரணித் தலைவியும் எங்களது பாசத்திற்குரியவருமான திருமதி. **ஜெயலட்சுமி** அவர்கள் 2010 ஆம் ஆண்டு மார்ச் 24ம் தேதியன்று மறைந்தார்கள்.

14 ஆண்டுகள் உருண்டோடிவிட்டது நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து. ஆயினும் எங்களது நெஞ்சங்களில் நீங்கள் நீக்கமற நிறைந்துள்ளீர்கள். என்றென்றும் நீடிக்கும் இந்நிலை.

மகள்
திருமதி. **P. ஆண்டாள்**
மருமகன்
B. **பாரிவேந்தன்,** B.E.
பேரன்
**P. கௌதமன்**

மகள்
திருமதி. **R. கிருத்திகா**
மருமகன்
திரு. **S. ராஜசேகர்** M.D.S.
பேத்தி
**R.K. தீபிகா**

# வருந்துகிறோம்...



தோற்றம்
01.01.1932

மறைவு
27.01.2024

முன்னாள் காரைவட்ட கார்காத்த வேளாளர் சங்கத் தலைவர் &
முன்னாள் தான்தோன்றீஸ்வரர் தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர்
**நெடுங்காடு, கார்காத்தார் தெரு, M. சண்முகம் பிள்ளை** அவர்களின் மனைவி

## S. சரோஜினி அம்மாள் அவர்கள்

**27-01-2024 சனிக்கிழமை** காலை 10.40 மணியளவில் இயற்கை எய்திவிட்டார்கள்
என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பிரிவால் வருந்தும்...**

**M. சண்முகம் பிள்ளை,** நெடுங்காடு.
**M.S. ராஜு** (ராசி டீசல் சர்வீஸ்) – **ரெத்தினமாலா,** திருச்சி.
**S. இராஜமாணிக்கம்** (ஸ்ரீ குமரன் பிரிண்டர்ஸ்) – **வசந்தி,** நெடுங்காடு.
**மகள்கள், மருமகன்கள்,**
**பேரன்கள், பேத்திகள், கொள்ளு பேரன்கள், கொள்ளு பேத்திகள்**

**குடும்பத்தினர்கள், உறவினர்கள், மற்றும் நண்பர்கள்**

# முதலாம் ஆண்டு

# நினைவஞ்சலி



கண்ணில்:
24.04.1958

கனவில்:
01.03.2023

திருமதி **S.திலகம்** அவர்கள்

(Rtd. Assistant Registrar, A.U, CDM)

**குடும்ப விளக்காய் பிறந்து !**
**குத்து விளக்காய் வாழ்ந்து !!**
**குல விளக்காய் மறைந்தாய் !!!**

நீங்கா நினைவுகளுடன்:

கணவர்: **T.கல்யாணராமன் மற்றும் உறவும், நட்பும்**

சாரதாராம் வைகுந்தம் அப்பார்ட்மெண்ட்,
38/17 - S 2, கமலீஸ்வரன் கோயில் தெரு, சிதம்பரம், செல்: 9442866105.

பிரிண்டர்ஸ் 04144 - 223338, CDM

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் :
02–10–1936

மறைவு :
05–02–2024

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பண்ணைப்பட்டு கிராமம் தெய்வத்திரு. S. இராமகிருஷ்ணன் பிள்ளை அவர்களின் மனைவியும் எங்கள் தாயாருமாகிய

## திருமதி. R. அழகம்மை அம்மாள்

அவர்கள் (பூர்வீகம், K. ஆடூர்) 05–02–2024 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்

**மகன்கள் – மருமகள்கள்**

**V. ரேவதி** W/o (லேட்) **R. வேணுகோபாலன்**

**N. ஞானாம்பிகை** W/o (லேட்) **R. நடராஜன்**

**R. முருகேசன் - வசந்தா**

**R. கார்த்திகேயன் - தமிழ்ச்செல்வி**

**R. சண்முகசுந்தரம் - அருவிக்கொடி**
பெருங்களத்தூர்

**பேரன் - பேத்திகள்**

**கொள்ளு பேரன் - கொள்ளு பேத்திகள்**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் :
20–06–1927

மறைவு :
24–02–2024

## திருமதி. A. நீலாம்பாள்

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீ. ஆடூர் கிராமத்தில் வசித்து வந்த தெய்வத்திரு. சுராந்துட C. ஆதிமூலம் பிள்ளை அவர்களின் துணைவியாரும், A. கலைச்செல்வி, A. செந்தில்குமார் இவர்களது தாயாருமான திருமதி. **A. நீலாம்பாள்** மாசி மாதம் 12–ஆம் தேதி (24–02–2024) சனிக்கிழமை காலை 6 மணியளவில் கூடுவாஞ்சேரியில் தனது மகன் இல்லத்தில் சிவலோக பதவி அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மகள் : **A. கலைச்செல்வி** மகன் : **A. செந்தில்குமார்,** Mobile : 94441 06362

மருமகன் : **K. நாகராஜன்** மருமகள் : **S. அம்சவல்லி**

பெயரன்கள், பெயர்த்திகள்.

| | | |
|---|---|---|
| **S. முத்துக்குமார்** (ZOHO) | - | **V. சுகுணா** |
| **N. பிரபாகரன்** (TNEB) | – | **P. கற்பகம்** |
| **N. சியாமளாதேவி** | – | **S. முத்தையன்** |
| **G. கல்பனா** | – | **G. கார்த்திக்** |

மற்றும் **உற்றார், உறவினர்.**

# நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் : 15.01.1952

மறைவு : 12.02.2020

## திரு. J.P. (எ) கோ.ஜெயபிரகாஷ் பிள்ளை

J.P. பழமண்டி, போஸ்ட் மாஸ்டர் (ஓய்வு)

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், தருமபுரம்

தெய்வத்திரு. **க. கோவிந்தராஜ் பிள்ளை** – தெய்வத்திருமதி. **கோ. சாரதாம்பாள்**

அவர்களின் மூத்த குமாரரும், திருமதி. **J. மாலா** அவர்களின் கணவருமான

திரு. J.P. (எ) **கோ.ஜெயபிரகாஷ் பிள்ளை** அவர்களின்

நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி

*என்றும் அவர்கள் நினைவில் வாழும்...*

மகன் : **J. பிரேம்குமார்,** M.C.A
Software Engineer, (U.S.A)

மருமகள் : திருமதி. **P. சிந்துஜா,** B.C.A

பேத்திகள் : **P. ஹரிணி, P. யாழினி**

மகள் : **P. சீத்தா** (எ) **மூகாம்பிகை,** D. Pharm., M.B.A.
தி. பெஸ்ட் மெடிக்கல்.

மருமகன் : **K. பிரகாஷ்,** D. Agri
சக்தி சுகர்ஸ், காரைக்குடி

பேரன் : **P. ராகுல்** (எ) **அஸ்வின்குமார்**

# கண்ணீர் அஞ்சலி



உதித்தது :
29–07–1945

உதிர்ந்தது :
14–02–2024

திரு. **ந. இராமானுஜம்**, M.A. M.Ed.,

மாவட்டக் கல்வி அலுவலர் (ஓய்வு)

கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டம் குச்சிப்பாளையம் கிராமம் பூர்வீகம், தெய்வத்திரு. நடனசபாபதி – மீனாட்சி தம்பதியினரின் இளைய மகன் சிதம்பரம் சாரதாராம் நகரில் வசித்த திரு. **ந. இராமானுஜம் பிள்ளை,** மாவட்டக்கல்வி அலுவலர் (ஓய்வு), (கீரப்பாளையம் ஒன்றிய கார்காத்தார் சங்க மேனாள் தலைவர் மற்றும் கடலூர் மண்டல மேனாள் செயலாளர் அவர்கள் 14–02–2024 புதன் மாலை இறைவனடி அடைந்தார்கள். என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இரா. சிவகாமசுந்தரி**

**இரா. முத்து வேலாயுதம்**

**ந. ஹரிப்ரியா**

**மு. ஹரி நிஷாந்த்**

தொடர்பு எண் : 9842540910

**Posted at Pathrikachanel, Egmore**
**RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24**
**Date of Publication : 15th of Every Month**
**15th / 16th March 2024**

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple




Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**